விலை : 20.00
பக்கங்கள்: பதினாறு+பதினாறு

Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 29 ஞாயிற்றுக்கிழமை (15.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 331

## எம்மில் சிலர் உயிரிழந்தாலும் போராட்டத்தை கைவிடோம்!

### பிணமாகவேனும் விடுதலை பெறுவோம்; உண்ணாநிலையிலும் கைதிகள் உருக்கம்

(யாழ்ப்பாணம்)

எங்களில் சிலர் உயிரிழந்தாலும் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தமிழ் அரசியல் கைதிகள் உறுதியுடன் கூறியுள்ளனர். நிபந்தனையின்றிய விடுதலையை வலியுறுத்தி இன்று எட்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் கைதிகள் ஈடுபட்டு வருகின்ற நிலையில் பலரின் உடல்நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே கைதிகள் தமக்கு தீர்க்கமான முடிவு கிடைக்கும் வரையில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டாலும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தெரிவித்துள்ளனர்.

நாங்கள் இன்று நேற்று மட்டுமல்ல, பல வருடங்களாகவே நிபந்தனையின்றிய விடுதலையை வேண்டி போராடி வருகின்றோம்.

ஆனால் எமது போராட்டத்துக்

15ஆம் பக்கம் பார்க்க

## என்மகனைத் தேடி அலைகையில் தமிழ் அதிகாரிகள் பலர் அலட்சியம்

### வேதனை ஏற்படுவதாக தாய் கதறியழுகை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரச அதிகாரிகளே எம்மை அலட்சியமாக நடத்தினால், சிங்கள அதிகாரிகள் மட்டும் எங்களுக்கு மரியாதையா தருவார்கள்? என காணாமல் போகச் செய்யப்பட்ட மகனின் தாயார் ஒருவர் கதறியழுது தெரிவித்துள்ளார்.

நல்லூரில் உள்ள ஐ.நா அலுவலகம் முன்பாக கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற போராட்டத்தின் போதே அந்த தாய் அரச அதிகாரிகள் தம்மை நடத்தும் விதம் தொடர்பில் அழுகையுடன் தெரிவித்தார்.

இது தொடர்பில் குறித்த தாய் மேலும் கூறுகையில்,

கந்தசாமி சிறிதரபவன் எனும் பெயருடைய எனது கணவனை 1987 ஆண்டு மார்கழி மாதம் இந்திய இராணுவம் பலாலியில் வைத்து

15ஆம் பக்கம் பார்க்க

### ஐ.எஸ்.ஐ.எஸ் வெறியாட்டம்

## கொலைக்களமானது பாரிஸ்

### 160 பேர் பலி; அவசரநிலை பிரகடனம்



(விரிவான செய்தி உள்ளே)

## இலங்.வருகிறார் சமந்தா பவர்

(கொழும்பு)

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவரும், அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை வகுப்பாளர்களில் முக்கியமானவருமான சமந்தா பவர் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புதுடில்லியில் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள உலகில் பெண்கள் எனும் தலைப்பிலான மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு செல்லவுள்ள அவர், தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.

### 30க்கும் மேற்பட்ட கைதிகளுக்கு

## சிறுநீரகம் பாதிப்பு!

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் இன்றுடன் எட்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் நிலையில் 30க்கும் மேற்பட்ட கைதிகளுக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்ப



(விரிவான செய்தி உள்ளே)

யமானவருமான சமந்தா பவர் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புதுடில்லியில் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள உலகில் பெண்கள் எனும் தலைப்பிலான மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு செல்லவுள்ள அவர், தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் அவர் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (செ-12)

# பாதிப்பு!

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் இன்றுடன் எட்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் நிலையில் 30க்கும் மேற்பட்ட கைதிகளுக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அவர்கள் மேலும் அவதியுற்று வருவதாக அறிய முடிகின்றது.

எவ்வித விசாரணைகளுமின்றி பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடு

15ஆம் பக்கம் பார்க்க

# உயிர் ஆபத்தில் கைதிகள்; நாளைவரை தாமதிக்காதீர்

## விரைந்து செயற்படுமாறு ஜனாதிபதிக்கு முதலமைச்சர் விக்கி அவசர கடிதம்

(கொழும்பு)

உண்ணாவிரதமிருக்கும் தமிழ அரசியல் கைதிகளின் நிலை மிகவும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளதுடன், உயிராபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற எண்ணம் எம்மிடத்தில் உள்ளது.

இது தொடர்பாக நாளை திங்கட்கிழமை வரை காத்திருக்காது, விரைந்து செயற்படுமாறு வடக்கு முதல்வர் ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசர கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீண்ட ஆண்டுகளாக எவ்வித காரணங்களுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலையை இன்று வரை துரிதப்படுத்தாமல் உள்ளமை கவலையளித்தாலும்,

தாங்கள், நாளை திங்கள் கிழமை தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் முழுமையான முடிவு தருவதாக எமது சந்திப்பில் உறுதிப்படுத்தினாலும், அந்த நாட்கள் வருவதற்குள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு உயிராபத்து ஏற்படுமோ என்ற மன பயம் உள்ளது.

நீங்கள் வழங்கிய திங்கள் என்ற முடிவை விரைவுபடுத்தி அதற்கு முன்னதாக விசேட அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் விரைந்து முடிவெடுங்கள்.

நீங்கள் முன்னர் விடுதலை

15ஆம் பக்கம் பார்க்க

# வடக்கெங்கும் வெள்ள அனர்த்தம்

## மூவாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக வடக்கின் அனைத்து மாவட்டங்களும் வெள்ளத்தில் மிதக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் சுமார் மூவாயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மாவட்ட செயலகங்களின புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

கிளிநொச்சி மாவட்டமே அதிக பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளது. வெள்ளம் அடித்து சென்றதில் ஒரு

15ஆம் பக்கம் பார்க்க




# கைதிகளின் விடுதலை நியாயமானதே!



## சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுவது அநீதியானதல்ல என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

# கடும் மழை தொடரும்!

(யாழ்ப்பாணம்)

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டிருந்த புயல் அச்சுறுத்தலானது தாழமுக்கமாக மாறியுள்ளது.

இதனால் நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ந்தும் 24 மணித்தியாலத்துக்கு கடும் மழை பெய்யக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு கிழக்கு மற்றும் தென் கடல் பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளை தவிர்த்து கொள்ளுமாறு காலநிலை அவதான நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது. இதனிடையே நில

15ஆம் பக்கம் பார்க்க

## கைதிகள் விடுதலை; கவனயீர்ப்பு நாளை

(யாழ்ப்பாணம்)

சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப் போராட்டத்தில்,

காலை 8 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் ஒன்றுகூடி அங்கிருந்து கோவில் வீதியில் அமைந்துள்ள ஐ.நா அலுவலகத்தின் முன்னால் சென்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இப் போராட்டத்தில் அரசியல் கைதிகளின் பெற்றோர் மற்றும் கைதிகளின் விடுதலைக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (செ-9)

## விஜயதாஸ ராஜபக்ஷவை பதவியிலிருந்து நீக்குங்கள்

### சரத் பொன்சேகா கோரிக்கை



(கொழும்பு)

நல்லாட்சிக்கு எதிரான கருத்துக்களை கொண்டிருக்கும் நீதிய மைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரியுள்ளார்.

ஊழல்வாதிகள் மீது அரசாங்கம் நடவடிக்கையை முன்னெடுக்கும் போது அதனை மறைக்க விஜயதாஸ முயல்வதாக சரத்பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே நல்லாட்சிக்கு எதிராக செயற்படும் அவரை பதவியில் இருந்து நீக்கி ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று பொன்சேகா கோரியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் வாக்குகளால் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வரமுடியாது என்ற அடிப்படையில் தற்போது அவர் ராஜபக்ஷவினருக்கு வெள்ளையடிப்பதாக சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது, ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்காக 2000 மில்லியன் ரூபாய்கள் திரட்டப்பட்டதாக விஜயதாஸ ராஜபக்ஷ சுமத்தியுள்ள குற்றச்சாட்டை நிராகரித்துள்ள சரத் பொன்சேகா, 250 மில்லியன் ரூபாய்களே திரட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## உரும்பிராயில் திருட்டு முயற்சி

(மானிப்பாய்)

மானிப்பாய் வீதியில் உரும்பிராய் சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு திருட்டு முயற்சி ஒன்று இடம்பெற்றுள்ளதாக கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் உரும்பிராய் சந்திக்கு அண்மையாக உள்ள வீடொன்றின்பின்பக்ககதவுவழியாகஉள்ளே புகுந்த திருடர்கள் வீட்டினுள் தேடுதல் நடத்தியும் ஒன்றும் கிடைக்காத போது வீட்டின் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும், ஆட்டோவையும் அபகரிக்கும் நோக்குடன் வீட்டினுள் இருந்த வாகனங்களின் திறப்பினை எடுத்து வந்த போதிலும் ஆட்டோவை கொண்டு செல்ல முடியவில்லை.

மோட்டார் சைக்கிளை கொண்டு சென்ற திருடர்கள் குறித்த வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுச் சென்றுள்ளனர். சத்தம் கேட்டு எழுந்த வீட்டின் உரிமையாளர் எழுந்து பார்த்த போது கதவு திறந்து இருப்பதையும் மோட்டார் சைக்கிள் காணாமல் போனதையும் அறிந்து உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்து தேடுதல் நடத்திய பொலிஸார் குறித்த வீட்டுக்கு சிறிது தூரத்தில் மோட்டார் சைக்கிள் அநாதரவாக நிற்பதை கண்டுபிடித்து வீட்டாரிடம் ஒப்படைத்ததோடு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் குறித்த வீட்டில் பெறுமதியான பொருட்கள் எவையும் திருடப்படவில்லை.

இதேவேளை உரும்பிராய் சிவகுல வீதியில் உள்ள மற்றொரு வீட்டில் கடந்த 12 ஆம் திகதி 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆடொன்றும் திருட்டுப் போயுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக உரும்பிராய் பகுதியில் திருட்டு அதிகமாக இடம்பெறுவதால்பொலிஸார் இரவு வேளைகளில் கண்காணிப்பில் ஈடுபடவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-12)

## அனர்த்த உதவிகள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த மழையின் காரணமாக வடக்கின்பலபிரதேசங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் யாழ்.மாவட்ட தலைவரும்பாராளுமன்றஉறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சிமாவட்டங்களின் அரச அதிபர்களினூடாக பாதிப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு வேண்டிய உதவிகள் என்பவற்றை ஆராய்ந்து அறிக்கை ஒன்றினை பெற்றுக்கொள்ளவுள்ளதுடன்,

அவ்வறிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக வேண்டிய உதவிகளை செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். (செ-12)

## எமது உறவுகளை மீட்டெடுக்க ஐ.நாவின் விசாரணையை நம்புகிறோம்

### மட்டக்களப்பில் 600 பேரின் சாட்சியங்கள் பதிவு



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பில் கண்டறிவதற்காக வருகைதந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முற்பகல் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

மட்டக்களப்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு விஜயம் செய்த அவர்களில் ஒரு குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேபோன்று மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்களையும் சந்தித்து இதன்போது கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து இருந்து காணாமல்போன சுமார் 600பேரின் உறவினர்கள் கலந்துகொண்டதுடன் தமது நிலையையும் எடுத்துக்கூறினர்.

காணாமல்போன தமது உறவினர்களை கண்டுபிடிப்பதற்கு தங்களுக்கு உள்ள தற்போதைய ஒரே வழி ஐ.நா.வின் விசாரணை எனவும் இங்கு காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தமது நிலைமையினையும் தமது குழந்தைகளின் நிலைமையினையும்கருத்தில் கொண்டு தமது உறவுகள் காணாமல் போனமை தொடர்பில் உறுதியான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் இங்கு கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது காணாமல் போனவர்களின் உறவினர்கள் கைகளில் காணாமல் போனவர்களின் புகைப்படங்கள் தாங்கியிருந்த பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (செ-12)

## யாழ்.மாவட்டத்தில் நேற்று அதிகூடிய மழைவீழ்ச்சி

### 129.8 மில்லிமீற்றர் பதிவாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நேற்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையான 9 மணித்தியாலங்களில் 129.8 மில்லி மீற்றர் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கிழக்கு பக்கமாக தென் மேற்கு வங்கக்கடலில் சில நாட்களுக்கு முன்னர் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை நேற்றையதினம் வலுவடைந்து தாழமுக்க வலயமாக உருவெடுத்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் மேகமூட்டம் சூழ்ந்து காணப்படுவதுடன்நாளை றுக்கு 150 மில்லி மீற்றர் வரையான மழை வீழ்ச்சி சில தினங்களுக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது

அந்த வகையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றையதினம் காலை 8.30 மணி வரை 73.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அத்துடன் நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து நேற்றைய தினம் மாலை 5.30 மணி வரை 592.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஆனால் கடந்தவருடம் நவம்பர் மாத மொத்த மழை வீழ்ச்சி 496.4 மில்லி மீற்றர் ஆகும். அது கடந்த வருடத்தை விட இந்த வருட மழை வீழ்ச்சியின் அளவு மிக கூடுதலாக காணப்படுகிறது.

மேலும் இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்றைய தினம் மாலை 5.30 மணிவரை 1294.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஆனால் கடந்த வருட மொத்த மழை வீழ்ச்சியாக 1368.6 மில்லி மீற்றரே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

எனவே கடந்த வருடத்தை விட இந்த வருடம் அதி கூடிய மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

எனவே அச்சந்தர்ப்பத்தில் கடற்பகுதியில் கொந்தளிப்பு அபாயகரமானதாக காணப்படும்.

எனவே கடற்தொழிலாளர்கள் மீனவர்கள் நாட்டின் தெற்கு, கிழக்கு மற்றும் வடமேற்கு கடலுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பாதாள உலகக்குழு; புளுமெண்டல் கைது

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த புளுமெண்டல் பெதும் என்றழைக்கப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மாவட்ட சுற்றிவளைப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

குறித்த நபர் பத்து கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மற்றும் 15 துப்பாக்கி ரவைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (செ-12)


**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூரடியில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் உதவி செய்வதற்கு பணிப் பெண் தேவை. ஒவ்வொரு நாளும் வந்து போகலாம். அல்லது தங்கி நின்று வேலை செய்வதற்குரிய வசதியும் உண்டு.

சம்பளம் - 15000/- (2502)

தொடர்புகளுக்கு : 0769283179

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**அதிரடிச் சலுகை**

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல் ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com

# கொலைக்களமானது பாரீஸ் நகரம்

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 160 பேர் பலி

**பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலில் 160 பேர் உயிரிழந்துள்ள அதேவேளை 200 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். பயங்கரவாதிகளின் இந்தத் தாக்குதலை அடுத்து பிரான்ஸில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை அந்நாட்டு ஜனாதிபதி ஹாலந்தே பிறப்பித்தார். மேலும், பிரான்ஸ் எல்லைகளில் சீல் வைத்து பாதுகாப்பை அதிகரிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.**



வடக்கு பாரீஸில் உள்ள காற்பந்து மைதானத்தில் பிரான்ஸ் - ஜேர்மன் அணிகளுக்கு இடையேயான நட்பு ரீதியான காற்பந்து போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது மைதானத்துக்கு வெளியே இரண்டு இடங்களில் குண்டு வெடித்ததாகத் தெரிகிறது.

காற்பந்து நிகழ்ச்சியைக் காண மைதானத்தில் ஜனாதிபதி ஹாலந்தேவும் இருந்துள்ளார்.

**பிணைக் கைதிகள் விடுவிப்பு:**

இதேபோல் பாரீஸில் உள்ள பட்டாக்லான் திரையரங்கிலும் பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அங்கிருந்த பொதுமக்களில் சிலரை பிணைக் கைதிக ளாக பிடித்து வைத்தனர். பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் 2 தீவிர வாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டு, பிணைக் கைதிகள் விடுவிக்கப் பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**யாரும் பொறுப்பேற்க வில்லை:**

பாரீஸ் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. இருப்பினும், தாக்குதல் நடந்த சில நிமிடங்களிலேயே டுவிட்டர் தளத் தில் ஜிகாதிகள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும், சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக பிரான்ஸ் படைகள் தாக்குதல் நடத்தி வருவதற்கும் கண்டனம் தெரிவித்தனர்.

**ஒபாமா கண்டனம்:**

பாரீஸ் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித் துள்ளார். ஒபாமா செய்தியா ளர்கள் சந்திப்பின்போது," பயங்கரவாதிகள் மீண்டும் ஒருமுறை அப்பாவி பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி யுள்ளனர். இத்தாக்குதல் பிரான்ஸ் மீதானது மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்தின் மீதான தாக்குதல்.

இத்தருணத்தில் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஹாலந்தே மிகவும் பரபரப்பாக இருப்பார் என்பதால் இப் போதைக்கு நான் அவருடன் தொலைபேசியில் பேசுவதில்லை என முடிவெடுத்துள்ளேன்.

இருப்பினும், பிரான்ஸ் நாட்டுடன் இணைந்து நீதியை நிலைநாட்ட அமெரிக்கா அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது" என்றார.

**ஐ.நா. பொதுச் செயலாளர் கண்டனம்:**

ஐ.நா. பொதுச் செயலா ளர் பான் கீ மூன், "பாரீஸில் பல இடங்களில் தீவிரவா திகள் தாக்குதல் நடத்தியி ருக்கின்றனர். இதற்கு என் கடுமை யான கண்டனத்தை பதிவு செய்கிறேன், பட்லாகா தியேட்டரின் பிணைக் கைதி களாக பிடித்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி பொது மக்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்துகிறேன்" எனக் கூறியுள்ளார்.

**பிரதமர் மோடி கண்டனம்:**

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் காற்பந்து மைதானம் உட்பட பல்வேறு இடங்க ளில் பயங்கரவாதிகள் நடத் திய தாக்குதல் சம்பவத்துக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித் துள்ளார்.

**பிரணாப் முகர்ஜி கண்டனம்**

பாரீஸில் நடந்துள்ள பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், "பிரான்ஸ் தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறேன். பிரான்ஸ்"க்கு இந்தியா துணை நிற்கும். தாக்குதலில் சிக்கியவர்கள் குடும்பங்களுக்கு எனது இரங்கலைத் தெரிவித் துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், "பாரீஸில் இருந்து வந்துள்ள பயங்கரவாத தாக்குதல் செய்தி மிகுந்த வேதனை அளிப்பதாகவும், அச்சுறுத்துவதாகவும் உள்ளது. பயங்கரவாதிகள் தாக்குதலில் பலியானவர்கள் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மோசமான தருணத்தில் இந்தியா பிரான்ஸ்"க்கு துணை நிற்கும் எனத் தெரிவித்துக் கொள கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தீவிரவாதிகளின் தாக்குதல்களால் இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை

பிரான்ஸ், தலைநகர் பாரீஸில் இடம்பெ ற்ற தீவிரவாத தாக்குதலில் இலங்கையர்கள் எவரும் இதுவரை பாதிக்கப்படவில்லை என பாரீஸில் உள்ள இலங்கை தூதரகம் தெரி வித்துள்ளது.

பாரிஸில் 7 இடங்களில் இடம பெற்ற தொடர் தாக்குதல் சம்பவத்தில் 160 இற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். மேலும பலர் பணய கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிர்ச்சி சம்பவத்தையடுத்து அந்நாட்டில் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி தாக்குதல் சம்ப வத்தில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என பாரிஸ் தூதரகம் தெரிவித்துள்ளதுடன, மேலும் அந்த நாட்டு அதிகாரிகளுடன் தொடர்பில் இருபபதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்நாட்டில் உள்ள இலங்கையர்கள் எவருக்கு அவசர உதவி தேவைப்படுமாயின் +336 205 052 32, +336 770 481 17 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொளளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இனி தேநீரில் சீனி கலப்பதற்குத் தடை

தேநீர் வழங்கும்போதுதேநீருக்குள் சீனியை கலக்காது, பிறிதொரு பாத்திரத்தில் சீனியை வைத்து தேவையான அளவு கலந்து கொள்ளும் விதத்தில், ஹோட்டல்கள்,தேநீர்ச்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகளில் வழங்குவது அவசியம் என சுகாதார அமைச்சின் விசேட சுற்று நிருபம் அறிவித்துள்ளது.

உலக சிறுநீரக நோயாளர் தினத்தை (14.11.2015) முன்னிட்டு , இவ்விசேட விதிகள் நடைமுறைப்படுத்த உள்ளதாக, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பாலித மகிபால தெரிவித்துள்ளார். சுகாதார சேவை, மாவட்ட சுகாதார அத்தியட்சகர்கள்,சுகாதார நிறுவன முக்கியஸ தர்கள் ,சுகாதார வைத்திய அதிகாரிகள்,மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகள் போன்றோருக்கு குறைந்த சீனிபாவனையால் நோயற்ற நாட்டை உருவாக்கும் திட்டமாக, இச்சுற்று நிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் ,சகல அரச நிறுவனாங்களிலும் கூட்டங்கள்,வைபவங்கள், பயிற்சிப் பட்டறைகள்,நிகழ்வுகள் நடத்தப்படும்போது, இடம்பெறும் உபசரிப்புகளில் ,சீனி கலக்காத தேநீர், கோப்பி,பால் கலந்த தேநீர் போன்றன வழங்கப்படல் வேண்டும். அத்துடன் பாடசாலைகள், சிற்றுண்டிச்சாலைகளில் அதிக உப்பற்ற ,அதிக எண்ணெய் கலக்காத ,அதிக சீனி அற்ற உணவு,பானங்கள் வழங்கப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## போலிப் பொலிஸ் பொலிஸாரால் கைது

பொலிஸ் அதிகாரி மற்றும்கலால் அதிகாரி என்று கூறிக்கொண்டு வீதிகளில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு பணம், பொருட்களை கொள்ளையிட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நுகேகொட எம்புல்தெனிய பகுதியில் வைத்து பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். (இ-7)

## பாரீஸில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து பாதுகாப்பைப் பலப்படுத்தியது சிங்கப்பூர்

பாரீஸில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதல்களை அடுத்து தமது பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாக சிங்கப்பூர் அறிவித்துள்ளது.

சிங்கப்பூரின் உள்துறை அமைச்சர் கே.சண்முகம் இதனை அறிவித்துள்ளார்.

பாரீஸ் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது அனுதாபங்களை வெளியிட்டுள்ள அவர், தமது நாட்டுக்கு வருவோர் தொடர்பில் சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல்களை அடுத்து எந்தவொரு நாடும் பாதுகாப்புக்களை பலப்படுத்தாமல் இருக்க முடியாது எனற நிலை ஏற்பட்டுள்ளதாக சண்முகம் தெரிவித்துள்ளார்.(இ-7)


**SB TRAVELS & TOURS (PVT) LTD** SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,300/- | LONDON | 94,300/- |
| MADURAI | 18,600/- | TORONTO | 155,100/- |
| TRICHI | 26,400/- | MALDIVES | 24,100/- |
| BOMBAY | 32,800/- | PARIS | 88,300/- |
| BENGALURE | 30,900/- | NEWYORK | 118,800/- |
| KOCHI | 25,600/- | MELBOURNE | 103,300/- |
| DELHI | 46,800/- | CANTON | 68,900/- |
| MALAYSIA | 33,400/- | PERTH | 93,900/- |
| SINGAPORE | 33,800/- | NARITA | 73,800/- |
| BANGKOK | 31,800/- | AUCKLAND | 109,300/- |
| ONEWAY: CHENNAI - 12,500/- | | SYDNEY | 104,800/- |

*Condition Apply

VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT

(சி-2722)

DUBAI -15,900/- , DOHA -19,800/-, SHARJAH -15,900/-

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83,84,85,86,89,90

நீங்கள் எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் அனைத்து நாடுகளுக்குமான விமானப்பயண டிக்கட்டுகளை உங்கள் கணனியில் இருந்தவாறே இன்றே பதிவு செய்யுங்கள்...!

www.sbairfares.com | www.sbtravels.lk

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280

No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322

NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence


## 4 ஆயிரம் முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம்

### விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தகவல்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள 3,500 முதல் 4000 வரை யிலான முறைப்பாடுகள் தொடர்பிலான விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் 1000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர் சந்தநாத் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்ப்பதற்காக இலஞ்சம் பெற்றுக்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் தற்போது அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

இலக்கம் 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரியிலோ அல்லது 1954 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்புகொண்டு இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளை ஆணைக்குழுவிற்கு அறிவிக்க முடியும் என்றும் ஆணையாளர் நெவில் குருகே மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் முதல் நாளில் இந்தியா சிறப்பாட்டம்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் முடிவில் இந்திய அணி வலுவான நிலையிலுள்ளது.

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் நேற்று ஆரம்பமாகியது.

நாணய சுழற்சியில் வென்றதும் யாரும் எதிர்பார்க்காத விதத்தில் விராட் ஹோலி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்று கணித்திருந்த நிலையில் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் அஸ்வின், ஜடேஜா அசத்தினார்கள். இவர்கள் இருவரும் தலா நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்த, தென்னாபிரிக்கா அணி 214 ஓட்டங்களில் சுருண்டது.

100-வது டெஸ்டில் விளையாடிய டி வில்லியர்ஸ் மட்டும் தாக்குப்பிடித்து 85 ஓட்டங்கள் குவித்தார்.

பின்னர் இந்தியா முதல் இன்னிங்சை தொடங்கியது. தென்னாபிரிக்காவின் ரபாடா, மோர்னே மோர்கல், அபாட் பந்து வீச்சை தவானும், முரளி விஜயும் தாக்குப்பிடிப்பார்களா? என்ற கேள்வி எழுந்தது.

ஆனால், இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக முதல் டெஸ்டின் இரண்டு இன்னிங்சிலும் டக் அவுட் ஆன தவான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

முதல் நாள் ஆட்டம் முடியும் வரை இந்த விக்கெட்டை தென்னாபிரிக்க வீரர்களால் பிரிக்க முடியவில்லை.

தவான் 45 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 28 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா 80 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இன்னும் கைவசம் 10 விக்கெடடுக்கள் உள்ளன. 134 ஓட்டங்கள் தான் முதல் இன்னிங்சில் பின்தங்கிய நிலையில் உள்ளது.

களத்தில் இருக்கும் ஜோடி இன்று காலை சிறப்பாக ஆட்டத்தை தொடங்கினால் இந்தியா முதல் இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் முன்னிலைபெற வாய்ப்புள்ளது. (க)

# வலுவான நிலையில் ஆஸி; போராடுகிறது நியூசிலாந்து



நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் இரண்டாம் நாள் முடிவில் அவுஸ்ரேலிய அணி வலுவான நிலையில் உள்ளதோடு நியூசிலாந்தும் போராட்டத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்தரேலிய அணி 9 விக்கெட் இழப்பிற்கு 559 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டத்தை இடை நிறுத்தியது.

அவுஸ்திரேலியா - நியூசிலாநது கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பெர்த் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த ஆடுகளம் உலகத்திலேயே மிக வேகமான ஆடுகளமாகும்.

நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. முதல் நாள ஆட்டத்தில் வோர்னரின் அதிரடி யான இரட்டை சதத்தால் அவுஸ்திரேலியா அணி 2 விக் கெட் இழப்பிற்கு 416 ஓட்டங்கள் எடுத்தது.

வோர்னர் 244 ஓட்டங்களுடனும், ஸ்மித் 5 ஓட்டங்களுடனும் களத்தில்இருந்தனர். நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கியது.

ஆட்டம் தொடங்கியதுமே மேற்கொண்டு 9 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த நிலையில் வோர்னர் ஆட்டமிழந்தார். ஸ்மித்தும் 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அரங்கு திரும்பினார்.

5-வது விக்கெட்டுக்கு வோக்கும், மார்ஸூம் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அவுஸ்திரேலிய அணி 512 ஓட்டங்கள் எடுத்திருந்த போது இந்த ஜோடி பிரிந்தது. வோக் 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து மார்ஸ் 34 ஓட்டங்களில் அரங்கு திரும்பினார்.

பின்னர் அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்ந்தன. 9 விக்கெட் இழப்பிற்கு 559 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்துவதாக அணித்தலைவர் ஸ்மித் அறிவித்தார். இதனையடுத்து, நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்சை விளையாடியது. அந்த அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக அமைந் தது.

குப்தில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பின்னர் லதாம், வில்லியம்ஸ் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 2 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அந்த அணியின் லதாம் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

வில்லியம்ஸ் 70 ஓட்டங்களுடனும், ரெய்லர் 26 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து அணிக்கு இன்னும் 8 விக்கெட்டுக் கள் கைவசம் உள்ள நிலையில், அவுஸ்திரேலியாவைவிட 419 ஓட்டங்கள்பின் தங்கியுள்ளது. போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# சென்.மேரிஸ் - யங் ஸ்ரரார் இறுதியாட்டம் இன்று





இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் இரண்டாம் பிரிவில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு லெவின் நீயூ யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.


இறுதியாட்டத்துக்கு பிரதம விருத்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ள அதேநேரம் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட பிரதேச செயலாளர் சுகுணரதி கலந்து கொள்ளவுள்ளார். (க)

# மக்களின் உண்மையான முன்னேற்றம் தொழில்நுட்ப முன்னேற்றம் அல்ல!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**மக்களின் உண்மையான முன்னேற்றம் தொழில் நுட்ப ரீதியாக ஏற்படும் முன்னேற்றம் அல்ல எனவும் உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமான நிலையே உண்மையான முன்னேற்றம் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**




உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்று உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் வரையான நடைபயணம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (இ-7)


### வீடு வாடகைக்கு விடப்படும்

Beach Road East kayts இல் சகல வசதியும் கொண்டது. Holiday resort இற்கு உகந்தது. அரச, அரச சார்பற்ற நிறுவனாங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-077 920 6938 (2293)


ஓம் ஸ்ரீ சாயிராம்

### ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி நேசமலர் சின்னத்துரை**

திதி:- பூர்வபட்ச ஏகாதசி



மலர்வு: 17.08.1949
உதிர்வு: 15.11.2006

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்டவர்.

*தடைக்கறகளை படிக்கறகளாக்கி*
*தரணியில் தலைநிமிர வைத்த தங்க அம்மாவே!*
*கண்ணெனக்காத்த கண்மணியே!*
*ஆண்டு ஒன்பது ஆனாலும் - உங்கள்*
*அன்பு முகத்தை மறக்க*
*முடியவில்லையே அம்மா!*
*உங்கள் நினைவுகள் - எம்*
*மனதை விட்டு என்றும் அகலாது நிறைந்திருக்கும்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகர் பெருமானை வேண்டுகிறோம்.

**என்றும் உம் நினைவுடன்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்-021 221 3058**

(2281)


**January 9th of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**

## IELTS

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 &8.5

9th January 2016 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்.



**IELTS பாடங்களை படிப்பிக்கும் அதே வேளை Grammar and Vacabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.**

**வகுப்புக்கள் ஆரம்பம் 16.11.2015**

### COURSE SCHEDULE

Mon, Tues, Wed, Thur
50 Hours
8.30 - 10.30 , 5.00 - 7.00

Saturday & Sunday
Duration 50 Hours
Time 8.30 - 11.00

நீங்கள் U.Kயில் திருமணம் செய்திருந்தால் Visa பெறுவதற்கு British Council லினால் மாதம் ஒருமுறை நடத்தப்படும் IELTS - Life skills பரீட்சையில் சித்தி பெறவேண்டும். ஒரே தடவையில் சித்தியடைந்து B-1 பரீட்சையும் எடுக்கும் அளவுக்கு எமது போதனைகள் அமைகின்றன

## IELTS LIFE SKILLS A1

கடந்த காலங்களில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் City and Guild பரீட்சைக்கு எமது கல்லூரியில் இருந்து தோற்றி 100% பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். அதே போன்று இப்பொழுதும் IELTS Life Skill பரீட்சைக்கு தோற்றி பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

*இன்றே எமது வகுப்புகளில் சேர்த்து பரீட்சையில் சித்தியடையுங்கள்*

**BRITISH COLLEGE OF ENGLISH**

No 192, Navalar Road, Jaffna. (பெருமாளி கோவிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 தொ.பே : 0778803887

(4-2710)


## ராசி பலன்

15.11.2015
(ஐப்பசி 29, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00மணிக்கு,
சதுர்த்தசி பின்னிரவு 1.34மணிவரை
மூலம் முன்னிரவு 7.14மணிவரை
இராகுகாலம் 4.37-6.07மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை
சதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை, ரோகினி | | |
| | | | குரு |
| சந் | சனி<br>புத | சூரி | ராகு<br>செவ்<br>சுக் |

**மீனம்:** தொழில் வளர்ச்சிக்கு முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நம்பிக்கைகள் நடைபெறும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பெரியோரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், பயணங் களால் பலனுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உடல்நலன் சீராகும்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதம் ஏற்படும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் கணக்கம் ஏற்படலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், வருங்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும், விருந்தினர்கள் வருகையுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள்.

# லலித், குகன் வழக்கில் சுனில் எம்.பி. சாட்சியம்

வடபகுதியில் காணாமற்போனவர்கள் அனைவரினதும் விடயத்தில் கடந்த அரசாங்கத்துக்கும் அரசின் புலனாய்வு பிரிவினருக்கும் தொடர்பு இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

லலித், குகன் காணாமற்போன வழக்கு நேற்று முன்தினம் யாழ். நதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் எடுத்துக கொள்ளப்பட்டது.

காணாமற் போனவர்கள் சார்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மக்கள் விடுதலை முன்னணியினர் வடக்கில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு உதவி செய்வதை அடிப்படையாக கொண்டு நாம் இலங்கையர் எனும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் முகாம்களில் உள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கும் காணிகளை மீளப் பெற்றுக்கொடுப்பதற்கும் காணாமற் போனவர்கள் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக் கொடுப்பதை இலகுபடுத்துவதற்கும், வடமாகாணத்தில் சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதற்காகவும் போராடுவதற்குமென நாம் இலங்கையர் எனும் அமைப்பை உருவாக்கினோம்.

அந்த அமைப்பில் அப்போது யாழ். மாவட்டத்தின் மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளராக இருந்த லலித் மூலமாக யாழ்ப்பாணத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு கையெழுத்து போராட்டத்தை 15.11.2010 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த போராட்டத்தில் நான் பங்குபற்றுவதற்காகவும் அது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்காகவும் 14.11.2010 அன்று யாழ்ப்பாணம் வந்திருந்தேன். இங்கு வந்து இப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பத்திரிகையாளர்களை சந்தித்து அவர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கு அன்றைய தினம் பிற்பகல் நான் லலித் உட்பட எனது குழுவினர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பத்திரிகை காரியாலயத்துக்கு சென்று கலந்துரையாடல் நடத்தி வெளியேறிய பின்னர் லலித் என்பவர் சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிள்களில் தங்களை பின்தொடர்வதாக கூறியிருந்தார்கள்.

அதனை தொடர்ந்து தம் பின்னால் வருவதை அவதானித்ததாகவும் கூறினார்.

பின்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனுடைய வீட்டிற்கு சென்று அவருடன்கலந்துரையாடிய வேளையில் 15 பேர் உள்ளடங்கிய ஒரு குழு அவ் இடத்திற்கு வந்து யார் லலித் யார் லலித் என கேட்டு எனக்கும் லலித்துக்கும் அடித்து எமக்கு தலையில் காயத்தை ஏற்படுத்தினார்கள். இதன் பின்னர் நாம் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாடு செய்தோம். பொலிஸார் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததோடு வாக்குமூலத்தையும் பதிவு செய்துகொண்டனர். அதேவேளை எமக்கு தலையில் பாரிய காயம் ஏற்பட்டு சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

மறுநாள் 15.11.2010 அன்று எமது கட்சியும் இயக்கமும் யாழ். நகரின் பேருந்து நிலையத்தில் ஒரு எதிர்ப்பு போராட்டத்தை நடத்தினோம். அதனை தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடத்தினோம்.

அப் போராட்டம் நடந்த வேளை 14.11.2010 அன்று எம்மை தாக்கிய நபர்களும் அதில் இருந்ததை கண்டோம். அவர்கள் சிங்களத்தில் உரையாடினர்.

யாழ்.மாவட்டத்தில் அந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளை இராணுவ புலனாய்வாளர்களினால் பல தடவை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் இதனால் நாம் பல இன்னல்களையும் எதிர்நோக்கியிருந்தோம். அதனால் அன்றைய தினம் எம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் இராணுவ புலனாய்வாளர்கள் தான் என நாம் சந்தேகித்தோம்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்திருந்தும் இதுவரை பொலிஸார் எந்தவொரு நபரையும் கைது செய்யவில்லை, நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

அதே வேளை பாராளுமன்றத்தில் இது தொடர்பாக உரையாற்றி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தும் இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

அந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பல்வேறு விதமான இடையூறுகளை இராணுவ புலனாய்வாளர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை இராணுவத்தினரின் தலையீடு அதிகமாக இருந்தது.

மேலும் 2011 ஆம் ஆண்டு லலித் காணாமற் போன தகவலை அறிந்த போது அவர் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினராக இருக்கவில்லை என தெரிவித்தார்.

அதே வேளை இராணுவத் தரப்பில் குறுக்கு விசாரணையின் போது வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக போராடி வந்த அமைப்புக்கள் நாம் இலங்கையர் அமைப்பு இங்கு செயற்பட்டதை விரும்பவில்லை என்றும் வடபகுதி அமைப்புடன் குறித்த அமைப்பு போட்டியாக செயற்பட்டதால் மக்கள் அவர்களை விரும்பவில்லை என்று கேட்கப்பட்ட போது, சுனில் அதை முற்றிலும் மறுத்ததுடன் வடக்குக்கான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சந்தித்து கலந்துரையாடினோம்.

அவர்கள் எமக்கு பூரண ஆதரவு தந்து ஊக்கமும் அளித்தார்கள் என தெரிவித்தார். (இ-9)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணை அனுமதியும் திறந்தவெளி சிறையும் ஒன்றுதான் - அனந்தி

தமிழ் அரசியல் கைதிகள் பிணையில் செல்ல அனுமதி என்பது திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பது போன்றுதான் உள்ளது. அவர்களின் பிணை நிபந்தனை அவ்வாறு தான் உள்ளது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ்அரசியல் கைதிகள் தொடர உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றநிலையில் அவர்களுடைய போராட்டத்தை சிதைக்கின்ற விதத்திலும் திசைதிருப்புகின்ற விதத்திலும் சில அரசியல்வாதிகள் பொய்யான வாக்குறுதிகளையும் அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றனர்.

உண்ணாவிரதம் இருப்பவர்களை சிறையில் சென்று சந்திக்கின்ற அரசியல்வாதிகள் போலியான வாக்குறுதிகளை வழங்கி உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோருவதாக அறியமுடிகின்றது. நீண்ட காலங்களாகவே தமிழ் அரசியல் கைதிகள் நாட்டில் உள்ள பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களது விடுதலை தொடர்பில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போதும் அதன் பலன் முழுமை அடைந்ததாக இல்லை.

சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு பலவருடங்களாக சித்திரவதைகளை அனுபவித்து காலத்துக்கு காலம் சிறைச்சாலைகளில் கட்டவிழ்த்து விடப்படும் பேரினவாதிகளின் இனக்கலவரத்தில் தப்பிப்பிழைத்து போதிய ஊட்டச்சத்தற்ற மட்டுப்படுத்தப்பட்ட உணவுடன் உளவியல் தாக்கத்திற்கு ஆளாகி நடைப்பிணங்களாக வாழ்ந்துவரும் இவர்களை அரசு மனிதாபிமான ரீதியில் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கவேண்டும். கடந்த ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் முடிவான பிரேரணையில் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. நல்லாட்சி முகமூடியை அணிந்து கொண்டு சர்வதேசத்திற்கு ஒரு முகமும் தமிழர்களிற்கு ஒரு முகமும் காட்டும் இவ்வரசின் உண்மை முகத்தை உலகம் வெகுவிரைவில் அறிந்து கொள்ளும்.

அரசியல் கைதிகள் விடயத்தில் சிறிய விட்டுக் கொடுப்பைக் கூட நல்லெண்ண அடிப்படையில் வெளிப்படுத்தாத அரசாங்கம் தமிழ் மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வு விடயத்தில் எவ்வாறு செயற்படப் போகின்றது.? என அவர் மேலும் தெரிவித்தார். (இ -4)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)


தளர்த்தப்பட்ட விசேட நிபந்தனைகளுக்கமைவாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கல்வி வலயங்களில் காணப்படும் விசேட கல்வி, மனைப் பொருளியல், தகவல் தொழில்நுட்பம், உடற் கல்வி, முறைசாராக் கல்வி, கணனி வளநிலைப் போதனாசிரியர், இரண்டாம் மொழி சிங்களம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை 1, 2-1,2-11 ஆகிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களையும் தகைமைகளையும் நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளரூடாக எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-5)

# ஆலயத்தில் திருட்டு



ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்த திருடர்கள் ஆலய களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 10 ஆயிரம் ரூபா பணத்தினை திருடிச் சென்றுள்ள சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி, கரணவாய் கிழக்கு புவனேஸ்வரி உச்சிலாம்பாள் ஆலயத்திலே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நடைபெற்று முடிந்த கேதார கௌரி விரதத்திற்கான காப்பு நூல் கட்டுவதற்காக பக்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத் தொகையே இவ்வாறு திருடப்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆலயத்தில் சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டுள்ளதாகவும் கமராவில் திருட்டுச் சம்பவம் தொடர்பான பதிவுகள் பதியப்பட்டுள்ளது எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது. (இ-5-60)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசில்தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசில் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி. அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கவின் கலைகள் பயிலமாக இருந்து கல்லூரியாக தரமுயர்த்தப்பட்ட பின்னர் இடம்பெறுகின்ற ஏழாவது பரிசில் தினமாக அமைகின்ற இன்றைய நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் நடராஜா தெய்வேந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருள்பணி. எம்.ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

பரிசில் தின கலை நிகழ்வுகளாக நடனங்கள், வீணை, மிருதங்க, தாள, வாத்திய கச்சேரி, கோலாட்டம், பல்லியம் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

# இரத்ததான முகாம்

சுன்னாகம் கேரிச்தே றோட்டறிக் கழகமும் சுன்னாகம் அந்தோனியார் இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் இரத்த தானமுகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு சுன்னாகம் அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இரத்த தான முகாமில் குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்யுமாறு நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)





உயர் கல்வியின் புதிய போக்குகள் எனும் தலைப்பில் பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இரண்டு நாட்கள் செயலமர்வின் ஆரம்ப வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் வாதுவ ப்ளுவோட்டர் ஹோட்டலில் இடம்பெற்றது.

## தமிழ் நாட்டில் மட்டும்

# இலங்கை படையினருக்கு பயிற்சி அளிக்கவில்லை!

### இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைப் படையினருக்கு தமிழ் நாட்டில் பயிற்சிகள் அளிக்கப்படவில்லை என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டின் குன்னூரில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் கல்லூரிக்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் நேற்று முன்தினம் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, செய்தியாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், இலங்கை படையினருக்கு இந்தியா தொடர்ந்தும் பயிற்சிகளை அளித்து வருகிறது.

பல்வேறு இடங்களிலும் இலங்கை படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டாலும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு எந்தப் பயிற்சியும் அளிக்கப்படவில்லை" என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இலங்கை படைகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுவதற்கு அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை நடத்தியதையடுத்தே, இங்கு பயிற்சிகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பீ.பி.ஜயசுந்தரவுக்கு உயர்பதவி வழங்கும் எஸ்.பி.திஸாநாயக்க

திறைசேரியின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்திரவிற்கு சமூக நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவினால் உயர் பதவியொன்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் பல்வேறு ஊழல் மோசடிகளுடன் பீ.பி.ஜயசுந்தரவிற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சமுர்த்தி மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக ஜயசுந்தரவை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ஆட்சிக் காலத்தில் நிதி அமைச்சின் செயலாளராகவும் பீ.பி. ஜயசுந்தர செயற்பட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் நிதி அமைச்சில் பாரியளவில் மோசடிகள் ஊழல்கள் இடம் பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஓர் நிலையில் ஜயசுந்தர தற்போதைய அரசாங்கத்தில் உயர் பதவி வழங்கப்பட்டால் எதிர்ப்புக்கள் வெளியிடப்படலாம் என சுட்டிக்காட்டப்படுகிறது. (இ-7)

# 80 மில்லியன் பெறுமதியான 100 புலமைப்பரிசில்களை வழங்கும் விசேட திட்டம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்




(யாழ்ப்பாணம்)

உயர்தர கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களின் இசட் புள்ளி [Z-score] அடிப்படையில் 80 மில்லியன் பெறுமதியான நூறு புலமைப் பரிசில்களை வழங்குகின்ற விசேட செயற்றிட்டம் ஒன்றினை BCAS campus அறிமுகம் செய்துள்ளது. மாணவர் சக்தி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்புலமைப்பரிசில் திட்டம் மூலமாக பிரித்தானிய பட்டப்படிப்புக்களை இலங்கையில் முழுமையாக பூர்த்தி செய்ய முடியுமென மேற்படி கம்பசின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், தலைவருமான அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

யாழ். ஞானம்ஸ் விடுதியில் நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்தர பரீட்சையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியை பெறுகின்ற போதிலும் அதில் ஏறத்தாழ முப்பது வீதத்திற்கும் குறைவானவர்களே அரச பல்கலைக்கழகங்களில் அந்த வாய்ப்புக்களை பெறுகின்றனர். ஏனைய எழுபது வீதமானவர்கள் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

இதற்கான தீர்வாக தனியார் உயர் கல்வித்துறையில் வெளிநாட்டு பட்டப்படிப்புக்களை தொடர்வதற்கான வாயப்புக்கள் ஏராளமாக நம் நாட்டில் காணப்படுகின்ற போதிலும் அதற்கான பெருந்தொகை நிதிச்செலவு என்பது திறமையான பல மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக அமைந்துள்ளன. மாணவர்களின் இந்த சிக்கல் நிலைகளை கருத்திற்கொண்டே இசட் புள்ளியை அடிப்படையாக கொண்ட புலமைப் பரிசில் திட்டம் எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் Civil Engineering, Quantity Surveying, Computing, Bio Medical Science, Law, business Information System, Business Management ஆகிய துறைகளில் மூன்று பட்டப்படிப்பு பாட நெறிகளை இலவசமாக தொடர்வதற்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த புலமை பரிசில்களுக்கான விண்ணப்ப படிவங்களை www.bcas.lk என்ற இணையத்தள முகவரியிலும், அல்லது வார இறுதி நாட்களில் வெளியாகும் பத்திரிகைகளிலும் பார்வையிட முடியும்.

மேலதிக தகவல்களை 0765204505 என்ற தொலைபேசிக்கு பெயர் முகவரிகளை குறுந்தகவல் அனுப்புவதன் மூலம் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான ஏ.சாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 43 செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/1594 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28 செவ்.7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்BA folowing<br>தொ.இ: G/3105 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 47 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் : BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/1597 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 45 செவ் 7ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L தாதி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3109 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSC,MSC/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1628 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 45<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3119 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 32 செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B-A ஆசிரியர்<br>தொ.இ: B/1631 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 39 செவ் 7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BBA<br>தொ.இ: G/3125 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-0217201005,0212215434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

# இனப் பிரச்சினையை ஆயுதப் போராட்டத்துடன் முடிவுக்குக் கொண்டுவரும் சிங்கள ஆட்சியாளர்கள்



கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலான இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென்று நம்பியிருக்கும் தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் ஏமாற்றமே மிஞ்சப்போகின்றது என்கின்ற செய்தியினை மிகத் தெளிவாக சொல்லியிருக்கின்றது அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த அரசாங்கத்தின் செயற்பாடுகள்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது காலத்துக்கு காலம் வெவ்வேறுபட்ட கோணங்களில் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை மையப்பொருளாகக் கொண்டு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இது சிங்களத் தலைமைகளும் தமிழ் ,முஸ்லீம் தலைமைகளும் மறந்துவிடக் கூடாத முக்கிய விடயமாகும்.

தமிழர்களின் விடுதலை தாகம் அவர்களை பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகையான போராட்டங்களுக்கு தூண்டியதுடன் அதன் ஊடாக தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்கள் எண்ணிலடங்காதவையாகும்.

இலங்கை வரலாற்றில் தமிழ மக்களின் போராட்டம் வெறுமனே ஆயுதத்தை நம்பியதாக இருந்ததில்லை.

கடந்த முப்பதாண்டு கால ஆயுதப் போராட்டத்தின் முடிவு என்பது தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலக அரங்கிற்கு கொண்டு சென்றதே தவிர, அது தமிழ் மக்களுக்கும் சிங்கள பெரும்பான்மை அரசிற்கும் இடையிலான உரிமைப் போராட்டத்திற்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தரவில்லை.

மாறாக தமிழ்மக்களை இன்னுமொருபோராட்ட தளத்திற்கு தள்ளியுள்ளது. எனவே ஆயுதப் போராட்டத்தின் முடிவு என்பது தமிழ் மக்களை தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கான இன்னுமொரு போராட்ட களத்திற்கு இழுத்துச் சென்றுள்ளது என்பதே யதார்த்தமானதாகும்.

இங்கு போராட்ட களத்திற்கு இழுத்துச் செல்லுதல் என்பது திட்டமிட்டு நடத்தப்படுகின்ற ஒரு விடயமல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அது தானாக உருவெடுக்கின்ற ஒரு விடயமாகும். அதாவது தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறு அமைப்புக்களோ தமிழ் மக்களின் இனப்பிரச்சினை விடயத்திற்கு நியாயமான தீர்வு ஒன்றை பெறாமல் அரசாங்கத்துடன் இணங்கிச் செல்வதோ அல்லது அரசாங்கத்தை காப்பாற்றுவதோ முடியாத காரியமாகும்.

ஏனெனில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையோ அல்லது வேறு தமிழ் அமைப்புக்களையோ நம்பிச் செயற்படமாட்டார்கள்.

ஒரு கால எல்லைக்கு அப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான தீர்வினை பெறுவதற்கான வழிகளை தாங்களே ஏற்படுத்திக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்பதே வரலாறு.

இவ்வாறான சூழ்நிலையொன்றின் ஊடாகவே தந்தை செல்வாவிடமிருந்த போராட்டம் பிரபாகரனின் கைகளுக்கு அப்போது மாற்றப்பட்டதுடன், அது பின்னர் ஆயுதப் போராட்டமாக தீவிரமடைந்திருந்தது.

அப்போது இருந்த தமிழ் தலைமைகள் கூட அதனை நம்பி பயணிக்க வேண்டிய சூழ்நிலை சிங்கள தேசத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையை பொறுத்தமட்டில் ஒரே வரலாறு மீண்டும் மீண்டும் திரும்ப திரும்ப எழுதப்படுவதாகவே தோன்றுகின்றது.

அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் இனப்பிரச்சினை விடயத்தை வெறுமனே ஒரு ஆயுதப்போராட்டத்துடன் முடித்துக்கொண்ட சிங்கள தேசம் அதற்கு அப்பால் சிந்திக்க தவறியுள்ளது என்றே கூறவேண்டும்.

சர்வதேசத்தின் அழுத்தம் அரசியல் மாற்றம் போன்ற விடயங்களின் ஊடாக நாட்டில் நல்லிணக்கம் எற்படுத்தப்படுவதான தோற்றம் உருவாக்கப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் சிங்கள தேசத்தில் உள்ள ஒரு சில புத்திஜீவிகளைத் தவிர ஏனையவர்கள் நாட்டில் எந்தப்பிரச்சினையும் இல்லை.

நாட்டில் யுத்தம் என்ற மிகப் பெரிய பிரச்சினை இருந்தது அது தற்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்போது எல்லா மக்களும் இலங்கையில் நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்ற கருத்தியலையே கொண்டுள்ளனர்.

அதாவது இந்த நாட்டிற்கு பிரச்சினையாக இருந்தது பிரபாகரன் என்பவரும் அவருடன் இருந்த படைகளுமே தவிர, தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வோ உரிமைகளோ அல்ல என்பதை மீண்டும் மீண்டும் சிங்களதேசம் நிறுவ எத்தனிக்கின்றது.

தமிழ் மக்களை பொறுத்தமட்டில் பிரபாகரன் என்பவர் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு குறியீடே தவிர, பிரபாகரன் முடிந்த முடிவல்ல என்பதை யுத்தத்திற்கு பின்னரான தமிழர்களின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டியுள்ளது.

அதாவது இலங்கையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரான யுத்த எச்சங்கள் இன்று தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய போராட்டத்திற்கான மையப்பொருளாக மாற்றமடைந்துள்ளது.

மிகமுக்கியமாக யுத்தக் குற்றச்சாட்டுக்கள் காணாமற் போனோர், முன்னாள் போராளிகள், சரணடைந்தோர், அரசியல் கைதிகள், நாட்டில் நடைபெற்ற படுகொலைகள், வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் பல மனிதவுரிமை மீறல்கள் என்பன மீண்டும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மையப்பொருளாக மாற்றமடைந்துள்ளதுடன்,

இதன் ஊடாக இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தங்களுக்கான அதிகாரப் பகிர்வையும் தமிழ் மக்களை தமிழ் மக்களே ஆளுகின்ற உரிமையையும் பெற்றுக்கொள்வதற்கான நியாயப்பாடுகளை நிறுவுவதற்கு மீண்டும் தயாராகி வருகின்றனர்.

எனவே தமிழர்களின் போராட்டத்திற்கான அனைத்து காரணிகளையும் அப்படியே வைத்துவிட்டு நாட்டில் நல்லிணக்கத்தையோ அல்லது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையையோ கட்டியெழுப்ப யாராலும் முடியாது.

என்னைப் பொறுத்தமட்டில் இலங்கையின் இனப்பிரச்சினைத தீர்வுக்கு இரண்டே விடயங்கள் தான் உண்டு. ஒன்று கொஞ்சம் கொஞ்சமாக மாற்றத்தை கொண்டு வர வேண்டுமென்று நினைக்கின்ற அரசு,தமிழர்களின் போராட்ட மையப்புள்ளியாக இருக்கின்ற பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வு காண்பது, அதனை தொடர்ந்து தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரப்பகிர்வை வழங்குவது.

இரண்டாவது தீர்வு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வைக் கண்டுகொள்ளட்டும் என்று கூறி உடனடியாகவே தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு அதிகாரப் பகிர்வினை மேற்கொள்வது.

இவை இரண்டுமே இப்போதைக்கு இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு சிறந்த வழிகளாகவுள்ளது.

ஆனால் இலங்கை அரசாங்கமும் சர்வதேசமும் தமிழர்களின் பிரச்சினைக்கு படிப்படியாக தீர்வைக் காண்பது என்ற முதலாவது நிலைப்பாட்டிலே உள்ளதுடன், அதற்கான வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது.

அதாவது சிங்கள பெரும்பான்மையின மக்களின் ஆதரவுடன் அந்தமக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி தமிழர் களின் பிரச்சினைக்கு படிப்படியான தீர்வை வழங்குவது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகவுள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டில் அரசாங்கத்தினால் ஒரு துளி கூட முன்னேறமுடியவில்லை என்பதே யதார்த்தமாகவுள்ளது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினை என்பது ரணில் விக்கிரமசிங்க கூறியதைப்போன்று குரங்கிற்கு புண் முளைத்ததைபோன்றது.

காயத்தை முழுமையாக சுகப்படுத்தாவிட்டால் அது மீண்டும் பெரிதாகும் என்பதுடன், குரங்கு இறந்துபோய்விடும்.

எனவே இல்ங்கை என்ற குரங்கிற்கு ஏற்பட்ட புண்தான் தமிழ்மக்களின் இனப்பிரச்சினை அதனை முழுமையாக சுகப்படுத்த வேண்டுமே தவிர அதனை அரைகுறையாக விடக்கூடாது.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் சிங்களப் பெரும்பான்மை ஆதரவுடன் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு வழங்குவது என்பது குரங்கிற்கு பால் ஊத்துவதற்கு சமனானது.

இன்று தமிழர்கள் தங்களது போராட்டத்தின் வடிவமாக ஜனநாயக ரீதியான உண்ணாவிரதம் கண்டன ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்பு போன்றவற்றை கடைப்பிடிக்க தொடங்கியுள்ளனர்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வாறான போராட்டங்களை செய்தார்களோ, அதே வகையான போராட்டங்களை முப்பது வருட ஆயுதப் போராட்டத்திற்கு பின்னர் மீண்டும் நடத்த தொடங்கியுள்ளனர்.

எனவே முப்பது வருடத்திற்கு பின்னர் தமிழர்களின் போராட்ட வடிவம் மீண்டும் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளதே தவிர, போராட்டத்திற்கான காரணிகள் இன்றும் அப்படியேதான் உள்ளது.

அதாவது தமிழ் மக்களின் போராட்டம் என்பது யாராலும் தூண்டிவிடப்படுகின்ற ஒரு விடயமல்ல என்பதை சிங்கள கொள்கை வகுப்பாளர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# சோமவன்ச, வீரவன்சவின் வங்குரோத்து உறுதியானது


## ரில்வின் சில்வா தெரிவிப்பு

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் ஜே.வி.பியின் முன்னாள் பிரசார செயலாளரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச ஆகியோரின் வங்குரோத்து நிலைமை உறுதியாகியுள்ளது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சோமவன்சவின் ஜனதா சேவக கட்சி மற்றும் விமலின் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் அரசியல் ரீதியாக நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோற்றதன் பின்னர் ஆட்சியில் நீடிக்க சூழ்ச்சி செய்ததாகவும் அதனை தடுக்க ஜே.வி.பி நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றம் சுமத்திய சோம்வன்ச அமரசிங்க இன்று மகிந்த தரப்பில் எவ்வாறு இணைந்து கொண்டுள்ளார்? எந்த அடிப்படையில் மகிந்த தரப்பில் மீளவும் இணைந்து கொண்டுள்ளார்?

அரசியல் ரீதியாக அநாதைகளான தரப்பினருக்கு வேறு வழியில்லை. இதனால் இவ்வாறான கூட்டணிகளுடன் இணைந்து கொள்ள நேரிடுகின்றது. எனினும் இவ்வாறான நடவடிக்கைகளினால் அவர்களது அரசியல் அநாதை நிலைமை வெளிப்பட்டு நிற்கின்றது என ரில்வின் சில்வா சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7)




# நாய்கள் குரைப்பதனால் மலை சரிந்து விடாதாம்

## விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

நாய்கள் குரைப்பதனால் மலைகள் சரிந்து விடாது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சிலர் என்னை பதவியிலிருந்து நீக்க முயற்சிக்கின்றனர்.

எனது அமைச்சுப் பதவியை பறிப்பதே அவர்களின் நோக்கமாக அமைந்துள்ளது.

தனிப்பட்ட குரோதத்தின் அடிப்படையில் பழி தீர்த்துக் கொள்ளவே இவ்வாறு முயற்சிக்கப்படுகின்றன.

யார் என்ன சொன்னாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில வக்கிரமசிங்கவும் ஒவ்வொரு நபர்களின் வெற்று கருத்துக்களுக்கு செவிமடுக்க மாட்டார்கள் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் சம்பவத்துடன் நீதி அமைச்சருக்கும் தொடர்பு உண்டு எனவும் அவரையும் பதவி விலக்க வேண்டுமெனவும் சில தரப்பினர் கோரி வருகின்றமை குறித்து கொழும்பு ஊடகமொன்று தொலைபேசி மூலம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# புலிகள் மீண்டும் எழுச்சி பெற வாய்ப்புக்கள் உருவாகின்றன

## லொஹான் ரத்வத்தை தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெற வாய்ப்புள்ளதாகவும் தற்போதைய தலைமைத்துவத்தின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தை தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தோற்கடித்தவரே தற்போது அந்தக்கட்சியின் தலைவராக இருக்கிறார்.

இந்தநிலையில் சுதந்திரக்கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களை பொறுத்தவரை அவர்கள் தற்போதைய கட்சி தலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே சரியான தருணம் ஒன்றை ஆதரவாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆளும் கட்சியாக அல்லது எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும்.

இந்தநிலையில் விடுதலைப்புலிகளின் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுவதை தாம் எதிர்ப்பதாக லொஹான் ரத்வத்தை மேலும் தெரிவித்தார். இதன் காரணமாக விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் எழுச்சிப் பெறலாம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# வாரம் ஒரு தகவல்

## வாழ்க்கை

எந்த வாழ்க்கையை பெறுவதற்காக நீங்கள் பணத்தைத் தேடி உங்கள் குழந்தையையும் புறக்கணித்து விட்டு ஓடுகின்றீர்களோ அந்த வாழ்க்கையை விட்டே நீங்கள் ஓடிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் பெரும் புள்ளியாகும் போது வாழ்க்கை உங்களுக்கு வெகு தூரத்தில் சிறு புள்ளியாய் மறைந்து கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

நான் உரக்கச் சொல்கிறேன் ஒரு போதும் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு பணத்தை தேடாதீர்கள் அவசியம் என்றால் பணத்தைத் தொலைத்தாவது வாழ்க்கையைப் பெறுங்கள்! அழகுணர்ச்சி என்பது வெறும் பொருட்களை அடுக்கி வைப்பதிலும் அலங்கார வஸ்துக்களை வாங்கி அடுக்கிக் கொள்வதிலும் இருப்பதாகச் சிலர் நினைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் மற்ற விஷயங்களைக் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

உண்மையில் அழகுணர்ச்சி என்பது நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் உங்கள் ஓர் அசைவிலும் வெளிப்பட வேண்டும்.

நம் முன்னோர்கள் சாஸ்திர சம்பிரதாயங்கள் என்று சில முறைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். அவற்றை மேலோட்டமாகப் பார்க்கின்ற போது அவை மூட நம்பிக்கைகளாகவும் குருட்டு நடவடிக்கைகளாகவும் தென்படலாம்.

அவற்றையெல்லாம் சற்று உற்று நோக்கினால் அதில் பொதிந்திருக்கும் உண்மை புலப்படும். நம் மூதாதையர்கள் வாழ்க்கையை முழுமையாக வாழ வழிவகுத்த வழி வகைகள் தான் அந்தச் சம்பிரதாயங்கள். இயற்கையோடு இணைந்து வாழ ஏற்படுத்திய எழுதப்படாத சட்டங்கள் தான் அந்த நம்பிக்கைகள். அவற்றின் படி அச்சுப்பிசகாது ஏற்படுத்திக் கொண்டால் அமைதியான இனிமையான வாழ்வைப் பெறலாம்.

# துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



தேசிய சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் சம்பவம் உள்ளிட்ட தேசிய சொத்துக்கள் மற்றும் பணம் ஆகியனவற்றை துஷ்பிரயோகம் செய்தவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக எமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

அவன்கார்ட் உள்ளிட்ட தேசிய சொத்து மோசடிகள் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவர்களை பாதுகாக்க அரசாங்கம் தயாரில்லை.

தேர்தலுக்கு முன்னதாக அவன்கார்ட் தொடர்பில் கடுமையான நிலைப்பாடு பின்பற்றப்பட்டது. அந்த நிலைப்பாடு தளர்த்திக்கொள்ளப்படாது.

இந்த ஊழல் மோசடிகளை வழிநடத்திய அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நபர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும்.

அமைச்சரவை அமைச்சுப் பதவிகள் வகிப்பது மக்களின் ஆணையினாலாகும்.

அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியது அவசியமானது.

அமைச்சுப் பதவிகள் நிரந்தர மற்றது. மக்கள் எம்மை நிராகரித்தால் இந்தப் பதவியை விட்டு நாம் செல்ல வேண்டும். எனவே நல்லாட்சிக் கொள்கைகள் கோட்பாடுகளை அமுல்படுத்த வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்கள் ஊழல் மோசடிகள் இல்லாதொழிக்கப்பட வேண்டுமென்றே விரும்புகின்றனர் என சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# முகநூல் தொடர்பில் ஜனாதிபதி எச்சரிக்கை

தனிப்பட்டவர்களை தாக்கும் வகையிலும் அதிக சுதந்திரத்தின் அடிப்படையிலும் முகநூலை பயன்படுத்த வேண்டாம் என்று முகநூல் பயன்பாட்டாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், சில இணையத்தளங்கள் காலஞ்சென்ற மாதுளுவாவே சோபிததேரர் தொடர்பில் தேவையற்ற விமர்சனங்களை வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார்.

முகநூல் பயன்பாட்டாளர்கள், தமது சுதந்திரத்தின் வரையறை தொடர்பில் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமாகும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# அவன்கார்ட்டிலுள்ள 2000பேர் சட்டவிரோத இராணுவத்தினர்

## பொன்சேகா குற்றச்சாட்டு

அவன்கார்ட் கம்பனியில் உள்ள மொத்த ஊழியர்கள் 4000 ஆயிரம் பேரில் 2000 ஆயிரம் பேர் இராணு வத்திலிருந்து சட்டவிரோதமாக வெளியேறிச் சென்றவர்கள் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து சட்டவிரோதமாக வெளியேறியோருக்கு எவரும் தொழில் வழங்க முற்படமாட்டார்கள்.

இந்த நிறுவனம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படுவதனால் அவ்வாறு வெளியேறுபவர்களுக்கு பாதுகாப்பு கிடைப்பதனால் அதில் போய் இணைந்து கொண்டுள்ளனர்.

இவர்களிடம் குறைந்த சம்பளத்துக்கு அந்த நிறுவனம் வேலை வாங்குகின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இந்த இரகசியத்தை வெளியிட்டுள்ளார். (இ-7)

# சாதனையாளர் கௌரவிப்பு

வலிகாமம் கல்வி வலயத்தினரால் வருடாந்த சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இரண்டாவது தடவையாக நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கௌரவ விருந்தினராக வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கல்விப் புலத்திற்கு காத்திரமான சேவையாற்றியவர்கள் எனும் அடிப்படையில் இருபது பாடசாலைகள் முப்பது பாடசாலையின் அதிபர்கள் மற்றும் தொன்னூற்று எட்டு ஆசிரியர்கள் நிகழ்வில் பதக்கம், சான்றிதழ், நினைவுக் கேடயம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-7)

# அவன் கார்ட் ஆயுதங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை கடற்படையினரால் ஆரம்பம்

அவன்ட் கார்ட் மெரிடைம்ஸ் பாதுகாப்பு நிறுவனத்திடம் இருந்த அனைத்து ஆயுதங்களையும் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் கடற்படையினரால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. மஹ நுவர, அவன்ட் கார்ட் ஆகிய பெயர்களைக் கொண்ட அவன்ட் கார்ட் நிறுவனக் கப்பல்களில் காணப்பட்ட ஆயுதங்களையே இவ்வாறு தாம் பொறுப்பேற்பதாகவும் குறித்த நடவடிக்கைகள் முற்றுப்பெற சுமார் 5 நாட்கள் வரை செல்லும் எனவும் கடற்படை ஊடகப்பேச்சாளர் கப்டன் அக்ரம் அளவி தெரிவித்தார்.

அவன்ட் கார்ட் மெரிடைம்ஸ் நிறுவனத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான அனைத்து ஒப்பந்தங்களையும் இரத்து செய்து, குறித்த நிறுவனம் முன்னெடுத்த அனைத்து நடவடிக்கைகளையும் கடற்படையின் கீழ் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டதை தொடர்ந்து நேற்று முன்தினம் அந்நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

அதன்படி அவன்ட் கார்ட் நிறுவனம் வாடகைக்கு அமர்த்திய இவ்வருடம் ஆரம்பத்தில் கைப்பற்றப்பட்ட மஹ நுவர என்ற கப்பலில் உள்ள ஆயுதங்களை சரிபார்த்து பொறுப்பேற்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது. குறித்த கப்பலில் இருந்த சுமார் 14 வரையிலான ஆயுத கொள்கலன்கள் சீல் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் திறக்கப்பட்டது. பின்னர் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் முன்னிலையில் ஆயுதங்களை சரிபார்த்து பொறுப்பேற்கும் பணி ஆரம்பமானது. மஹ நுவர என்ற இந்த கப்பலில் உள்ள ஆயுதங்களைப் பொறுப்பேற்ற பின்னர் அவன்ட் கார்ட் என்ற பெயர் கொண்ட கடந்த மாதம் கைது செய்யப்பட்ட கப்பலில் உள்ள 816 ஆயுதங்களும் கடற்படையினரால் பொறுப்பேற்கப்படவுள்ளது.

அவன்ட் கார்ட் சர்ச்சை தொடர்பில் கடந்த புதனன்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் அவன்ட் கார்ட் நிறுவனம் முன்னெடுத்த கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கையை கடற்படையிடம் ஒப்படைப்பது என தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட விசேட முடிவின் அடிப்படையில், அவன்ட் கார்ட் நிறுவன விவகாரத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் இணைந்து நடத்திய விசேட கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, அர்ஜூன ரணதுங்க, பாதுகாப்பு செயலாளர் ஹெட்டி ஆராய்ச்சி, ஆகியோருடன் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன், கடற்படை தளபதி ரவீந்ர சீ விஜே குணவரத்தன, சட்டமா அதிபர் யுவஞ்சன வண சுந்தர, ரக்னா லங்கா நிறுவன அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். இந்நிலையிலேயே ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய நேற்று முன்தினம் ஆயுதங்களைப் பொறுப் பேற்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 160-200 | 130 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 800 | 500 | 800 | 450 | 400 | 800 |
| தக்காளி | 150 | 140 | 160 | 120 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 | 40 | 60 |
| கோவா | 140 | 160 | 200 | 140 | 200 | 160 |
| கரட் | 120 | 100 | 120-200 | 90 | 200 | 100 |
| பூசணி | 60 | 50 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 140 | 100 | 140 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 120 | 120 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 140 | 110 | 160 | 150 |
| பாகற்காய் | 300 | 300 | 300-400 | 200 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 200 | 130 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 120 | 70 |
| பயற்றங்காய் | 170 | 140 | 160-200 | 250 | 200 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 100-160 | 120 | 200 | 150 |
| பீற்றூட் | 80 | 60 | 60 | 50 | 120 | 40 |
| கறிமிளகாய் | 250 | 200 | 300-500 | 180 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 140 | 140 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 350 | 240 | 230 | 300 | 240 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | — | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 25-60 | 50 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | — | 70 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 30 |

# கடற்றொழிலாளர்களின் விபரங்களை நாளை சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களது முழு விபரங்களையும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கும் படி யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் இவ் விபரங்கள் திரட்டப்படவுள்ளது.

தற்போதைய காலநிலை மாற்றத்தால் கடற்றொழிலாளர்கள் எவரும் கடற்றொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மழை, காற்று என்பனவற்றால் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்வதற்கு அச்சப்படுகின்றனர்.

இதனால் கடற்றொழிலாளர்களது குடும்ப வருமானம் மிகவும் மோசமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக தமக்குரிய உலர் உணவுகளை பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஊடாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடற்றொழிலாளர்களால் கோரிக்கை ஒன்றும் விடப்பட்டுள்ளது.

இதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புகளால் கடற்றொழிலாளர்களது விபரம் திரட்டப்படவுள்ளது.

இதற்கமையவே நாளைய தினம் இவ் விபரங்கள் ஒவ்வொரு கிராமிய கடற்றொழில் அமைப்புகளிடமிருந்து எழுத்துமூலம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

எனவே, அனைத்து கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புகளும் தம் அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களது விபரங்களை ஒப்படைக்குமாறு யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் மேலும் கேட்டுள்ளார். (இ-5)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2015
15

- 1505 - போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல்மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தார்.
- 1889 - பிரேசில் குடியரசாகியது. இரண்டாம் பெதரோ ஆட்சியிழந்தான்.
- 1926 - என்பிசி வானொலி 24 நிலையங்களுதன் தனது வானொலி சேவையைத் தொடங்கியது.
- 1943 - நாசி ஜேர்மனியில் அனைத்து ஜிப்சிகளையும் யூதர்களுக்கு இணையாக வதமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
- 1948 - இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.
- 1966 - ஜெமினி 12 விண்கலம் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.
- 1969 - வியட்நாம் போர்: வாசிங்டன் டிசியில் 250,000-500,000 பேர் போருக்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினர்.
- 1970 - சோவியத்தின் லூனா தானூர்தி சந்திரனில் தரையிறங்கியது.
- 1971 - இண்டெல் நிறுவனம் உலகின் வர்த்தகரீதியிலான முதலாவது 4004 என்ற single-chip microprocessor வெளியிட்டது.
- 1983 - வடக்கு சைப்பிரஸ் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது. துருக்கி மட்டுமே இதனை அங்கீகரித்தது.
- 1988 - சோவியத் ஒன்றியத்தின் ஆளற்ற பூரான் விண்ணோடம் தனது முதலாவது கடைசியுமான பயண த்தை ஆரம்பித்தது.
- 1988 - பாலஸ்தீன நாடு பாலஸ்தீன தேசிய கவுன்சிலினால் அறிவிக்கப்பட்டது.
- 1990 - அட்லாண்டிஸ் விண்ணோடம; STS-38 கப்பலை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 2002 - ஹூ சிங்தாவ் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச செயலாளர் ஆனார்.
- 2000 - இந்தியாவில் ஜார்க்கண்ட் தனிமாநிலமாக உருவாக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1738 - வில்லியம் ஹேர்ச்செல், விண்கோள் யுரேனசைக் கண்டு பிடித்த ஜேர்மன் விஞ்ஞானி (இ. 1822)
- 1986 - சானியா மிர்சா, இந்தியாவின் டென்னிஸ் வீராங்கனை

இறப்புகள்

- 1630 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜேர்மானிய கணிதவி யலாளரும், வானியலாளரும் (பி. 1571)
- 1917 - எமில் டேர்க்கேம், பிரெஞ்சு சமூகவியலாளர்
- 1949 - நாத்தூராம் கோட்சே, மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கொலையாளி (பி. 1910)
- 1949 - நாராயண் ஆப்தே, மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கொலையாளி (பி. 1911)
- 1961 - இலங்கையர்கோன், ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர்

# படகுகளை அடையாளம் காட்டுமாறு பிரதேச செயலாளர் அறிவிப்பு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் சுண்டிக்குளம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்ட மீன்பிடி படகுகளை உரிய கடற்றொழிலாளர்கள் அடையாளம் காட்டுமாறு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் மீண்டும் கேட்டுள்ளார்.

சுண்டிக்குளம் கடற்படையினரால் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 21 மீன்பிடி படகுகளில் இதுவரை 4 படகுகள் கடற்றொழிலாளர்களால் அடையாளங்காட்டப்பட்டுள்ளது.

மீதி 17 படகுகள் அடையாளங் காட்டப்படாமல் உள்ளது.

எனவே, எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமது படகுகளை அடையாளங் காட்டுமாறும் அவ்வாறு அடையாளங் காட்டத் தவறும் பட்சத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு தங்களது படகுகள் வழங்கப்ப்டும் எனவும் மருதங்கேணி பிரதேச செயலர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5-60)

# ஐயங்கன்குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை

(மல்லாவி)

**வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட 12 நீர்ப்பாசனக் குளங்களில் 9 குளங்கள் வான்பாய ஆரம்பித்துள்ளதுடன் ஐயங்கன் குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் காணப்படுவதால் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் பர.விகர்ணன், துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் மற்றும் விவசாயிகள், கமக்கார அமைப்புக்கள் ஆகியோர் அடங்கிய அணியொன்று ஐயங்கன் குளத்திற்கு விரைந்து மண்மூடைகளை வைத்து அணைக்கட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வன்னி பிரதேசத்தில் கடந்த இரு நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் நிரம்பிய நிலையில் சில குளங்கள் உடைப் பெடுக்கும் அபாயநிலையை எட்டியுள்ளன.

இந்நிலையில் 25 அடி கொள்ளளவுடையவவுனிக்குளம் 23 அடி 6 அங்குலமாகவும் 12அடிகொள்ளளவுடையஐயங்கன்குளம் 11 அடி 6 அங்குலமாகவும் 9 அடி 6அங்குலம் கொள்ளளவுடையபனங்காமம் குளம்9அடி3அங்குலமாகவும் நீர் நிரம்பிக் காணப்படுகின்றது.

இதேவேளை10அடிகொள்ளளவுடைய தென்னியங்குளம் 11 அடி ஒரு அங்குலமாகவும் காணப்படுவதுடன் 13 அங்குலத்திற்கு வான் பாய்கின்றது.




10 அடி கொள்ளளவுடைய அம்பலப்பெருமாள் குளம் 10 அடி 8 அங்குலமாகக் காணப்படுவதுடன் 8 அங்குல உயரத்திற்கு வான்பாய்கின்றது.

11 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கல்விளான்குளம் 11அடி 10 அங்குலமாக காணப்படுவதுடன் 4 அங்குல உயரத்திற்கு வான்பாய்கின்றது.

9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய மருதங்குளம் 11 அடி ஒரு அங்குலமாகக் காணப்படுவதுடன் ஒரு அடி 7 அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.

9 அடி 6 அங்குலமாகவும் கொள்ளளவுடைய பழைய முறிகண்டிக்குளம் 10 அடிஒரு அங்குலமாகக் காணப்படுவதுடன் 7அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.

9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கோட்டைகட்டிய குளம் 10 அடி 7 அங்குலமாகக் காணப்படுவதுடன் ஒரு அடி ஒரு அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.

11 அடி கொள்ளளவுடைய கொல்லவிளான்குளம் 11 அடி 6 அங்குலமாகக் காணப்படுவதுடன் 6 அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது. 12 அடி கொள்ளளவுடைய மல்லாவி குளம் 12 அடி 9 அங்குலமாகக் காணப்படுவதுடன் 9அங்குல உயரத்திற்குவான் பாய்கின்றது.

11 அடி 2 அங்குலம் கொள்ளளவுடைய தேராங்கண்டல் குளம் 11 அடி 7 அங்குலமாக நீர் காணப்படுவதுடன் 5 அங்குல உயரத்திற்கு வான் பாய்கிறது.

இதேவேளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணி தொடக்கம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 6 மணி வரையிலான 12 மணித்தியாலங்களில் வவுனிக்குளம் நீரேந்து பிரதேசத்தில் 130 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.விகர்ணன் அறிவித்துள்ளார். (2-15)

# ஆற்று நீருடன் அடித்துச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழந்தார்

(கிளிநொச்சி)



ஆற்றங்கரையோரத்தில் மாடுகளை கட்டுவதற்காக சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஆற்றுநீர் பெருக்கெடுத்ததில் அதில் அடித்துச் செல்லப்பட்டு மூச்சடங்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கல்மடு பகுதியிலுள்ள ஆற்றங்கரையோரத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகலிங்கம (வயது-37) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கல்மடு பகுதியில் உள்ள ஆற்றங்கரையோரம் ஒன்றில் மாடுகளை கட்டுவதற்காக சென்றவேளை ஆறு பெருக்கெடுத்ததில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு மூச்சடங்கி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (2-9)

# இரணைமடு நீர்ப்பாசனக் குளங்களில் எட்டு குளங்கள் வான் பாய்கின்றன

## நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட ஒன்பது நீர்ப்பாசனக் குளங்களில் எட்டு குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளதாகவும் குளங்களின் நீரேந்து பிரதேசத்தில் 24 மணித்தியாலத்தின்போது கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியின் அளவையும் இரணைமடுநீர்ப்பாசத்திணைக்களப் பொறியியலாளர் கு.செந்தூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

34அடிகொள் ளளவுடைய இரணைமடுக் குளத்திற்கு 28 அடி 6 அங்குலமாக நீர்வரத்து கிடைக்கப்பெற்று 26 அடி நீர்மட்டத்தைப் பேணும் முகமாக 2 அடி 6 அங்குலத்திற் கானநீர் வான்கதவுகள் ஊடாக திறக்கப்பட்டு வெளியேற்றப்படுகின்றது.

24 அடி கொள்ளளவுடைய கல்மடு குளத்திற்கு 25 அடி 5 அங்குலமாக நீர் கிடைக்கப்பெற்று ஒரு அடி 5 அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.

24 அடி கொள்ளளவுடைய அக்கராயன் குளத்திற்கு 25 அடி 7 அங்குலமாக நீர் கிடை க்கப் பெற்று ஒரு அடி 7 அங் குல உயரத்துக்குவான்பாய்கின்றது.

19 அடி கொள்ளளவுடைய புதுமுறிப்புக் குளத்திற்கு 19 அடி 8 அங்குலமாக நீர் கிடைக்கப் பெற்று 8 அங்குல உயரத்துக்கு வான் பாய்கின்றது.

9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய வன்னேரிக் குளத்திற்கு 10 அடி ஒரு அங்குலமாக நீர் கிடைக்கப் பெற்று 7 அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது. 12 அடி கொள்ளளவுடைய பிரமந்தனாறு குளத்திற்கு 13 அடி 4 அங்குலத்திற்கு நீர் கிடைக்கப் பெற்று ஒரு அடி 4 அங்குலத்திற்கு வான் பாய்கின்றது.

10 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கனகாம்பிகைக் குளத்திற்கு 11 அடி 5 அங்குலமாக நீர் கிடைக்கப் பெற்று 11 அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.

8அடி9அங்குலம்கொண்ட குடமுறுட்டி குளத்திற்கு 9 அடி 3 அங்குலமாக நீர் கிடைக்கப் பெற்று 6 அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.

10 அடி கொள்ளளவு டைய கரியாலை நாகபடுவான் குளத்திற்கு 6 அடி 9 அங்குலமாக நீர் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதேவேளை நேற்று சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு முற்பட்ட 24 மணி நேரத்தில் இரணைமடுக்குள நீரேந்து பிரதேசத்தில் 128 மில்லி மீற்றராக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அக்கராயன் குளம் நீரேந்து பிரதேசத்தில் 236.8 மில்லி மீற்றராகவும் கரியாலை நாகபடுவான் குள நீரேந்து பிரதே சத்தில் 160.5 மில்லிமீற்றராகவும்மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகஅவர்மேலும் அறி வித்துள்ளார். (2-15)

# ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன


வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களுக்கு தளர்த்தப்பட்ட விசேட நிபந்தனைகளுடன் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார்அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் விசேட கல்வி, மனைப் பொருளியல், தகவல் தொழில் நுட்பம், உடற்கல்வி, முறைசாராக் கல்வி ஆகிய பாடங்களுக்கும் மற்றும் கண்ணி வள நிலைய ங்களில் இரண்டாம் மொழி சிங்கள பாடத்திற்கான போதனாசிரியர் வெற்றிடங்களுக்கும் ஆசிரிய ஆலோசகர் பதவி நிலை வெற்றிடங்கள்காணப்படுகின்றன.

இதற்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவை-I, இலங்கை ஆசிரியர் சேவை 2-Iஇலங்கைஆசிரியர்சேவை-2-II ஆகிய தரங்களைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக எதிர்வரும் 27 ஆம் திகதிவெள்ளிக்கிழமைக்கு முன்பாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)



தபால் திணைக்கள ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தபாலகம் மூடப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-முள்ளியவளை செய்தியாளர்)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடும் மழையினால் குடும்பங்கள் இடம்பெயர்வு

## வெள்ளநீர் வீடுகளினுள் புகுந்தமையையடுத்து

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் அடை மழை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதற்கமைய கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் பொன்நகர் கிராமத்தில் உள்ள 55 குடும்பங்கள் வீடுகளினுள் வெள்ள நீர் உட்புகுந்தமையால் வீட்டில் தங்க முடியாத சூழ்நிலையில் இடம் பெயர்ந்து மு/திருமுறிகண்டி வித்தியாலத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். 55 குடும்பங்களைச் சேர் ந்த 185 வரையிலான அங்கத்தவர்களே மேற்படி பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை கிளிநொச்சி மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப்பிரிவினர் வழங்கி வருகின்றனர்.

மேலும்அம்பாள்நகர்கிராம அலுவலர் பிரிவிலுள்ள சாந்தபுரம் கிராமத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளினுள் நீர் உட் புகுந்தமையையடுத்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதேபோன்று ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் ஐந்து குடும்பங்கள் வெள்ள நீர் வீடுகளினுள் உட்புகுந்தமையால்நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதேவேளை கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள சிவபுரம் கிராமம் முழுமையாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்யும்நிலை காணப்படின் சிவபுரம் கிராமத்தில் வசிக்கின்ற சுமார் 300 மேற்பட்ட குடும்பங்கள் இம்பெரும்அபாயநிலையை எட்டியுள்ளனர்.

இதே வேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் புத்துவெட்டுவான் கிராமசேவையாளர் பிரிவில் மணல்குளம், வாணி மோட்டைக்குளம் ஆகிய குளங்கள் வான்பாய்வதன் காரணமாக வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளமையால் 40 குடும்பங்கள் இடம்பெயர்ந்து மு/புத்துவெட்டுவான் அ.த.க. பாடசாலையில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேட்டையடைப்பு கிராமத்தில் வீடுகளினுள் வெள்ளநீர் புகுந்தமையால் 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள்வீடுகளில்தங்கியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள பண்டார வன்னி கிராமத்திலுள்ள வீடுகளினுள் குருவிச்சையாறு, விரால்மடு ஆறு ஆகியவை பெருக்கெடுத்ததன் காரணமாக 15 குடும்பங்கள் இடம் பெயர்ந்து உறவினர்கள், நண் பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.


கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 35 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கான சமைத்த உணவுகளை அந்தந்த பிரிவிலுள்ள அலுவலர்கள் பிரதேச செயலர்களின் பணிப்புரைக்கு அமைய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் வழங்கி வருகின்றனர். இவர்களுக்கான அடுத்த கட்ட உதவிகள் இன்றைய தினம் வழங்குவதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. (2-277-15)

# இரணைமடுக் குளத்தின் 10வான் கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக இரணைமடுக்குளம் 28 1/2 அடிக்கு மேல் நீர் வரத்து கிடைக்கப் பெற்றுள் ளமையையடுத்து நேற்று முற்பகல் 10.30 மணியள வில் இரண்டு அடி உயரத்தில் பத்து வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன் தெரிவித் துள்ளார்.**



36 அடி கொள்ளளவு கொண்ட இரணை மடுக்குளத்திற்கான பாரிய அபிவிருத்தி திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலை யில்,

26 அடி உயரத்தில் மட்டுமே நீரைச் சேமித்து வைக்க வேண்டியுள்ளதால், குளத்திற்கான 11 வான் கதவுகளில் பத்து வான் கதவுகள் இர ண்டு அடி உயரத்தில் திறந்து விடப்பட்டுள்ளது.

எனினும் தொடர்ந்தும் பெய்து வரும் கடும் மழை காரணமாக குளத்திற்கான நீர் வரத்து கூடுதலாக கிடைக்கப் பெறுமிடத்து அதன் உயரம் கூட்டப்படும் என அவர் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரியாலை நாகபடுவான் குளத்தைத் தவிர ஏனைய குளங்கள் வான் பாய ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் புதுமுறிப்புக்குளம் 8 அங்குலமாகவும் கல்மடு குளம் ஒரு அடி 6 அங்குலமாகவும், அக்கராயன் குளம் 2 அங்குலமாகவும், வன்னேரிக்குளம் 7 அங்குலமாகவும், பிரமந்தனாறுக் குளம் ஒரு அடி நான்கு அங்குலமாகவும் குடமுறுட்டிக் குளம் 6 அங்குலமாகவும் வான் பாய ஆரம் பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

இதேவேளை மேற்படி குளத்தை அண் மித்த தாழ் நில பிரதேசத்தில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கும் இந்த வான் கதவு களின் ஊடாக நீர் வெளியேறும் இடங்களில் உள்ள வீதிகளைப் பயன்படுத்துவோரும் அவதானமாகச் செயற்படுமாறும் இதனூ டான போக்குவரத்தை தவிர்த்தும் பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-277-254)



பெய்து வரும் கடும் மழை காரணமாக முல்லைத்தீவு - வற்றாப்பளை அம்மன் கோவில் வெளியிலுள்ள பல வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதேவேளை முல்லைத்தீவு அம்மன் கோவில் வெளியிலுள்ள 60 ஏக்கர் வயல்களும் கொண்டைமடு வெளியில் 40 ஏக்கர் வயல்களும் நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன் கள்ளப்பாடு தெற்கு கிராமத்தின் பெரும் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. (படங்கள் :- பனிக்கன்குளம், குருமன்காடு செய்தியாளர்கள்)

## கொலை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு மரண தண்டனை விதிப்பு

### வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளிப்பு

(குருமன்காடு)

2006 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி செட்டிகுளம், 2 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற நவரத்தினராசா நவரஞ்சன் என்பவரின் கொலை தொடர்பில் சட்டமா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஆறு பேரில் இருவருக்கு வவுனியா மேல் நீதி மன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அதே இடத்தை சேர்ந்த கனகலிங்கம் செல்வரத்தினம்,அழகன் சசிதரன் ஆகிய இருவருக்குமே இம் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதே வழக்கில் குறித்த குற்றம் செய் வதற்காக சட்டவிரோத கூட்டம் கூடியதற்காக குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளான செட்டிகுளம், 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகலிங்கம் செல்வரத்தினம், அழகன் சசிதரன், தில்லையம்பலம் ஜெயராசா, தில்லையம்பலம் குலேந்திரராசா, தியாக ராசா குமார், அந்தோனிப்பிள்ளை சுபாஸ் கரன் ஆகியோருக்கு தலா 5 மாத கடூழிய சிறைத்தண்டனையும், ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணமும் நீதிமன்றால் விதிக்கப் பட்டது.

மேலும் நவரத்தினராசா மனோராஜ் என்பவருக்கு கடும் காயம் விளைவித்த குற்றச்சாட்டில் மேற்குறித்த 6 பேரும் குற்ற வாளிகளாக இனங்காணப்பட்டு தலா 5 வருட கடூழிய சிறைத் தண்டனையும் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப் பட்டது.

நீதிமன்றின் வழக்கு விசாரணையின் போது முதலாம் எதிரியான கனகலிங்கம் செல்வரத்தினம் நீதிமன்றில் சமுகமளிக்காது தலைமறைவாகியுள்ளமையால் அவருக்கு எதிராக பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப் பட்டது.

குறித்த வழக்கை சட்டமா அதிபர் சார்பாக அரச சட்டவாதி நிஷாந் நாகரத்தினம் நெறிப்படுத்தியிருந்தார். எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான சிறிகாந்தா, ஆனந்த ராஜா, செல்வி தர்சினி அண்ணாத்துரை, திருமதி. பாத்திமா றொசானா ஆகியோர் முன்னர் வழக்காடியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

நீதிமன்றத்தின் விளக்குகள் அணைக் கப்பட்டு நீதிபதியினால் மரண தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்பட்ட போது திறந்த மன்றி லிருந்த எதிரி அழகன் சசிதரனின் பெரிய தாயார் செல்வராசா பரமேஸ்வரி மன்றின் செயற்பாடுகளை பாதிக்கும் வகையில் பெரும் குழப்பம் விளைவித்தமைக்காக மன்றினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். நீதிமன்றின் முன்றிலிலுள்ள பிரதான வீதியில் நின்றும் தீர்ப்புக்கு எதிராக குழப்பம் விளைவிக்க முற் பட்டமையால் பொலிஸார் குவிக்கப்பட்டு அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

மரண தண்டனை பெற்றுள்ள அழகன் சசிதரன் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் செட்டிகுள பிரதேசத்தில் இடம்பெற்ற வேறு ஒரு கொலைக் குற்றத்திற்காக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## துணுக்காய் கல்வி வலய அதிபர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அதிபர்களுக்கான பாடசாலை முகாமைத் துவ அபிவிருத்தி செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமையும் வெள் ளிக்கிழமையும் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் தினமும் காலை 8.20 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை தொடர்ந்து நான்கு தினங்கள் துணுக்காய் கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்ட பத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (2-15)




## வெள்ளநீரில் அள்ளுண்டு வந்த முதலை தாக்கியதில் சிறுமி காயம்

### கிளிநொச்சியில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

வெள்ளத்தில் மிதந்து வந்த முதலையொன்று சிறுமியின் தலையை பிடித்ததை அடுத்து த்கப்பனின் முயற்சியில் சிறுமி காப்பாற் றப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கு பிர தேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வெள்ளத்துடன் அள்ளுண்டு வந்த முத லையொன்று வீட்டில் நித்திரையிலிருந்த 14 வயது சிறுமியின் தலையைப் பிடித்துள்ளது.

இந்நிலையில் சிறுமியின் கால் பகுதி துடித்துக் கொண்டிருந்ததை அவதானித்த தந்தை உடனே செயற்பட்டு சிறுமியைக் காப்பாற்றியுள்ளார்.

காயமடைந்த நிலையில் காப்பாற்றப்பட்ட குறித்த சிறுமி தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

த.விதூசா (வயது-14) என்ற சிறுமியே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவராவார்.

இதேவேளை குறித்த முதலை பிரதேசத் தில் வெள்ளநீரில் உலாவி வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழித்து வருவதாகஅறியமுடிகிறது. (2-281)

தட்டத்தில் தருவாரோ தமிழீழம்
-மேத்தா

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நோர்வே தூதுவர் எரிக் சொல் சொல்லிய சொல்லின் பொருள் என்ன?

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் நடந்த பூரண ஹர்த்தால் தமிழ் மக்களின் உணர்வு பூரணமான செயற்பாடு என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அகிம்சைப் போராட்டங்களில் சில போராட்டங்கள் உரிமை கோரக் கூடியவை. இன்னும் சில போராட்டங்கள் அரசியல் அமைப்பு ரீதியில் உரிமை கோர முடியாதவை. இத்தகையதொரு போராட்டமாக கைதிகளின் விடுதலைக்காக வடக்கு கிழக்கில் நடந்த பூரண ஹர்த்தாலைக் கூறிக்கொள்ளலாம்.

அதாவது ஒவ்வொரு தமிழ் மகனும் தாமாகவே முன்வந்து அகிம்சை வழியில் போராட்டத்தை முன்னெடுப்பது என்பது இதன் பொருளாகும்.

இந்த வகையில் மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்துவடக்கு கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றித்து நடத்திய அகிம்சைப் போராட்டத்தையும்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நேற்று முன்தினம் நடந்த பூரண ஹர்த்தாலையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் நடந்த அகிம்சைப் போராட்டம் என்பது மக்கள் மயப்பட்டது.

யார் ஏற்பாட்டாளர்கள் என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு மனித நேயத்தோடு நடந்த அந்தப் போராட்டத்தின் எழுச்சியை தோற்கடிக்கும் வகையில் சில பிரகிருதிகள் யாழ்ப்பாண நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல் மாணவி வித்தியாவின் கொலையைக் கண்டித்து உணர்வு பூர்வமாக போராட்டத்தில் பங்குபற்றியவர்களின் மனதை கடுமையாகப் பாதிக்கவே செய்தது.

எங்கே எங்களின் சாத்வீகப்போராட்டமும் தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான வெளிப்பாடுகளும் உயிர்ப்பற்றுப் போய்விடுமோ என்று ஏங்கிய நேரத்தில்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நேற்றுமுன்தினம் நடந்த பூரண ஹர்த்தால் மீண்டும் அகிம்சைப் போராட்டத்தின் மீது நம்பிக்கையை தந்துள்ளது.

பொதுவில் அகிம்சை வழிப்போராட்டங்கள் நியாய பூர்வமானதாக நடைபெறுகின்ற போது அவை நிச்சயம் வெற்றியைத் தரும்-வெற்றியைத் தந்துள்ளன.

அகிம்சைப் போராட்டங்கள் இப்போது காலத்தின் தேவையாகியுள்ளது. இத்தகைய மக்கள் போராட்டங்கள் அரசியல்வாதிகளை திருத்துவதற்கும் அரசியல் தலைமைகளை நெறிப்படுத்துவதற்கும் பயன்படுத்தக் கூடியவை.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்ற நடைமுறையால் தேர்தலில் வெற்றி பெற்ற அடுத்த மாதமே திருகுதாளம் செய்கின்ற அரசியல்வாதிகளை திருத்துவதற்கு ஐந்து ஆண்டுகள் காத்திருப்பதென்பது மகா மடமைத்தனம்.

எந்தவொரு மக்கள் சமூகமும் தமக்குப் பொருத்தமற்ற பிரதிநிதிகள் என்று உணரும் போது அவர்களுக்கு எதிராக அகிம்சை வழிப்போராட்டத்தை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை பதவியில் இருந்து வெளியேற்றுவது கட்டாயமானது.

இத்தகைய மக்கள் போராட்டங்கள் நடக்கும் என்று தெரிகின்ற போது, பதவி பெற்ற அரசியல்வாதிகள் மற்றும் அரச நிர்வாகிகள் தமது பணியை, கடமையை செவ்வனே செய்வர். இல்லையேல் பதவியில் இருப்பவர்கள் தங்களை எதுவும் செய்ய முடியாது என்ற இறுமாப்பில் அனைத்து அநீதிகளையும் அரங்கேற்றுவர்.

ஆக, அகிம்சை வழியில் மக்கள் போராட்டம் என்பது மனித வாழ்வுக்கு அடிப்படையானது. இதைத் தான் இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூது வராக இருந்த எரிக் சொல் ஹெய்ம், இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதையும் அன்பளிப்பாகத் தரப் போவதில்லை. தமிழ் மக்கள் போராடித்தான் தமது உரிமையை பெற வேண்டும் என்று சொல்லியதன் பொருள் இதுவேயாகும்.

## ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

சிகரம் ஹோட்டல் கற்கை நிறுவனம் ஊடாக யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக நடத்தப்படவுள்ள பிரித்தானிய (Sunderland) பல்கலைக் கழக பட்டக் கல்வி வாய்ப்புடன் கூடிய ஹோட்டல முகாமைத்துவ கற்கை நெறி எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை கிறீன் கிறாஸ் ஹோட்டலில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ் அறிமுகப்படுத்தல் நிகழ்வில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதி நேரில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அனுமதிகளை வழங்கவுள்ளார்.

இந்தக் கற்கைநெறியை அறிமுகப்படுத்தும் விளக்கக் கருத்தரங்குகள் நாளை முதல் 18-ம் திகதி வரையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய நாளைய தினம் யாழ்ப்பாணம் சிகரம் நிறுவன விரிவுரை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு முதலாவது விளக்கக் கருத்தரங்கு வெளிநாட்டுப் பிரதிநிதியின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நாளை மறுதினம் 17-ம் திகதி மு.ப 9 மணிக்கு மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும், 18ஆம் திகதி மு.ப 9மணிக்கு வவுனியா நெல்லி ஸ்ரார் ஹோட்டலிலும், அன்றையதினம் 2 மணிக்கு கிளிநொச்சி வேலைவனம் விடுதியிலும் தொடர்ச்சியாக கற்கைநெறி விளக்கக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இறுதியாகவே 19ஆம் திகதி வியாழக கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் கிறீன் கிறாஸ்-வலம்புரி ஹோட்டல் பிரதான மண்டபத்தில் GRAND HOTEL SHOW உடன் உத்தியோகபூர்வமாக கற்கைநெறி அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்படுவதுடன், அனுமதிபெற்ற மாணவர்களுக்கு அனுமதிக் கடிதங்களும் வழங்கி வைக்கப்படும்.

தொடர்ந்து ஹோட்டல் கற்கை நெறியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்காக, ஹோட்டல் ஒன்றின் செயற்பாடுகள் தொடர்பாக அடிப்படை விளக்கம் தரும் விசேட விளக்கச் செயலமர்வும் நடத்தப்படவுள்ளது.

ஹோட்டல் கற்கைநெறியைத் தொடர விரும்பும் மாணவர்கள் அன்றையதினம் தமது பெற்றோர் சகிதம் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கைப்பை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரான்பற்று பண்டத்தரிப்பினைச் சேர்ந்த துரைசிங்கம் மதியழகன் என்பவரது (780183683V) தேசிய அடையாள அட்டை, சாரத அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் போன்ற ஆவணங்கள் உள்ளடங்கலான கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே இவ் ஆவணங்களை உரித்துடையவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி அலுவலக நேரத்தில் வலம்புரிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (இ-5)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 2015-ம் ஆண்டின் இறுதி பொது கூட்டமும் 2016-ம ஆண்டிற்கான புதிய நிர்வாக கட்டமைப்பு மற்றும் குழுக்களை தெரிவு செய்வதற்கான கலந்துரையாடலும் இன்று பிற்பகல் 01.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில இடம்பெறவுள்ளது. பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தவறாது சமுகம் தருமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா... ஒவ்வொரு மரமும் போதிமரம்!"

-கவிஞர் வைரமுத்து

## "எதிர்காலத்தை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை எம்மில் வளர்ப்போம்!"

இன்றைய பைபிள் பகுதியில் இயேசு தனது இரண்டாவது வருகையை பற்றி கூறுகிறார். கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றுதான் இயேசுவின் இரண்டாம் வருகை. இயேசு நமது இரண்டாம் வருகையின்போது நடுவராக இருந்து அவரே உலகைத் தீர்ப்பிடுவார் என்பதுவே இரண்டாம் வருகையின் பொருள். 'அந்நாட்களில் வேதனைகளுக்குப் பிறகு கதிரவன் இருண்டு விடும். நிலா ஒளி கொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழுந்த வண்ணமிருக்கும். வான்வெளிக் கோளகள் அதிரும். இவை நிகழ்வதைக் காணும்போது மானிடமகன் கதவை


### பரமபிதா காட்டிய பாதை

நெருங்கி வந்துவிட்டார் என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள்". இங்கு இயேசு என்ன சொன்னார் என்பதை கவனித்தால்: அவர் எந்த ஒரு திகதியையும் உறுதியாக சொல்லவில்லை. சீடர்களுக்கு எந்த ஒரு தடயமோ அல்லது தமது இரண்டாம் வருகைக்கான எந்த ஒரு சரியான குறியீடும் கொடுக்கவில்லை. ஏனெனில், அவருக்கும் அது தெரியாது.

வைத்தியசாலைகளில் குணப்படுத்த முடியாமல் இருக்கக்கூடிய நோயாளிகளுககுக்கூட, எப்போது அவர்களின் முடிவு வரும். அது எப்படி இருக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது. இறப்பு வேண்டும் என்பதனால் அது வந்துவிடக்கூடாது. இறப்பே வேண்டாம் என்று நினைக்கிறவர்களையும், அது தீண்டாமல் விடுவதில்லை. இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்தைப் புரியாமல் வாழ்கிறவர்கள் இந்த உலகத்தில் ஏராளம். அதனால் சந்திக்கக்கூடிய பிரச்சினைகளும், எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் ஏராளம். நடுவராக இயேசு மீண்டும் வரவிருக்கிற அந்த இரண்டாம் வருகை உலக முடிவில்தான் இருக்கும். உலக முடிவு எப்போது என்று மனு மகனுககே தெரியாது என்று இயேசுவும் கூறிவிட்டார். எனவே, நம்மைப் பொறுத்த வரை, உலக முடிவு என்பது நம் ஒவ்வொருவரின் முடிவுதான். அதாவது, நமது இறப்புதான். நாம் இறக்கின்றபோது நடுவராம் இயேசு நம்மைச் சந்தித்து நம்மைத் தீர்ப்பிடுவார். அந்தத் தீர்ப்பின் வேளைக்காக நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நாம் இறைவனுடைய பிரசன்னத்தை உணர்ந்து வாழ்வதும், நமது பணிகளை நேர்மையாக, செய்து முடிப்பதுமே இரண்டாம் வருகைக்கான நமது ஆயத்தமாகும்.

இயேசு தம் சீடர்களுக்கு நிறைவுக் காலம் பற்றி இன்னுமொரு விடயத்தை கூறுகின்றார்: கடவுளாட்சி ஏற்கெனவே வந்துவிட்டது என்றாலும் அதன் முழுமை இன்னும் மலரவில்லை. இயேசு இறுதி வெற்றி உறுதியாக வரும் என கற்பிக்கிறார். இந்த உலகில் நிலவுகின்ற அநீதிகளும் அட்டூழியங்களும் ஒருநாள் முடிவுக்கு வரும். குறைகளும் குற்றங்களும் மலிந்த நம் வாழ்வு ஒருநாள் ஒளிமயமானதாக விளங்கும் என அவர் அறிவுறுத்துகிறார். ஆனால் அந்த நிறைவுக் காலம் எப்போது வரும்? என்னும் கேள்விக்கு இயேசு பதிலளிக்க மறுத்துவிட்டார். இந்த நிறைவுகாலம் எமக்கு எதிர்காலத்தில் தான் வரும் என்கிறார் இயேசு. இந்நாட்களில் முழு மனித வாழ்க்கை வாழ்வதில் பல போராட்டங்களைச் சந்தித்து வருகிறோம். மனித நேயத்தோடு வாழ்ந்தால் பல இழப்புக்கள். ஒதுங்கி வாழ்ந்தாலும் வாழ முடியாது. பின்வாங்கவும் முடியாது. நற்செய்தி விழுமியங்களை முதன்மைப்படுத்தி வாழ்ந்தால் ஏராளம் தொல்லைகள். இதனால் எதிர்காலத்தை பற்றி அறிய ஆவல்கொண்டு கத்தோலிக்கத்தின் நம்பிக்கைக்கு முரணாகச் செல்லுகின்றோம்.

இன்று நம்மில் எத்தனை பேர் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறோம்? கத்தோலிக்கர்கள் எனக் கூறிக்கொண்டு பங்குத் தளங்களில், பக்திக்குழுக்களில் பைபிளை தூக்கிக் கொண்டு வேதம் போதிக்கின்ற வேளை கை பார்க்கின்ற நல்ல சாத்திரக்காரரை வாழ்நாள் முழுவதும் நல்ல காலம் வருகிறது என்ற சொற்களையே கேட்டுக் கொண்டிருந்தால் பரவாயில்லை. அந்த எதிர்காலத்தில் பிரச்சினைகள் மலையாகக் குவிந்து கிடந்தால் ஏன் இதைத் தெரிந்து கொண்டோம் என்று பிரச்சினையில் வருத்தப்படுவோம்.



எனவே எதிர் காலத்தைத் தெரிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதியையாவது அந்த எதிர்

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

காலத்தை எதிர்கொள்ளும் மனப் பக்குவத்தை வளர்ப்பதில் செலவிட்டால், எவ்வளவோ பிரச்சினை களை வெல்லலாம். எதிர்காலம் என்பதில் பிரச்சினை கூட்டமாக சேர்த்து வந்தாலும், அந்தக் கூட்டத்தின் மத்தியில் நல்லவைகளை, நல்லவர்களைப் பார்த்து கைகுலுக்கிக் கொள்ளும் பக்குவம் நாம் பெறவேண்டும். இதை ஒரு உருவகத்தில் சொல்ல வேண்டுமெனில், எதிர்காலம் மலைபோல் குவிந்த ஒரு குப்பையாக தெரிந்தாலும், அந்த குப்பையின் நடுவிலும் வைரங்கள் மின்னுவதை நம் கண்கள் பார்க்கும் போது, குப்பை மறைந்து விடும், வைரங்கள் மட்டும் தெரியும். குப்பைகளை விலக்கி, வைரங்களைப் பார்த்துச் சேர்க்கும் மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ள இறைவன் துணையை நாடுவோம்.

**ஹால்ஸ் கன்னிச் சதம்**

# பாகிஸ்தானை வீழ்த்தி பதிலடி கொடுத்தது இங்கிலாந்து



பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகள் மோதிய 2 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அபுதாபியில் பகல்-இரவு ஆட்டமாக நேற்று முன்தினம் நடந்தது. முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 283 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர் அலெக்ஸ் ஹால்ஸ் சதம் அடித்தார்.

22 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடும் அவருக்கு இது முதல் செஞ்சூரியாகும். ஹால்ஸ் 109 ஓட்டங்களும் ஜோரூட் 63 ஓட்டங்களும் ஜேசன் ராய் 54 ஓட்டங்களும் எடுத்தனர். வகாப் ரியாஸ் 3 விக்கெட்டும், முகமது இர்பான், அப்திகார் அகய தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய பாகிஸ்தான் அணி 45.5 ஓவரில் 188 ஓட்டங்களில், சுருண்டது. இதனால இங்கிலாந்து அணி 95 ஓட்டங்களில் அபார வெற்றி பெற்றது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு அந்த அணி பதிலடி கொடுத்தது. பாகிஸ்தான் அணியில் சர்பிராஸ் அகமது அதிகபட்சமாக 64 ஓட்டங்கள் எடுத்தார். வோக்ஸ் 4 விக்கெட்டும, வில்லி 3 விக்கெட்டும் எடுத்தனர். 4 போட்டிகொண்ட ஒருநாள் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையிலுள்ளது. 3ஆவது ஆட்டம் வருகிற 17 ஆம் திகதி சார்ஜாவில் நடைபெறவுள்ளது. (க)




# வங்கப் புலியிடம் வீழ்ந்தது சிம்பாவே



வங்காளதேசம்- சிம்பாவே கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டி நேற்று முன்தினம் மிர்புரில் நடைபெற்றது. டாஸ் வென்ற வங்காளதேச அணி முதலில் பீல்டிங் தேர்வு செய்தது. அதன்படி சம்பாவே முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் வாலெர் 31 பந்தில் 4 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் 68 ஓட்டங்கள் குவித்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் அவுட்டாக, சிம்பாவே அணி 131 ஓட்டங்களில் ஓல் அவுட் ஆனது.

132 ஓட்டங்கள எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளசேதம் துடுப்பெடுத்தாட தொடங்கியது. தமீம இக்பால் (31), மெக்முதுல்லா (22 அவுட இல்லை) ஆகியோரின் ஆட்டத்தால் வங்காள தேசம் 17.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 136 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் வங்காளதேசம் 1-0 என முன்னிலையில் உள்ளது. 2 ஆவது மற்றும கடைசி இருபது-20 போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க)


# உத்தப்பாவுக்கு டும் டும் டும்

இந்திய கிரிக்கெட் அணி வீரரான ராபின் உத்தப்பா, தனது காதலியான சீட்டல் கவுதமை திருமணம் செய்யவுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணிக்காக அறிமுகமானவர் ராபின் உத்தப்பா, தற்போது ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி வருகிறார்.

இந்நிலையில் இவர் தனது காதலியான சீட்டல் கவுதமை திருமணம் செய்யவுள்ளார், நேற்று முன்தினம் இவர்களது திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. இதற்கான அறிவிப்பை டுவிட்டரில் வெளியிட்டுள்ள உத்தப்பா, காதலியுடன் இருக்கும் புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார்.

மேலும் தனது வாழ்நாளின் எஞ்சிய காலத்தை அழகான பெண்ணுடன் செலவிடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.






# குட்டி விமானம் வாங்கிய கிறிஸ்டியானோ ரொனால்டோ



போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ 19 மில்லியன் யூரோ விலையில் குட்டி விமானம் ஒன்றை வாங்கியுள்ளார்.

உலகின் பணக்காரக் காற்பந்து வீரராக கருதப்படும் கிறிஸ்டியானோ ரொனால்டா, தற்போது ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த சீசன் முடிந்தவுடன் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பாரீஸ் செயின்ட் ஜெர்மயின் அணியில் இணையவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அவர் "கல்ப்ஸ்ட்ரீம் ஜி200" ரக, 8 முதல் 10 பேர் செல்லக்கூடிய விமானம் ஒன்றை 19 மல்லியன் யூரோ கொடுத்து வாங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகத்திலேயே காறபந்து விளையாட்டு மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் வரிசையில் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# எம்மில் சிலர்...

கான தீர்வுகள் இன்னமும் எட்டப்படாத நிலையில் உள்ளன. மாறாக நாம் போராடும் போதெல்லாம் பொய்யான வாக்குறுதிகளை வழங்கியும், எதோ ஒரு வகையில் எமது போராட்டத்தை குழப்பும் வகையிலேயே ஆளும் வர்க்கம் செயற்பட்டு வந்தது - வருகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் எம்மால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கும் இது தான் நடந்தது. ஆகையால்தான் நாம் வெறும வாக்குறுதிகளை நம்பாமல் தீர்வு வழங்கப்படும் வரை போராடுவது என்று முடிவு செய்துள்ளோம். இந்த தொடர் போராட்டத்தில் பலர் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலை தொடர்ந்தால் எங்களில் சிலர் உயிரிழக்கவும் யநேரிடலாம். ஆனால் முடிவு கிடைக்கும் வரை போராடுவது என்ற எமது நிலைப்பாட்டில் நாம் உறுதியாகதான் உளளோம். நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு எம்மை இறப்பிலிருந்தாவது பாதுகாக்கின்றதா? எனப் பார்ப்போம்.

எங்கள் விடுதலையை வலியுறுத்தி எமது தாயக உறவுகள் பூரண ஹர்த்தால் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். அவர்களுக்கு எமது கண்ணீருடன் நன்றி கூறுகின்றோம். எமது விடுதலைக்காக தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்த போது, ஏன் பல்வேறு கட்சிகளால் பிரிந்துள்ள தமிழ் அரசியல்வாதிகளால் ஒன்றிணைய முடியவில்லை?

இவர்கள் ஒன்றிணைந்து போராடினால் எமது விடுதலை என்பது சிறு விடயம். நாங்கள் ஒன்றினை கோருகின்றோம், மக்கள் எம்மோடு உள்ளார்கள். அதேபோல் தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக சிந்தித்து எமது விடுதலைக்காக ஒன்றிணைந்து செயற்படுங்கள், இங்கு நாங்கள் ஒவ்வொரு நிமிடமும சாவினை சுமக்கின்றோம் என்று உருக்கமாக தெரிவித்துள்ளனர்.

மேலும் எமக்கு விடுதலை கிடைக்காவிடின் பிணமாகவாவது சிறையை விட்டு செல்ல தயாராக உள்ளதாக சிறைச்சாலைகளில் உணவுதவிர்ப்பை மேற்கொண்டுள்ள அரசியல் கைதிகள் மிகவும் வேதனையுடன் அறிவித்துள்ளனர். (செ-4-9)

# என்மகனைத்...

உயிரோடு எரித்து கொன்று விட்டார்கள். பின்பு 2007 ஆம் ஆண்டு எனது இரண்டாவது இருபத்து ஐந்து வயதுடைய மகனான சி.ராஜ்குமார் வன்னியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பின்பு கடந்த 2008 ஆம் ஆண்டு சி.பாலசிறி எனும் எனது கடைசி மகன் காணாமல் போய்விட்டார். நான் தற்போது மரக்கறி வியாபாரம் செய்து வருகின்றேன். என்னால் நடக்க கூட முடியவில்லை. எனது மகனை தேடி கடந்த ஏழு வருடங்களாக அலைந்து கொண்டுள்ளேன்.

எனது மகனை தருமாறு முன்னைய அரசாங்கத்திடமும், தற்போதைய அரசாங்கத்திடமும் பல தடவைகள் கோரியுள்ளேன். ஆனால் எவரும் என் மகனை கண்டு பிடித்து தரவில்லை. எனது மகன் இருந்தால் நான் இவ்வாறெல்லாம் வேலைக்கு போய் கஷ்டப்பட வேண்டிய தேவை இருக்காது.

நாங்கள் பருத்தித்துறையை சேர்ந்தவர்கள், காணாமல் போன எனது கடைசி மகன் பாலசிறி வடமராட்சியில் குத்து சண்டையில் பல சாதனைகளை நிகழ்த்தியவர். எனது மகனை யாராவது மீட்டு தாருங்கள். இன்று வரை நான் இத்தனை இழப்புக்களுக்கு மத்தியிலும் உயிரோடு இருப்பதற்கான காரணம், எனது மகன் எங்கோ உயிரோடு இருக்கின்றான் என்ற நம்பிக்கையில்தான்.

எங்களை எமது சமூகமே புறந்தள்ளும் அவல நிலையில் நாங்கள் உள்ளோம். கிராம சேவகர்களிடம் எமது பிள்ளைகள் தொடர்பில பதிவுகளை மேற்கொள்ள சென்றால், ஏளனத்துடன் பார்த்து, சும்மா நெடுக வராதயுங்கோ, உங்கள் பிள்ளைகள் மட்டும் காணாமல் போகவில்லை, எல்லோருடைய பிள்ளைகளும்தான் காணாமல் போயுள்ளனர்.

நாங்கள் ஒண்டும் இங்க உங்கட வேலை மட்டும் பார்க்கவில்லை என கூறுகின்றனர். இவ்வாறுதான் பெரும்பாலான அரசு உத்தியோகத்தர்கள் எம்மோடு பேசுகின்றனர். ஏற்கெனவே வலியோடு இருக்கும் நாம் இவர்களுடைய செயற்பாடுகளால் ஒவ்வொரு நாளும் துன்பப்பட வேண்டியுள்ளது.

எங்கள் அரச அதிகாரிகளே எம்மை அலட்சியமாக நடத்தினால் சிங்கள அதிகாரிகள் எவ்வாறு எம்மை நல்ல விதத்தில் நடத்துவார்கள்? நாங்கள் ஒன்றும் இவர்களின் உதவித்திட்டங்களுக்கு போகவில்லை, எம் மகனை கண்டுபிடித்து தருமாறுதான் கோருகின்றோம்.

என காணாமல் போகச்செய்யப்பட்ட மகனின் தாய் கதறியழுது கொண்டு ஊடகங்களிடம் கூறினார். எங்களுக்கு இவ்வாறு போராடிக்கொண்டே இருப்பதுதான் முடிவா? நாங்களும் பிறரை போன்று குடும்பங்களுடன் சந்தோசமாக வாழ முடியாதா? என்ற அந்த தாயின் கேள்விகள் நெஞ்சங்களை கனக்க வைத்தன. (செ-4)

# வடக்கெங்கும்...

வர் உயிரிழந்தும் உள்ளார். கிளிநொச்சியில் உள்ள பெரும்பாலான குளங்களின் வான கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதனால் அங்குள்ள வீதிகள் முழுவதும் வெள்ளத்தால் நிரம்பி வழிகின்றது. இதனால் சில வீதிகள் ஊடான போக்குவரத்துக்களும் நேற்று முழுவதும் தடைப்பட்டிருந்தன.

கிளிநொச்சியில் பெய்த அடைமழையைத தொடர்ந்து நேற்று மாலை ஏற்பட்ட பலத்த சுழற்காற்றினால் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. ஏற்கெனவே பல்வேறு பாதிப்புக்களைச் சுமந்த சாந்தபுரம் மக்களே சூறாவளியினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவுக்கு தற்காலிக கொட்டில்களில் வாழ்கின்ற மக்களின் கொட்டில்களே சூறாவளியினால் முற்றாக அழிவடைந்துள்ளன.

அத்தோடு வீட்டுத்திட்ட வீடுகளின் பலவற்றில் கூரைகள் காற்றினால் தூக்கி எறியப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட சூறாவளியினாலும் சாந்தபுரத்தில் பல குடும்பங்கள் பெரும் நெருக்கடிக்குள் காணப்படுகின்றன. முற்றாக சேதமடைந்த மற்றும் கூரைகள் அற்ற வீடுகளில் வாழ்ந்து மக்களின் உடைமைகள் உள்ளிட்ட ஆடைகள் என்பன நீரில் நனைந்துள்ளமையினால் பெரும் அவதிப்படுகின்றனர்.

வடக்கின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான இரணைமடு குளத்திற்கு தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக அதிகளவு நீர்வந்துகொண்டிருக்கிறது. எனவே அதிகரித்த நீர், குளத்திற்கு வருவதனால் முதற்கட்டமாக ஐந்து வான்கதவுகளும் நேற்று திறக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்கள் வெகுவாக பாதிப்படைந்துள்ளனர். வவுனியாவில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. மழை காரணமாக சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழும் 189 குடும்பங்கள் கடும் துன்பங்களை சந்தித்து வருகின்றன.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்த மக்களை தங்க வைப்பதற்காக 1994 ஆம் ஆண்டு சிதம்பரபுரம் நலன்புரிநிலையம் உருவாக்கப்பட்டு 4ஆயிரம் வரையான குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டிருந்தன. இவர்களில் பலர் மீள்குடியேற்றப்பட்ட போதும காணிகளற்ற 189 குடும்பங்கள் தற்போது மீள குடியேற்றம் செய்யப்படாத நிலையில் அங்கேயே தங்கியுள்ளன.

இவர்களுக்கான நிவாரணம், மின்சாரம உள்ளிட்ட அரச உதவிகள் முழுமையாக நிறுத்தப்பட்ட நிலையில் மழை வெள்ளத்திற்கும் முகம் கொடுத்துள்ளனர். தற்காலிக தார் சீற்றுக்களினால் ஆன கூரைகள் மழைக்கு நனைந்து கிழிந்து வீடுகளுக்குள் மழை நீரும், வெள்ள நீரும் புகுந்த நிலையில் இடிந்து விழும் நிலையில் உள்ள வீடுகளுக்குள் இருந்து வாழ போராடுகின்றனர்.

யாழ்.மாவட்டம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான மகள் இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்கியுள்ளனர். யாழ்.நகர் மற்றும் புறநகர் வீதிகளிலும் மழை நீர் தேங்கி காணப்பட்டமையால போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் ஆயிரத்து 338 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்தது. சண்டிலிப்பாய், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 254 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார். (செ-4-9)

# பரிஸ் தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் பொறுப்பேற்பு

(டமாஸ்கஸ்)

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் இடம்பெற்ற தொடர் தாக்குதல் சம்பவங்களுக்கான பொறுப்பை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது என ராயட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரான்ஸ் மீது தாக்குதல் நடத்தவேண்டியது தமது அதியுச்ச இலக்காக இருந்தது என்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு தெரிவித்துள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிரான பிரான்ஸின் நடவடிக்கைக்கு இது பதிலடியாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரிஸ் நகரத்தின் மையப்பகுதியில் தாக்குதல்களை நடத்துவதற்கு ஆயுதங்கள், தற்கொலை பெல்ட்டுகள் மற்றும் தானியங்கி துப்பாக்கிகளுடனும் எங்கள் குழுவினரை அனுப்பி வைத்தோம் என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ் மக்கள் அனைவரும் மன உறுதியுடன் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அந்நாட்டு ஜனாதிபதி பிரங்கொய்ஸ் ஹொலாந்தே, இந்த சம்பவமானது யுத்தத்தை அறிவிக்கும் தாக்குதல் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# சிறுநீரகம் பாதி...

தலை செய்யக்கோரி கடந்த பல வருடங்களாகவே போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களது போராட்டம் நாட்டில் புதிய அரசு ஆட்சி பொறுப்பேற்றதன் பின் முன்னைய காலங்களிலும் பார்க்க முனைப்பு பெற்றுவருகின்றது.

கடந்த மாதம் நிபந்தனையற்ற தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் ஒன்றினை தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்திருந்தனர். இப்போராட்டம் அரசின் வாய்மொழி உறுதிகளினால் ஐந்தாவது நாளான்று கைவிடப்பட்டது. தாம் ஏமாற்றப்பட்டதனை உணந்த கைதிகள் மீண்டும் தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து இன்று எட்டாவது நாளாகவும் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்பில் கைதிகள் பலர் நீர் ஆகாரம் அருந்தாமலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் உடலில் நீர்த்தன்மை இல்லாமல் 30ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளிற்கு சிறுநீரகம் பாதிப்புற்றுள்ளதாக நேற்றைய தினம் கைதிகளை கொழும்பு மகசின் சிறையில் சென்று பார்வையிட்ட சட்ட வைத்திய அதிகாரி மூலமாக அறிய கிடைத்துள்ளது.

சிறையில் அரசியல் கைதிகள் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதனாலும், சுகவீனமுற்ற கைதிகளில் பலர் மருத்துவ உதவிகளை மறுத்து வருவதனாலும், சிறை அதிகாரிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்களை மருத்துவமனைகளில் சேர்ப்பிப்பதற்கு கடும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். கைதிகளை வலுக்கட்டாயமாக மருத்துவமனைக்கு தூக்கிச்செல்லும் முயற்சிகளும் மகசின் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் கைதிகளுக்கும் சிறைச்சாலை பாதுகாவலர்களுக்கும் இடையில் நேற்றைய தினம் சிறிய அளவிலான முறுகல் நிலை காணப்பட்டிருந்தது. இதனால் சிறிது நேரம் அங்கு பதற்ற நிலை காணப்பட்டதாகவும் நேற்றைய தினம் அங்கு சென்று கைதிகளை பார்வையிட்ட சட்டத்தரணிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார். (செ-4)

# கடும் மழை...

வும் மழையுடனான காலநிலை காரணமாக புத்தளம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் தாழ் நில பகுதிகளில் பல நீரில் மூழ்கியுள்ளன.

மேலும் காங்கேசன்துறை தொடக்கம் மன்னார், கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணிக்கு 60கி.மீ முதல் 70 கி.மீ வரையான வேகத்தில் வீசவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களில் இருந்து பொது மக்கள் தம்மை பாதுகாக்க முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (செ-11)

# இரத்ததான முகாம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று நடைபெற இருந்த இரத்ததான முகாம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

சுன்னாகம் கோரிச்தே றோட்டறிக் கழகமும் சுன்னாகம் அந்தோனியார் இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சுன்னாகம் அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் மேற்படி இரத்ததான முகாம் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் முன்னர் பிரசுரமான செய்தி உள்ளே... (செ-11)

# வான் பகுதியில் மர்மமான ஒளி

(கொழும்பு)

பொலநறுவை-வான் பகுதியில் மர்மமான ஒளி ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது. சுமார் 40 நிமிடங்கள் வரையில் இந்த ஒளி நீடித்துள்ள தாகவும் இதனை மீனவர்கள் கண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் WT 1190F என்ற மர்ம விண்பொருள் ஒன்று இலங்கையின் வான்பரப்பில் பிரவேசித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

36 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் விழுந்த குறித்த விண்பொருள், வளிமண்டலத்தில் காற்றுடன் உராய்வுக்கு உள்ளாகி தீப்பற்றி எரிந்து சிதறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை நாசா உள்ளிட்ட விண்வெளி ஆய்வு மையங்கள் காட்சிப்படுத்தியுள்ளன.

இந்த விண்பொருள் தொடர்பிலான வீடியோ மற்றும் புகைப்பட தகவல்களை ஆய்வாளர்கள் திரட்டியுள்ளனர். (செ-12)

# உயிர் ஆபத்தில்...

செய்த 31 அரசியல் கைதிகளில், 7 பேர் சிங்களவர்கள். இங்கு கூட ஒரு வித பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அதியுச்ச தண்டனையைக் கூட அவர்களின் குடும்ப உறவுகளால் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.

இதற்கும் மேலாக ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கக் கூடிய நீங்கள் சிறைக் கைதிகளின் உயிர் சார்ந்த பிரச்சினைகளில் விரைவாக செயற்படாத பட்சத்தில்,

சிறையில் ஒரு உயிர் இழக்கப்படுமாக இருந்தாலும் கூட அதன் தாக்கம் வடக்கு கிழக்கில் பாரிய விபரீதத்தை ஏற்படுத்தி விடும என்பதனை தங்களுக்கு நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள்- வெளிவிவகார அமைச்சர் மற்றும் இராஜதந்திரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

தையல்
இந்தியாவில் 8 வருட கால அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறிபிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும். (2503)
இடம் :- குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு :- 0766399277

நடமாடும் மிருகவைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில், மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு
0779738802
0212242502 (2299)
காலை 9-12, நாவலர் றோட், நல்லூர்.

# கைதிகளின்...

அங்கு தொடர்ந்து பேசிய அவர், புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்வதில் எவ்வித அநீதியும் கிடையாது. போரின் இறுதிக் காலத்தில் பன்னிரண்டாயிரம் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டும் சரணடைந்துமிருந்தனர்.

இவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்தில் மீள இணைக்கப்பட்டனர். எனவே நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த புலிச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுவது நியாயமானது.

சிலர் இந்த விடுதலையை அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்துகின்றனர்.

சில நிபந்தனைகளின் அடிப்படையில் இக் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் கண் காணிக்க வேண்டும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.


மேலும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்ம நாதன் சுதந்திரமாக நட மாடித்திரியும் போது, புலி சந்தேக நபர்களை விடுதலை செய்வது நியாயமான விடயம் என்று ஜனநாயகக் கட்சி தலைவவர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (செ-12)

வெளிநாட்டில் வருவாயுடன் கல்வி
Hotel Management-in Malaysia
(சி-2723)
A/L Pass/Fail-வருவாய் வருத்தம் எதற்கு மலேசியா இருக்கு
கவர்ச்சிகரமான மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவுகளுடன் உங்கள் இனிய வாழ்க்கையை ஆரம்பியுங்கள்
கற்கைநெறி கட்டணம் இலவசம்* *Conditions Apply
Limited seats only

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
077-3013060, 021-4926222
107, B 1/1, Galle Rd, Wellawatte, Colombo 6

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வதற்கான தரம் வாய்ந்த ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்
SPOKEN ENGLISH WITH GRAMMAR 120 Hours
சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி
DIPLOMA IN ENGLISH 200 Hours
New Batches Start On :
B1 : 21-11-15 at 9.00 am B3 : 23-11-15 at 9.00 am
B2 : 22-11-15 at 2.00 pm B4 : 24-11-15 at 2.00 pm
Study IELTS at CIL & Get 6+ Band
SPOKEN SINHALA CLASSES
BI : Sat & Sun - 9.30-11.30am B2 : Sat & Sun - 3.00 - 5.00pm
(சி-2724)
CIL Cambridge Institute of London
No : 17, 3rd Lane, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108

# மரண அறிவித்தல்



## அமரர் கந்தையா தர்மபாலன்

(உரிமையாளர் LUXON Communication ஈச்சமோட்டை)

காரைநகர் பொன்னாவளை களபூமியைப் பிறப்பிடமாகவும் இல. 60, ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மபாலன் 13.11.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மாரிமுத்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், விமலராஜன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விமலரூபன் மற்றும் .விமலாகரன் (லண்டன்), விமலசாந்தன் (LUXON Communication), விமலக்ஷன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாரூபி (அவுஸ்திரேலியா), சிவவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விதுசனின் (அவுஸ்திரேலியா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வராஜா (மாத்தையா) மற்றும் இராஜரட்ணம் (லண்டன்), துரைராசா (லண்டன்), திருமதி ஜெயந்திரன் ஜெயசோதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15.11.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது ஈச்சமோட்டை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (2295)

இல. 60, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 7913,
077 411 5335 விமலசாந்தன் (மகன்)

தகவல்:
மனைவி-சரஸ்வதி,
பிள்ளைகள், மருமக்கள்

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

(2296)
• இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் மிகப்பெரிய வலையமைப்பை கொண்ட சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
• 136 நாடுகளில் 1092 கிளைகள்(இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்)எமது தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது. www.ambafrance-lk.org
• ஆசிரியர்கள்: பிரான்ஸிலிருந்து வருகைதரும் நிபுநர்களால் பயிற்றுவிக்கப்படும் சிறந்த ஆற்றலும் அனுபவமுள்ளவர்கள், யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF ஆசிரியர்கள் மட்டுமே சர்வதேச பரீட்சைகளை நடத்துகிறார்கள்.
• இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகிறது. இச்சான்றிதழ்களை எந்தவொரு நாட்டிலும் சமர்ப்பிக்க முடியும்.
• பிரெஞ்சு மொழிபெயர்புகள். VISA FORM நிரப்புதல்...
• யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA...(திருமணம் மூலம்/தொழில்/ படிப்பிற்காக)செல்கிறார்கள். எமது மாணவர்கள் விரைவாக பிரெஞ் பேசுகிறார்கள்..
ஆரம்பம் 22.11.2015 உடன் பதிவை உறுதிப்படுத்துக
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

வேலை ஆட்கள் தேவை
யாழ் வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்திய சாலைகளில் நோயாளர்களை பராமரிப்பதற்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) (2504)
தொடர்புகளுக்கு
0215685705

# வரணி மத்திய கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

### "பழைய மாணவர்கள் சங்கம விழா - 2015"

மேற்படி விழாவினை இவ்வாண்டு இறுதியில் நடாத்துவதாக தீர்மானித்துள்ளோம். இவ் விழாவில் சிறப்பு நிகழ்வாக இறுதியாக பல்கலைக்கழக, கல்வியியற் கல்லூரி அனுமதி கிடைத்தவர்களையும் மற்றும் க.பொ.த (சா/த)இல் உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களையும் இவ்வாண்டு ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் கௌரவிப்பதாக முடிவு எடுத்துள்ளோம். இந் நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தவராக உள்ள மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என தீர்மானித்திருப்பதால் அங்கத்தவராக இணைந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் எதிர்வரும் நவம்பர் 30-ம் திகதிக்கு முன்பாக பின்வரும் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

0779595757 - பழைய மாணவர் சங்க செயலாளர்
0771301050 - பழைய மாணவர் சங்க பொருளாளர்

இங்ஙனம்
பழைய மாணவர் சங்கம்
வரணி மத்திய கல்லூரி
(C-2725)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியாவில் முதன் முதலாக
SIKARAM HOTEL SCHOOL
UK – SWISS – AUSTRALIA – SINGAPORE – MALAYSIA
விரும்பிய எந்த நாட்டுக்கும் சென்று இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க
உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்

UK Certified Hotel Management Leading to University of Sunderland UK
(சி-2725)
வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
SPOT ADMISSION

| | |
|---|---|
| 16-11-2015 திங்கள் 2 மணி | யாழ் சிகரம் விரிவுரை மண்டபம் |
| 17-11-2015 செவ்வாய் 9 மணி | மன்னார் YMCA மண்டபம் |
| 18-11-2015 புதன் 9 மணி | வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல் |
| 18-11-2015 புதன் 2 மணி | கிளிநொச்சி சோலைவனம் விடுதி |

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
பதிவுகளுக்கு 0773 616 798
SIKARAM HOTEL SCHOOL
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 0011
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
web : www.sikaram.lk
Green Grass The Valampuri
19-11-2015
வியாழன் 2.00 மணி
யாழ் கிறீன் கிறாஸ் வலம்புரி ஹொட்டேலில்
GRAND HOTEL SHOW
ஹொட்டேல் கற்கை விளக்கச் செயலமர்வு
Special Workshop on Hotel Management
முற்பதிவு அவசியம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham


வள்ளுவர் ஆண்டு 2046 15.11.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 40




# தமிழ் அரசியல் கைதிகளை
# விடுதலைசெய்

## முடங்கியது வடக்கு-கிழக்கு



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

கந்தசஷ்டி விரதகாலம் ஆலடிப்பிள்ளையார் கோயிலில் அடியார் கூட்டம் அதிகரித்திருந்தது. ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை எங்களில் இருந்து அழிப்பதற்கான விரதம் இது.

சூரன் வேறு யாருமல்ல. அவன் எங்களிடம் தான் இருக்கிறான். எங்களிடம் இருக்கின்ற சூரனைக் கட்டுப்படுத்த முருகனை எங்கள் இதயத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

முருகா! என்ற நாமம் எங்கள் வாழ்வுக்கு என்றும் பக்கபலம். இப்படிப் பண்டிதர் பரமலிங்கத்தின் தெய்வீக உரை அமைந்திருந்தது. பண்டிதரின் தெய்வீக உரையை அடுத்து ஆலடி மாநாடு வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆரம்பமாயிற்று.

**வாத்தியார்:** இன ஒற்றுமைக்காக குரல் கொடுத்த வணக்கத்திற்குரிய மாதுளுவாவே சோபிததேரர், முதுபெரும் புலவர் சி.வை. சிற்றம்பலம் ஐயா, ஈழத்தின் சிறுகதை ஆக்கத்திற்கு களம் அமைத்துத் தந்த தலைசிறந்த எழுத்தாளர் சிற்பி சிவசரவணபவன் ஐயா ஆகியோரின் மறைவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம்.

(வாத்தியாரின் அறிவிப்போடு ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்)

**விதானையார்:** அது சரி வாத்தியார் எங்கட தமிழ் அரசியல் கைதிகளின்ர விடுதலைக்காகவும் நாங்கள் பிரார்த்தனை செய்தால் என்ன?

**வாத்தியார்:** கட்டாயம் செய்ய வேண்டும். நான் ஆலடிப் பிள்ளையாரைக் கும்பிடுகிற போது, நீண்ட காலமாக சிறைகளில் வாடுகின்ற எங்கட பிள்ளைகளுக்கு விடுதலை கிடைக்க வேணும் என்று பிள்ளையாரை வேண்டிப் போட்டுத்தான் வந்தனான்.

ஆலடி மாநாட்டிலும் எங்கட பிள்ளைகளின்ர விடுதலைக்காக கடவுளைப் பிரார்த்தனை செய்வம்.

(வாத்தியாரின் அறிவிப்போடு ஆலடி மாநாட்டில் பிரார்த்தனை இடம்பெற்றது.

கங்காணி கார்த்திகேசன், ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.... என்ற வள்ளலாரின் பாடலைப் பாடினார்.

எல்லாம் வல்ல பரமபிதாவே சிறைபடும் தமிழ் உறவுகளை மீட்க மீட்பரே நீர் உதவி செய்தருளும். கைதிகளின் விடுதலையில் கவனம் செலுத்துவதுபோல நாடகம் ஆடுவோரை அரசியலில் இருந்து முற்றுமுழுதாக அகற்றி நல்லவர்களை அரசியலுக்குத் தாரும்.



## எங்கட சம்பந்தர் ஐயா மௌனித்துப் போனது ஏன்?

தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று தமிழ்மக்களுக்குத் துரோகம் இழைத்து அரசுக்கு திட்டம் போட்டுக் கொடுக்கின்ற வேடதாரிகளை தமிழ் அரசியல் தலைமையில் இருந்து வெளியேற்றித் தாரும் பிதாவே... இவ்வாறாக பிரார்த்தனைகள் நடந்து முடிந்தன)

**விதானையார்:** அது சரி பண்டிதர் மந்திரருக்கு அவுஸ்திரேலியாவில நடந்ததை சில ஊடகங்கள் மறைத்துப் போட்டினம். என்ன சங்கதி.

**பண்டிதர்:** எல்லாம் தேவை கருதித்தான். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லுறன். ஊடகங்கள் பாவம் செய்யக்கூடாது. செய்திகளைப் பரிமாறுவது ஊடகங்களின் கடமை. இந்த இடத்தில அவர் என்ர ஆள். இவர் அவரின் ஆள் என்று பார்ப்பது மிகப்பெரும்பாவம். அது தர்மமும் அல்ல.

**மூப்பர்:** இது ஒரு புறம் இருக்க எங்கட வடக்கின் முதலமைச்சரை பதவி நீக்க வேண்டும் எண்டு மந்திரர் சொன்னதாக ஊடகங்களில் செய்தி வந்திருக்கு ஏனாம்.

**வாத்தியார்:** கடந்த பொதுத்தேர்தலில தங்களை ஆதரிக்கவில்லை என்றுதானாக்கும்.

**பண்டிதர்:** இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட வேணும் என்றுதான் மகாத்மாகாந்தி சொன்னவர். இந்தியாவுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தது நாங்கள்தான் என்று பிரசாரம் செய்து மக்களிட்ட வாக்குப் பெறுவது தர்மம் அல்ல என்பதால மகாத்மா காந்தி அப்படிச் சொன்னார். எங்கட வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவும் நல்ல- நேர்மையான அரசியல்வாதிகளுக்கு வாக்களியுங்கள். விலைபோன அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்காதீர்கள் என்று கூறினவர்.

அதுசரிதானே. நீதியானவர்கள், நேர்மையானவர்களுக்கு வாக்களியுங்கள் என்று சொல்லுறது நல்லதுதானே!. நாங்கள் ஒவ்வொருவரும் நேர்மையானவர்களாக இருந்தால் வடக்கின் முதலமைச்சர் கூறியதில கோபம் கொள்ளத் தேவையில்லை.

**விதானையார்:** என்ன இருந்தாலும் வடக்கின் முதலமைச்சரை பதவி நீக்க வேணும் எண்டு சொல்லுறது மிக மோசமான கருத்து. ஒரு இலட்சத்து 35 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்றவர் முதலமைச்சர். அவரைப் பதவியில இருந்து நீக்கிறதுக்கு உவையள் யார்.

**கங்காணி:** அது சரி விதானையார் எங்கட சம்பந்தமானவருக்கு என்ன? நடந்தது.

**மூப்பர்:** ஏன்? ஏதேனும் பிரச்சினையோ?

**கங்காணி:** எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எடுத்த பிறகு அவர் கதைக்கிறதைக் குறைத்துப் போட்டார். என்ன சங்கதி என்று தெரியவில்லை.

அவற்ற வாயை யாரோ அடைத்துப் போட்டினம். முன்பென்றால் சுட்டு விரலால் ஒரு உறுக்கு உறுக்கிக் கதைப்பார். இப்ப எதுவும் பேச முடியாதவராகிவிட்டார்.

**வாத்தியார்:** என்ன செய்யிறது வயதுமல்லோ போகுது.

**பண்டிதர்:** அவற்ற வயது போகுது என்பதற்காக நியாயத்தைச் சொல்லாமல் இருக்கிறது எந்த வகையில நியாயம். எங்கட தமிழ் அரசியல் கைதிகள் தங்கட விடுதலைக்காக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில குதித்திருக்கினம். பலரின்ர உடல் நிலை மோசமாகிவருகுது. இந்த நேரத்தில சம்பந்தமானவர் இந்தியாவுக்குப் போனது ஒரு பொறுப்பற்ற வேலையல்லோ.

**கங்காணி:** எங்கட தமிழ் அரசியலில பொறுப்பற்ற வேலைகள் தானே நடக்குது. கடந்த 10 ஆம் திகதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின்ர ஏழாவது நினைவுதினம் சாவகச்சேரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

ரவிராஜ் உண்மையான தமிழ்ப்பற்றாளர். தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற பிரச்சினைகளை சிங்கள மொழியில சிங்கள மக்களுக்கு ஊடகங்கள் மூலம் எடுத்துக்கூறியவர் ரவிராஜ். கொழும்பில துணிந்து குரல் கொடுத்த ரவிராஜ் இன்றிருந்தால்... என்ன? செய்யிறது எங்கட கெடுகாலம் துணிந்து பேசக்கூடிய ஒரு சிறந்த தமிழ் அரசியல்வாதியை நாங்கள் இழந்தமை பேரிழப்புத்தான். இருந்தும் அந்தாளின்ர நினைவுதினம்கூட எதிர்கால அரசியல் இலாபத்திற்காக நடத்தப்பட்டதாகப் பலரும் பேசிக்கொள்கினம். அதிலும் அங்கு ஆற்றப்பட்ட உரை இலங்கையில் சர்வதேச விசாரணை நடக்கப் போகிறது என்ற மாதிரி இருந்ததுதான் சனத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. இலங்கை தொடர்பில ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின்ர தீர்மானத்தை தெளிவாக விளங்கிக்கொள்ளாதவர்கள் எல்லாவற்றையும் குழப்புவதாகவும் அங்க உரையாற்றியவர் கூறியிருந்தார்.

இலங்கையில உள்ளகப் பொறிமுறை விசாரணை இல்லாமல் ஒரு சர்வதேச விசாரணைக்கு ஒப்பான விசாரணையே நடைபெறும் என்ற மாதிரியும் பேசியிருந்தார்.

அவற்ற உரையைப் பார்த்த போது ஏதோவொரு நோக்கத்தை நிறைவேற்றுகின்ற எண்ணப்பாடு தெரிந்தது.

**மூப்பர்:** சரி ஏன் நாங்கள் அவசரப்படுவான். விசாரணை நடைபெறும் போது எல்லாம் தெரியும்தானே!

**கங்காணி:** என்ன தெரியிறது. சர்வதேச விசாரணை நடந்து முடிந்து விட்டது என்று சொன்னவர்கள் எதுவும் சொல்வார்கள். ஆனால் ஒன்று எங்கட சனம் இனிமேலாவது புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேணும். எங்கட தமிழ்ச் சனங்கள் ஒன்று சேர்ந்தால் எல்லாம் சரியா வரும். இப்படி கங்காணி சொல்ல அதை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



குருஷேத்திரம்

# கூட்டமைப்பை உடைத்த தமிழரசுக் கட்சி

தனிநாடு தேவையென்று போராடிய ஓர் இனம் இன்று தன் இனத்து தலைமைகள் தொடர்பிலேயே பெரும் குழப்பங்களைச் சந்தித்து நிற்கிறது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்டம் உலகம் முழுவதையும் இலங்கை மீது திசை திருப்பிய காலம் அது. தரை, கடல், வான் வழிகளில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்கள் மிகப்பெரும் வியப்பை உலகளவில் ஏற்படுத்தியிருந்தன.

இருந்தும் சர்வதேசத்தின் சூழ்ச்சியும் விடுதலைப்புலிகளின் தலைமை கொண்ட நெகிழ்வற்ற போக்கும் அனைத்தையும் பரிநாசப்படுத்தியது.

இப்போது தமிழ்மக்கள் யாரை நம்புவது என்ற கேள்விக்குறியோடு எதுவும் வேண்டாம் என்ற வெறுப்பு நிலையில் வாழுகின்ற சூழமைவுக்கு ஆளாகியுள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பலமான ஒரு கூட்டமைப்பை இலங்கைத் தமிழரசுக்கட்சி உடைத்துவிட்டது.


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதை திட்டமிட்டே காலம் கடத்தி வந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமை இப்போது கூட்டமைப்பை சின்னாபின்னமாக்கியது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் அரசியல் பலத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஒன்றிணைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியே முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது.


எனினும் விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று நினைத்த தமிழரசுக் கட்சித் தலைமை அதனைக் கனகச்சிதமாகச் செய்து முடித்தது.

இந்தச் சதித்திட்டத்திற்கு அ.விநாயகமூர்த்தி உதவி செய்தார். உடல் ஆரோக்கியம் முற்றுமுழுதாகப் பாதிப்படைந்திருந்த விநாயகமூர்த்தியை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்குவதன் மூலம் காங்கிரஸின் வகிபங்கை கூட்டமைப்பில் இருந்து வேரறுத்த தமிழரசுக் கட்சியின் சூழ்ச்சியை கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் புரிந்து கொள்ளாமல் இருந்ததுதான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்குள் இருந்து காங்கிரஸை வெளியேற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த சதித்திட்டம் சுரேஷ் பிறேமச்சந்திரனை வெளியேற்றுவதாக இருந்தது.







## சுரேஷ் பிறேமச்சந்திரனின் தோல்வி திட்டமிட்ட சதி

விடுதலைப்போராட்டத்திற்காக ஆயுதம் ஏந்திய இயக்கத்தின் தலைவர் என்ற வகையில் சுரேஷ் பிறேமச்சந்திரன் தொடர்பில் சிலபல விமர்சனங்கள் இருந்தாலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சுரேஷ் பிறேமச்சந்திரனை ஏற்றுக் கொண்டார்.

விடுதலைப்புலிகளின் போராட்ட உச்சத்தில் விடுதலைப்புலிகளை ஆதரிப்பதே பொருத்தமானது என்ற முடிவை அன்று சுரேஷ் பிறேமச்சந்திரன் எடுத்துக் கொண்டமை அவரின் இராஜதந்திரத்தின் உச்சத்தை நிரூபித்திருந்தது.

இருந்தும் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூட்டமைப்பிற்குள் இருந்தால் தமது சுயநலமிக்க அரசியல் சாத்தியமாகாது என்று நினைத்த தமிழரசுக் கட்சியின் தலைமை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு அடுத்தபடியாக சுரேஷ் பிறேமச்சந்திரனை கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றத் துணிந்து கொண்டது. இதற்காக கடந்த பொதுத்தேர்தலை தமிழரசுக் கட்சி மிக நுட்பமாகப் பயன்படுத்தியதென்பது முற்றிலும் உண்மையும் சத்தியமுமாகும்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் பெறவேண்டுமென்ற நினைப்பு தமிழரசுக் கட்சியிடம் அறவே இருந்திருக்கவில்லை. அவ்வாறானதொரு நினைப்பு இருந்திருக்குமாயின் சுரேஷ் பிறேமச்சந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா போன்றவர்களுக்கும் சேர்த்தே பிரசாரம் செய்திருக்க வேண்டும். ஆனால் அப்படியெதுவும் நடக்கவில்லை.


ஆக, பாராளுமன்றத் தேர்தலில் சுரேஷ் பிறேமச்சந்திரனை தோற்கடிப்பதன் மூலம் அவரை ஓரங்கட்ட தமிழரசுக் கட்சி நினைத்து அதனையும் அரங்கேற்றியது.

இவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ என்றவாறு நடந்த அதே நேரம் தனது கட்சியைச் சேர்ந்தவரும் நியாயத்தைத் துணிந்து பேசக்கூடியவருமான பேராசிரியர் சிற்றம்பலத்தை தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளர் என்று அறிவித்து விட்டு வெற்றி கிடைத்த பின்னர் அவருக்கு நியமன எம்.பி. பதவியைக் கொடுக்காமல் ஏமாற்றினர்.

ஆக, முதற்கட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இரண்டாம் கட்டத்தில் சுரேஷ் பிறேமச்சந்திரன், சட்டத்தரணி சிறிகாந்தா, பேராசிரியர் சிற்றம்பலம் என மூவரும் ஒரே தடவையில் ஏமாற்றப்பட்டனர்.

இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தனித்துவமே தீர்மானங்களை மேற்கொள்கின்றது. நடக்கிறது. எனினும் வடக்கின்





முதலமைச்சர் விக்கினேஸ்வரன் நீதி- நேர்மை- நியாயம் என்ற எல்லைகளை மீற மறுத்து வருவது தமிழரசுக்கட்சிக்கு பெரும் உபத்திரவமாகவுள்ளது.

இதனால் முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் பதவியில் இருந்து இறக்கவேண்டும் என்ற கருத்து கட்சிக்குள் முன்வைக்கப் படுகிறது.

இருந்தும் தமிழரசுக் கட்சியை இப்போது தங்கள் கைகளுக்குள் வைத்திருப்பவர்கள் யார்? அவர்கள் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் எங்ஙனம் நடந்து கொண்டனர் என்பதைத் தமிழ்மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

கூடவே, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வடபுலத்தில் இருந்து விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் விவகாரத்தை எடுத்துக்கொண்டு தமிழ் மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் குற்றஞ்சாட்டி நடைபெறப்போகும் உள்ளக விசாரணையில் அரசுக்குச் சாதகமான சாட்சியங்களை தாங்களே வெளிப்படுத்துகின்ற போக்குகளும் சம்பந்தப்பட்டவர்களின் நோக்கம் என்ன என்பதைத் தமிழ் மக்கள் ஐயம் தெளிவுற உணர்ந்து கொண்டுள்ளனர்.

இங்குதான் முதலமைச்சர் விக்கினேஸ்வரனை நீக்க வேண்டும் என்ற கருத்து தமிழ் மக்களிடம் ஆத்திரத்தையும் மனக் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

நிலைமை பிழைத்து விட்டது என்பதை உணர்ந்த தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் இப்போது விக்கினேஸ்வரனைப் பதவி நீக்க வேண்டும் என்ற கருத்து தனிப்பட்டது என்று கூறி தோஷ நிவாரணம் செய்கின்றனர். தனிப்பட்ட கருத்து எப்படியாகியும் இருக்கலாமா?

தமிழ்மக்கள் ஆத்திரமடையக்கூடிய கருத்துக்களைத் தனிப்பட்ட கருத்தாகக் கூறினால் அதற்கு நடவடிக்கை இல்லையா? விக்கினேஸ்வரனைப் பதவி நீக்கவேண்டும் என்று கூறியவர் மீது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கும் அதிகாரம் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு உண்டா? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

எதுவாயினும் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவர் என்பது மட்டும் சர்வ உண்மை.

விதுரன்




# அரசவை விகடகவி...!

அந்த ஆண்டு ஆந்திராவில் மழையே பெய்யவில்லை. அதனால், ஏரி,குளம்,குட்டை அனைத்தும் வறண்டு கிடந்தன. விவசாயம் நடைபெற வில்லை. தண்ணீர்ப் பஞ்சமும் உணப் பஞ்சமும் தலைவிரித்தாடின.

அப்போது அக்கிராமத்துக்கு ஒரு சாமியார் வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்த அன்றே பலமான மழை பெய் யத் தொடங்கியது. ஆறு, ஏரி, குளம், குட்டை எல்லாம் நிரம்பிவிட்டன.

சாமியார் வந்ததின் காரணமாகத்தான் நல்ல மழை பெய்துள்ளது என்று எண்ணிய அவ்வூர் மக்கள் சாமியாரை வாயாரப் புகழ்ந்து அவரை வணங்கி ஆசி பெற்றனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த தெனாலிராமன் கலகல வென நகைத்துக்கொண்டிருந்தான். இதைப் பார்த்த சாமியார், தெனாலி ராமனை அருகில் அழைத்து "தம்பி நீ ஏன் சிரிக்கிறாய்?" என வினவினார்.



அதற்கு தெனாலிராமன், மழை பெய்வதும் பெய்யாமல் போவதும் இறைவன் செயலே அப்படி இருக்க, தாங்கள் வந்தவுடன், தங்கள் மகிமை யால்தான் மழை பெய்துள்ளது என்று மக்கள் எண்ணுவது, ஒரு பனைமரத்தில் நன்கு பழுத்துள்ள பனம் பழம், கீழே விழும் நேரத்தில் காக்கை உட்கார்ந்த தாம். காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் கீழே விழுந்ததாம். அப்போது அதைப் பார்த்தவர்கள் காக்கை உட்கார்ந்ததால் தான் பனம் பழம் விழுந்தது என்று சொன்னார்களாம். அதுபோலவே இவ்வூர் மக்கள் செயலும் இருந்ததால் தான் சிரித்தேன்" என்றான்.

இதைக்கேட்ட சாமியார் உண்மையை உணர்ந்து, அவன் மேல் கோபப்பட வில்லை. "தம்பி உன்னிடம் திறமை இருக்கிறது. நீ காளி மகாதேவியின் அருளைப் பெற்றால், பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்குவாய்" என்று நல்லாசி கூறினார்.

இதைக்கேட்ட தெனாலிராமன் காளி மகாதேவியின சந்நிதியை அடைந்தான். அவளின் திருவுருவத்தைக் காண பல வாறு வேண்டி தவம் இருந்தான். கடைசி யில் தெனாலிராமன் முன் தோன்றினாள் காளிதேவி. அவளது உருவத்தைப் பார்த் துப் பயப்படுவதற்குப் பதிலாக, பலமாக சிரித்தான் தெனாலி.. அவன், சிரிப்பதைப் பார்த்த காளிமகாதேவி, "என் கோர உரு வத்தைப் பார்த்து எல்லோரும் அஞ்சு வார்கள். நீயோ பலமாகச் சிரிக்கிறாய் ஏன்?" என்று வினவினாள்.

அதற்கு தெனாலிராமன், "எங்களது ஒரு தலைக்கு வலிவந்தாலே தாங்க முடியவில்லை. அமுக்கிப் பிடிக்க இருகைகள் போதவில்லை.

அப்படியிருக்க உனக்கு ஆயிரம் தலைகள் இருக்கின்றனவே... கைகளோ பத்து மட்டுமே உள்ளன. ஆயிரம் தலை களையும் பத்துக்கைகளாலும் கைகளா லும் பிடித்துவிடுவதற்கு நீ எவ்வளவு பாடுபடுவாய்... என்று எண்ணிப்பார்த் தேன் ... சிரிப்பு வந்தது என்றான். இதைக் கேட்டதும் காளிமகாதேவியே சிரித்து விட்டாள்.

பின்பு "மகனே உன்னை ஆசிர்வதிக் கிறேன். பேரும் புகழும் பெற்றுத் திகழ்வாய். உனக்கு கஷ்டம் நேரும் போதெல்லாம் என்னை நினை. உனக்கு உதவி செய்கிறேன்" எனக்கூறி மறைந் தாள் காளிதேவி.

விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவ ராயர் அரண்மனையில் தாத்தாச்சாரியார் என்பவர் ராஜகுருவாக இருந்தார்.

தெனாலி கிராமத்துக்கு அருகில் உள்ள ஊர் மங்களகிரி அவ்வூருக்கு ராஜகுரு தாத்தாச்சாரியார் வந்திருந்தார்.

அவ்வூர் மக்கள் ராஜகுருவை வணங்கி ஆசிபெற்றுச் சென்றனர். இதை யறிந்த தெனாலிராமன் ராஜகுருவை சந்தித்தான். தன்னுடைய விகடத்திறமை யாலும் பேச்சாற்றலாலும் ராஜகுருவின் சிஷ்யன் ஆனான்.

ராஜகுருவின் நட்பு கிடைத்தபின் தன் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பதாகவும் அதனால், மன்னர் கிருஷ்ணதேவராயரிடம் சிபாரிசு செய்து அரண்மனையில் வேலை கிடைக்க ஏற் பாடு செய்யுமாறும் வேண்டிக் கொண் டான். அவன் வேண்டுகோள்படியே ராஜ குருவும் அரண்மனையில் வேலையில் சேர்த்துவிடுவதாக வாக்களித்தார்.

"நான் போய் ஆள் அனுப்புகிறேன். அதன்பின்னர் நீ வா" என்று சொல்லி விஜயநகரத்துக்குச் சென்றுவிட்டார்.

தெனாலிராமன், மிகக் கெட்டிக்காரனாக இருக்கிறான். இவனை மன்னரிடம் சொல்லி அரண்மனையில் விகடகவியாக சேர்த்துவிட்டால் நம் வேலை போய் விடும் என்று எண்ணிய ராஜகுரு தெனாலிராம னுக்கு ஆள் அனுப்பவேயில்லை.

தெனாலிராமனும் ராஜகுருவிடமிருந்து ஆள் வரும்.. வரும் என்று எதிர்பார்த்து பல மாதங்கள் ஓடிவிட்டன. எந்தத் தகவலும் அவனுக்குக் கிட்டவில்லை. ஆகையால், விஜயநகரம் சென்று ராஜ குருவை நேரில் பார்த்து அரண்மனையில் சேர்ந்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

அதன்படியே மனைவி, மகனுடன் பல நாட்கள் நடந்து, விஜயநகரம் வந்து சேர்ந்தான். பலவித இடையூறுகளுக் கிடையே தெனாலிராமன் ராஜகுருவை அவரது இல்லத்தில் சந்தித்தான்.

தெனாலிராமனைப் பார்த்ததும் ராஜகுரு, அதிர்ச்சியடைந்தார். "யாரப்பா நீ.. உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். இதைக்கேட்ட தெனாலிராமன் பதறினார்.

"ராஜகுருவே! நான்தான் தெனாலி ராமன். தாங்கள் மங்களகிரிக்கு வந்த போது, நண்பர்கள் ஆனோம். நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க தாங்கள் அரசவையில் என்னைச் சேர்த்துவிடுவ தாக வாக்களித்தீர்கள். ஆள் அனுப்பிய பின்பு வா.. என்றீர்கள். பல மாதங்களாக தங்களிடமிருந்து ஆள் வராததால்தான் நான் நேரில் வந்துள்ளேன். தயவுசெய்து என்னைப் பற்றி மன்னரிடம் சொல்லி அரசவையில் சேர்த்துவிடுங்கள்."

"உன்னை யாரென்றே எனக்குத் தெரியாதப்பா... மரியாதையாக வெளியே போ... இல்லையேல் அவமானப்படு வாய்" என்று விரட்டினார்.

வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட தெனாலிராமன், பழிக்குப்பழி வாங்கத் துடித்தான். காளிமகாதேவியைத் துதித் தான்.

அன்று கிருஷ்யராயதேவரின் அரண் மனை அமர்க்களப்பட்டுக்கொண்டிருந் தது. அறிஞர் பெருமக்களும் மற்றவர் களும் மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

மன்னர் கிருஷ்ணதேவராயர் வந்தவு டன் சபை கூடியது. வேற்றூரிலிருந்து வந்த தத்துவஞானியை விழாவைத் தொடங்கி வைத்து விவாத மன்றத்தை ஆரம்பிக்கச் சொன்னார்.

தத்துவஞானியும் ஏதேதோ சொன்னார். ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அவர் பேச்சின் இறுதியில் மாய தத்துவம் பற்றி நீண்டநேரம் பேசினார். அதாவது, நாம் கண்ணால் காண்பதும் மாயை, உண்பதும் மாயை என்று சொன்னார்.

இதைக்கேட்ட அறிஞர்கள் முதல் அரசர்வரை எவருமே வாய்திறக்கவில்லை. ராஜகுரு மௌனமாகிவிட்டார். சுற்றும் முற்றும் பார்த்த தெனாலிராமன் எழுந்து நின்றான்.

தத்துவஞானியைப் பார்த்து, "ஐயா தத்துவஞானியாரே! ஏன் பிதற்றுகிறீர்.. நாம் உண்பதற்கும் உண்பதாக நினைப் பதற்கும் வித்தியாசமே இல்லையா?" எனக் கேட்டான். அதற்கு தத்துவஞானி, வித்தி யாசம் இல்லை என்றான்.

அதைச் சோதிக்க, தெனாலிராமன் அரசரிடம் ஒருவிருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார். விருந்து ஏற்பாடு ஆயிற்று.


அனைவரும் பந்தியில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினர். தத்துவஞானிக்கு உணவு பரிமாறியபோதும் சாப்பிடக் கூடாது எனக் கட்டளையிட்டுள்ளனர். அதனால், தத்துவஞானி தன் தவறை உணர்ந்தான். இதைப் பார்த்த அரசர், தெனாலிராமனின் திறமையைப் பாராட்டி, பொன் பரிசளித்தது மட்டுமல்லாமல், இராமனை அன்று முதல் அவரது அரசவை விகடகவியாக்கினார்.

# அவர்போல் என்னால் எழமுடியவில்லை...!

குண்டுத் தாத்தா என் தாத்தா;
குரலால் அவரோ பெருந்தாத்தா;
அறிவை ஊட்ட நொடி தருவார்;
அன்பாய் கதைகள் கூறிடுவார்;
வேலைகள் சொன்னால் போதுமவர்,
வேகமுடன் செய்து முடித்திடுவார்;
அதிகாலை அவரோ எழுந்திடுவார்;
அவர்போல் என்னால் எழமுடியவில்லை!



செ. பரத்கிருஷ்ணா
ஏழாம் ஆண்டு
யாழ் இந்துக்கல்லூரி






# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**சோபித தேரரின் மறைவு பற்றி?**

**தமிழ்க் கூட்டமைப்பு தமிழர்களுக்கு செய்யப்போவது என்ன?**

**வேதாளம் ஆலுமா டோலுமா பாடல் எப்படி?**

**சபேசன் — கோப்பாய்**

**வேதாளம் ஆலுமா டோலுமா பாடல் எப்படி?**

சமீபத்தில் வந்த பாடல் ஒன்றை கேட்டதில் இருந்து எனக்கு தமிழ் மறந்துவிட்டது. அதனால் புதிய பாடல்களைக் கேட்க வேண்டாம் என என் மனைவி உத்தரவு போட்டுவிட்டாள். தமிழை மறக்கும் அளவுக்கு ஒரு பாடலா? என்ன கொடுமை சரவணா.

**லங்கேஸ் — கிளிநொச்சி**

**வியாசர் அப்படியென்று ஒருத்தரும் இல்லையாமே?**

அப்படியென்றால் உங்கள் கேள்விகளுக்கு பதில் எழுதுவது வியாசரின் அப்பாவா?

**ரவீனா — சுதந்திரபுரம்**

**காதலில் அதிகமா ஏமாற்றப்படுபவர்கள் ஆண்களா? பெண்களா?**

சேறு கண்ட இடத்தில் உளக்கி தண்ணீர் கண்ட இடத்தில் கழுவி விட்டுச் செல்வது என்பது இப்போது ஆண்ளுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் பொருந்தும் நிலை வந்து விட்டது.

**சயந்தன் — யாழ்ப்பாணம்**

**தமிழ்க் கூட்டமைப்பு தமிழர்களுக்கு செய்யப்போவது என்ன?**

ஐயா சாமி!
ஆணியே புடுங்க வேண்டாம்! ஆளைவிட்டால் போதுமப்பா?

**சுபாங்கி — சிறுப்பிட்டி**

**நான் வியாசரின் வாசகி. ஒரு வாசகியா வியாசருக்கு நான் என்ன செய்யவேண்டும்?**

வாசகிதானே வாசுகி இல்லையே!
நல்ல கேள்விகளைக் கேட்டால் மட்டும் போதும். உங்கள் அன்புக்கு நான் எப்போதும் அடிமை.

**பாலகுமார் — துன்னாலை**

**நீங்கள் யார்?**

ஒவ்வொருமனிதனும்தன்னைப்பார்த்துக்கேட்கவேண்டிய கேள்வியை நீர் என்னைப் பார்த்துக் கேட்கிறீர்.

**அரு.கனகராசா — சாவகச்சேரி**

**பொழுதுபோக்கு சாதனங்களில் தங்களுக்கு பிடித்தது எது?**

இதே கேள்வியை ஒருவர் என் மனைவியிடம் கேட்டார். அதற்கு அவள் சொன்ன பதில் என் புருஷன் (வியாசர்)

**கோபி — மந்திகை**

**தீபாவளி எப்படிப் போய்ச்சு?**

பால்கோவா செய்வது எப்படி? எனும் புத்தகத்தைப்பார்த்து தீபாவளிக்கு பால்கோவா செய்தார் என் மனைவி.

பால்கோவா செய்து முடிந்து விட்டது. தீபாவளிக்கு வந்த விருந்தினருக்கு பால்கோவா கொடுக்கப்பட்டது. **பால்கோவா செய்வது எப்படி?** புத்தகத்தின் 14 ஆம்பக்கத்தின் பாதியை பால்கோவாவில் இருந்து எடுத்துக் கொடுத்தார் எனது சிநேகிதன். ஆச்சரியமாகாத அவள் அடுத்த பாதியை தேடிக்கொண்டிருக்கிறாள் அடுத்த தீபாவளிக்காக. அது என் வயிற்றுக்குள் என்பதறியாமல்.



தலைவரே, 2016-ல் ஆட்சியைப் பிடிச்சாத தான் நீங்க வழக்குகள்ல இருந்து தப்பிக்கலாம்! இல்லைன்னா? ஜெயில்ல இருந்து தப்பிக்க வேண்டிவரும்!

**அன்பு வாசகர்களே!**

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

**கலா — உடுவில்**

**பெத்த தாயை கைநீட்டி அடிக்கும் பெண்கள் பற்றி?**

அம்மா தாயே நீயும் ஒரு நாள் தாயாவாய் உனக்கும் ஒரு மகள் பிறப்பாள். அப்போது அவள் கை உன் கன்னத்தை பதம்பார்க்கும். நூலைப்போல சேலை தாயைப்போல பிள்ளை.

**யகுதா — யாழ்ப்பாணம்**

**வெள்ளையானவர்கள் வடிவா? கறுப்பானவர்கள் வடிவா?**

எங்களிடம் எது இருக்கிறதோ அதற்கு எதிர் மாறாத்தான் மனம் சிந்திக்கும். நாவல் பழத்திற்கும் தோடம்பழத்திற்கும் சுவையால் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் பழம் என்ற பதத்தில் ஒன்றாகிவிடுகிறது.அது போல்தான் அழகும் அவரவர் மனம் சார்ந்தது .

**டெரி — யாழ்ப்பாணம்**

**நட்பு - காதல் எதற்கு முதல் மரியாதை?**

நட்பு என்பது அன்பு எனும் விற்றமின் கலந்த உணவைப் போன்றது. காதல் என்பது அன்பு என்ற விற்றமினுடன் காமம் என்ற கனியுப்புக்கள் கலந்த உணவைப் போன்றது. இதில் நீங்கள் எதற்கு முதன்மை கொர்டுப்பீர்கள் என்பது உங்கள் சொய்ஸ்.

**நிஷானா — யாழ்ப்பாணம்**

**அன்பைப் போதிக்கும் மதங்களில் வன்மம் எப்படி வந்தது?**

எந்த மதம் தன் மதத்தை பரப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுகிறதோ அந்த மதத்தில் வன்மமும் வன்முறையும் தான் கலந்திருக்கும்.

மதங்கள் அன்பை மட்டும்தான் சொல்கிறது. ஆனால் அதைப் போதிப்பவர்கள் தான் அன்பை அடக்கி வன்மத்தை விதைக்கிறார்கள்.


**கௌரீஸ் — கரவெட்டி**

**சோபித தேரரின் மறைவு பற்றி?**

எத்தனையோ சிங்கள மத, அரசியல் தலைவர்கள் மறைந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் வடக்கு - கிழக்கிலும் அரைக் கம்பத்தில் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

ஆனால் தமிழர் மனக்கம்பங்களில் கொடிகள் அரைக்கம்பத்திற்கு இறங்கவில்லை. தேரரின் இழப்பு தமிழர் மனக் கம்பங்களில் கொடிகள் அரைக்கம்பத்திற்கு இறங்கிவிட்டது.

# கவிதைக் கலசம்



## மாற்றங்கள் இல்லையேல்

மாற்றங்கள் இங்கு தேவைதான்
மாறுவதற்கு தான் ஒருவரும்
இல்லைபோலும்- உணர்வுகளை
உன் மனதில் முடக்கிவிட்டு
மாற்றங்கள் மட்டும் மாறவில்லை
மனிதர்களும் மாறித்தான் போனார்கள்
முல்லையிடம் தேர் கேட்கும் பாரிகளும்
புறாக்களைக் கொன்று குவிக்கும் சிபிகளும்
நீதியையே மறந்துவிட்ட
மனுநீதிச்சோழனும் மாறித்தான் போனார்கள்
சுயநலம் எனும் மோகத்தால்
முகமறியா வாதங்களும் இனங்களுக்கிடையே
பேதங்களும் கலாசார மோகங்களும்
ஆழியாய் மனிதமனங்களை சுழற்றி
ஆழ்கடலுக்குள் புதைத்து விட்டனவா?
போர் தொடுப்போர் எதிரே இருக்க
போராட்டங்கள் எல்லாம் மனதிலே
வெடிக்கின்றன- இங்கு பறிபோக
என்றும் இல்லை உயிர்த் தமிழைத் தவிர!
மாற்றங்கள் வேண்டும்தான்
மனிதரிடையேயன்றி மனித மனங்களிலே
இல்லையேல் மாற்றத்தை ஏற்படுத்த
போராளிகள் நாளையும் உருவாகலாம்

நிஷானா சுகுணதாஸ்
யாழ்ப்பாணம்

## மீள் குடியேற்ற நாட்களும் நானும்!

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்
பழ மொழியில் சொன்னதெல்லாம் உண்மையாகிப் போனதிங்கே!
முற்றத்திலே வேப்ப மரம் சுற்றத்திலே யாரும் இல்லை
எட்டி எங்கும் பார்க்கையிலே உள்ளம் குமுறுதம்மா
எதைச் சொல்ல நடந்ததிலே சிலவற்றை சொல்லுகிறேன்
இதைச் சொல்ல வருமுன்னே ஒரு சொட்டு கண்ணீர்த்துளி!
பாடங்கற்ற பள்ளிக்கூடம் காடு புற்றிக் கிடக்குது
கோயிலில் சாமியெல்லாம் பேருக்குத்தான் இருக்குது
நன்னீரில் குளிர்ந்த மண் குருதியிலும்
நனைந்தது மண் வீட்டையும் காணவில்லை
மண்ணோடு மண்ணாயிற்று!
உயிரையே கொண்டு சென்று உரிமையை
தொலைத்து விட்டு நிர்க்கதி அற்றவராய்
நிற்கிறோம் "தமிழர்" என்று!
கவியாக வடிப்பதால் கவலையொன்றும்
போவதில்லை துடியாக துடித்ததையும்
ஒருபோதும் மறப்பதில்லை எழுத்தென்ற
ஆயுதத்தால் உலகறியச் செய்திடுவோம்.
எமக்கு அன்று நடந்ததை
நமக்கென்று ஒருநாளும் உண்டு
அதற்காக காத்திருப்பேன் தமிழ் மகனாய் நான்!!!!

முல்லைவர்மன்
முள்ளியவளை

## இமயம் தொட

எதை நீ நன்மை என
எண்ணுகிறாயோ
அதை செய்து முடி
எது தீதென்று
தென்படுகிறதே அதை
எதிர்த்து தடுத்து நிறுத்து
உன் எண்ணம் செயல்
அனைத்திலும் நிலை நிறுத்து
நீ ஏழைகளின் தோழன் என

மாவை. நா.கஜேந்திரன்

## தீவின் சாபம்

தாழ்த்தப்பட்ட சிறுபான்மைக்காக
தனிநாடு வேண்டுமென்றே
முழங்கப்பட்ட குரல்களெல்லாம்
இன்று எங்கே? போய்விட்டது!
கண்ணீர் கசிய துன்பப்பட்ட
சாதி இல்லாத சமூகத்தினுள்ளே
இனவெறிகள் புதைக்கப்பட
மாண்டு போனது எமது வாழ்வு
இரத்த வெள்ளம் தினம் ஓட
வாய்விட்டு கதறும் உள்ளங்கள்
மனிதம் எங்கே சென்று விட்டது
மானிடரே சற்றுச் சொல்லுங்கள்
உயிர்ப்பலிகளை எடுத்துவிட்டாய்
உடைமைகளையும் அழித்துவிட்டாய்
இன்று உனக்கு மகிழ்வுதானே-
முல்லை தீவே உன் சாபம் நீங்கிவிட்டதா!

முல்லை அன்ரன்

# மௌனத்தின் தேடல்- 274



## சிறுவனே

மண்ணை பொன்னாக்கும்
வித்தையும்
மண்ணில் விருந்தாக்கும்
வித்தையும் -நீ
மண்ணையும் மனதையும்
பண்படுத்தி செய்யும் உன்
கைவண்ணங்களில் தெரிகின்றது
புதுமைக்குள் பழைமையும்
வாழ்கின்றது என்று

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## முன்மாதிரி

செய்ந்நன்றி மறவா நம்
செந்தமிழ் மண்ணிலேற்பட்ட
அசாதாரண சூழ்நிலையால்
இடம்மாறி பேரிடர் பட்டு
வாழ்வாதாரம் எதுவுமின்றி
நொந்து வெந்து வாடினோம்
துணிவே துணையென்று
தன்னம்பிக்கையோடு இச்சிறுவன்
பாரம்பரிய மட்பாண்டத்
தொழில் செய்து வாழ்கிறான்
யாவருக்கும் முன்மாதிரியாக

இ.ஆராதனா
மட்டுவில் தெற்கு

## தன்னம்பிக்கை

தந்தையின் தொழில் கற்றேன்
இத்தரணியில் வாழ்ந்திடவே
பேனா பிடிக்கும் கரங்களிலில்
மட்பாண்டம் அமைத்தேன்-இவ்
உலகில் நிமிர்ந்து நின்றிடவே
என் வாழ்க்கையில்
மேடு பள்ளங்கள்
வந்துகொண்டேயிருக்கிறது
இம்மட்பாண்டம்போல் இருந்தும்
இவ்வுலகை வென்றிடுவேன் ஒருநாள்

டயானி.லி
மறவன்புலோ மத்தி

## நாளைய கனவுகளுக்காய்

இன்று கல்விதனை இழந்து
நான் கலைஞனாகிறேன்
நாளை என் தங்கையின்
பட்டதாரிக் கனவுகளுக்காய்

சு.நிஷானா
யாழ்ப்பாணம்

## வாழ்க்கை

முயற்சியால் தான் முன்னேற்றம்
பயிற்சியால்தான் பரிசு
இலட்சியம்தான் அனுபவம்
அனுபவம்தான் வாழ்க்கை

ஆன்நிலோஜினி
வளன்புரம்

## கூலியாகும் குழந்தைகள்

தொழிலுக்கு அனுப்பி
குழந்தையை கூலியாக்காதே
என்ற சட்டவேலிக்குள்ளும்
நிறையவே ஓட்டை!
ஊடகங்களின்
கட்டம் போட்ட செய்திகளாலும்
கண்திறக்க வைக்க முடியவில்லை
ஏமாற்று முதலைகளை!
தொடரும் துஷ்பிரயோகமோ
குழந்தையின்
ஆரம்பக் கல்விக்கே
ஏப்பம் விட்டு
ஆரோக்கியமான சமூகத்தில்
சூத்தை குத்தி வைக்குதே!

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## பாத்திரங்கள்

வாழ்க்கை யென்பதென்றும்
நாளும் நடக்கும் நாடகமாகும்
இதில் மக்கள் நவரசங்களையும்
பிரதிபலிக்கும் பாத்திரங்கள்
வறுமையால் பாதிக்கப்பட்ட
சிறுவர்களைச் சந்திக்கையில்
இன மத மொழி பேதமின்றி
இதயத்தில் வலியெடுக்கும்
பாதிப்புக்களைக் குறைக்கவே
பாத்திரங்களை வனைகின்றாய்
காலப்போக்கில் கைகொடுத்து
கதாநாயகனாக மாற்றிவிடும்
அழியாச் செல்வமாகக் கருதப்படும்
கல்வியிலும் கவனத்தை செலுத்து

க.நாகராசா
நுணாவில்

## கல்வியே கண்!

பணத்திற்கு ஆசைப்பட்டு
படிப்பிற்கு தடைபோட்டு
பானைகளை வடிவமைக்கும்
சிறுவனே! உன்னுடைய
எதிர்காலம் இப்பானைகளிலா
இல்லை இடைநடுவில்-நீ
நிறுத்திய கல்வியிலா?
புரியவில்லை எனக்கு

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## வில்லங்கம்

மண்பானைச் சமையல் விட்டோம்
பொன்போன்ற வாழ்வில் கெட்டோம்
வெண்பானைச் சமையல் தொட்டோம்
வில்லங்கம் வாழ்வில் பட்டோம்

அபிீர்ராஜன்
கொழும்புத்துறை

# மௌனத்தின் தேடல் -275



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 18.11.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

**சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்ற சரீர தண்டனை தொடர்பில் நிபுணர்கள் பலரின் கருத்துக்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சரீர தண்டனைக்கு பதிலாக ஆசிரியர்களும், பெற்றோரும் தங்களுடைய அணுகுமுறைகளில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவரலாம் என்பது தொடர்பான நிபுணர் ஜோன் டுரண்ற் அவர்களின் ஆங்கில கருத்து திரு ஜெ. தற்பரன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுசென்றவாரம் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி இவ்வாரம் வெளிவருகின்றது.**

# மனவெளி

**அன்றாட கற்பித்தலில் உடன்பாடான ஒழுக்கத்தைக் கையாளுவதன் மூலம் பிள்ளைகளின் பிரச்சினைகளை அடையாளம் காண்பதுடன், அவர்களுக்கு சரீர தண்டனை கொடுப்பதையும் தவிர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகின்றது. கற்பிப்பவர்களுக்கான அணுகுமுறைகள் பற்றியும், உடன்பாடான வழிமுறைகள் பற்றியும் இங்கு விளக்கப்படுகின்றது.**

**கட்டமைப்பு**

கல்வி ரீதியாக மற்றும் நடத்தை ரீதியாக மாணவர்கள் வெற்றி பெறுவதற்கு தேவையான தகவல் மற்றும் ஆதரவு கட்டமைப்பு எனப்படுகின்றது. ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான விடயங்களை அது மாணவர்களுக்கு வழங்குகின்றது. ஆக்கபூர்வ மான, அகிம்சாவழியில் ஏனையோருடன் ஏற்படும் முரண்பாடுகளை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பதற்கான வழிகளை கட்டமைப்பு வழங்குகின்றது. கல்வி ரீதியாக அவர்கள் வெற்றி பெற முடியும் என்பது குறித்த தகவல்களையும் அது வழங்குகின்றது.

தம்மிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்று சிறுவர்களுக்கு தெரியும் போது மற்றும் அந்த எதிர்பார்ப்புகளை எட்டுவதற்கு தேவையான தகவல்களை தாம் பெறுவோம என நம்பும் போது, தமது கற்றல் செயற்பாடுகளில் அவர்கள்மேலும்நம்பிக்கை உடையவர்களாக மாறுகின்றனர். அத்துடன், நிறைய கற்பதற்கு அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள்குழப்பமடைவதும், விரக்தியடைவதும் குறைவாக உள்ளது. இதனால், தமது கற்றல் நடவடிக்கைகளில் அவர்கள்முழுக்கவனத்தையும் செலுத்த முடியும். அவர் களுடைய வெற்றியானது பாடசாலை குறித்தும், தாம் கற்கும் பாடம் குறித்தும் உடன்பாடான உணர்வுகளை ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் அவர்களுடைய நடத்தை மேம்படும்.

உடன்பாடான மாதிரி பாததிரமாகவும், வழி காட்டியாகவும் செயற்படுவதன் மூலம், விதிகளுக்கான காரணங்களை விளக்குவதன் மூலம், அவற்றை அமைப்பது தொடர்பில் மாணவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம், அவர்களுடைய கருத்துக்களை செவிமடுத்தல் மூலம், தமது தவறுகளை திருத்துவதற்கான வழிகளை கண்டறிய அவர்களுக்கு உதவுவதன் மூலம், நியாயமானவர்களாக இருப்பதன் மூலம், கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் மற்றும் அச்சுறுத்தல்களை தவிர்ப்பதன் மூலம் தமது மாணவர்களுக்கான கட்டமைப்பை ஆசிரியர்கள் வழங்குகின்றனர்.


உடன்பாடான ஒழுக்கமானது ஒவ்வொரு மாணவரினதும் பாடசாலை காலம் முழுவதிலும் அரவணைப்பு மற்றும் கட்டமைப்பினை ஒன்றிணைக்கின்றது. ஆசிரியர்கள் தமது குறுகிய கால இலக்குகளை அடைவதற்கு உதவும் வகையில் சிந்திப்பதற்கான வழியாக அது உள்ளது. அதே வேளை, இதன் மூலம் உடன்பாடான நீண்டகால தாக்கத்தையும் ஆசிரியர்கள் தமது மாணவர்கள் மீது செலுத்த முடிகின்றது. மாணவர்களின் கற்பதற்கான ஆர்வத்தை அதிகரிப்பதற்கான, தமது கல்விநடவடிக்கைகளில் வெற்றியை எட்டுவதற்கும், மேம்படுத்துவதற்குமான ஊக்குவிப்பை வலுப்படுத்தும் வழியாகவும் அது உள்ளது.

**1. சிறுவர் வளர்ச்சியை புரிந்து கொள்ளல்**

சிறுவர்கள் வளரும் போது மாற்றமடைவார்கள் என்பதனை ஆசிரியர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். அபிவிருத்தி என்பது முனனெடுக்கப்படும், நிறைவடையாத செயற்பாடாகும். ஏனெனில், சிறுவர்கள் மாறும் போது, அவர்களுக்கு புதிய தகவல்கள் மற்றும் புதிய திறன்களை எம்மால் கற்பிக்க முடிகின்றது. அனைத்து கற்பித்தலும் முன் கற்றல் மூலம் கட்டியெழுப்பப்படுகின்றது. அத்துடன், எதிர்கால கற்றலுக்கான அததிபாரத்தையும் உருவாக்குகின்றது.

எல்லா வயதிலும் ஒரே வகையில் சிறுவர்கள் கற்க மாட்டார்கள். அவர்களுடைய சிந்திக்கும் மற்றும் புரிந்துகொள்ளும் விதம் மாற்றமடையும். இதனால், நாம் அவர்களுக்கு கற்பிக்கும் வழியும் மாற்றப்படல் வேண்டும். உங்களுடைய நீண்டகால இலக்குகளை அடைவதற்கு, உங்களுடைய மாணவர்களின் அபிவிருத்தி படி நிலைக்குப் பொருத்தமான அரவணைப்பு மற்றும் கட்டமைப்பினை நீங்கள் வழங்க வேண்டியது அவசியமாகும். எதிர்பார்ப்புக்கள் சிறுவர்களின் இயலுமையுடன் பொருந்தியதாக இருத்தல் வேண்டும்.

**6 வயது பிள்ளை அல்லது 13 வயது பிள்ளையின் கண்களிலிருந்து நாம் உலகை பார்க்க ஆரம்பிக்கும போது, அவர்களுடைய நடத்தைக்கான காரணங்களையும்நாம்புரிந்து கொள்ள ஆரம்பிப்போம்.** அப்போது தான், நாம் மிகவும் பயனுள்ள ஆசிரியர்களாக மாற முடியும்.




**சிறு பராயம்**

பெரும்பாலான மாணவர்களின் வளர்ச்சியை ஆசிரியர்களால் காண முடிவதில்லை. பாட சாலைக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னரான சிறுவர்களின் அனுபவங்கள், அவர்கள் கற்பதற்கான தயார் நிலையை, அவர்கள் கற்பதற்கான ஊக்குவிப்பை மற்றும் சமூக ஒருங்கிணைப்பில் அவர்களுடைய திறன்களை நிர்ணயிக்கின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாடசாலையில் ஏற்படும் கற்றல் மற்றும் நடத்தை சிக்கல்கள், அதற்கு முன்னர் அவர்கள் கற்ற விடயங்களின் பிரதிபலிப்பாக உருவாகின்றன.

சிறுவர்களின் கற்றலை நோக்கிய உளப்பாங்கிலும், வகுப்பறை மற்றும் பாடசாலை வளாக நடத்தைகளிலும் வெளிப்படும் அவர்களுடைய முன்பள்ளி அனுபவ சுயக்கருத்துக்கள் சார்ந்ததாக கவனஞ் செலுத்த வேண்டியதும், கண்டறிய வேண்டியதும் ஆசிரியர்களுக்கு மிகவும் முக்கியமாகும்.

**பாடசாலைகளுக்கான நிலை மாற்றம்**

பாடசாலைகளுக்கான நிலைமாற்றம் என்பது சிறுவர்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கிய நிகழ்வாகும். **வாழ்க்கையில் சிறுவர் ஒருவர் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய ஆகக் கூடிய சமாளித்தலாக அது இருக்கும்.** சிறுவர்களின் கருத்தோட்டத்தில் பார்க்கும் போது, பாடசாலை எனபது முழுமையாக புதிய உலகம். புதிய இடத்தில், புதிய சிறுவர்கள் நிறைய, பெரியவர்கள் புதிதாகவும், புதிய எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகவும் இருக்கும். அங்கு பின்பற்றுவதற்கு புதிய அட்டவணைகளும், புதிய பழக்கங்களும் இருக்கும். அத்துடன், வாழ்க்கையில் முதன்முறையாக சிறுவர்கள் தமது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இன்றி புதிய இடத்தில் இருப்பர். இந்த சூழ்நிலைகள் சிறுவர்களுக்கு பெரும் சவாலாக இருக்கும்.

இருப்பினும், சிறுவர்களுக்கு பாடசாலைக்குள் பிரவேசிக்கும் அந்த நிமிடம் முதல், அவர்களின் வெற்றிகரமான நிலை மாற்றத்திற்கான பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது. அவர்களது பிரதபலிப்புக்கள் பாடசாலை மற்றும் அடுத்து வரும் பல வருடங்களுக்கு சிறுவர்கள் முன்னெடுக்கவுள்ள கற்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். சிறுவர்கள் அந்த வயதில் எவ்வாறு சிந்திப்பார்கள் என்பதனை ஆசிரியர்கள் புரிந்து கொள்வதன் மூலம், சிறுவர்கள் இந்த சமாளித்தலை உள்வாங்குவதற்கு உதவ முடியும்.

சிறுவர்கள் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போது, அவர்களுடைய புரிந்து கொள்ளும் தன்மையானது அவர்களுடைய அது வரையான அனுபவத்தினைச் சார்ந்ததாகவே இருக்கும். எனவே, அவர்கள் எதிர்நோக்காத விடயங்கள் தொடர்பில் புரிந்து கொள்வது மிகவும் சிக்கலாக இருக்கும். இந்த வயதில் சிறுவர்கள் உறுதியளித்த கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பர். ஆனால், சாராம்சமான கருத்துக்கள் மற்றும் எந்தவொரு சூழ்நிலைக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட பரிமாணங்களை புரிந்து கொள்வது அவர்களுக்கு சிக்கலாக இருக்கும். தமக்கு மிகவும் பழகிப் போன பரிமாணங்கள் தொடர்பிலேயே அவர்கள் கவனஞ் செலுத்துவர். அதேவேளை, குறைந்தளவு பழக்கமான விடயங்கள் தொடர்பில் அவர்களால் கவனஞ் செலுத்த முடியாது இருக்கும்.

இந்த வயதில் உள்ள சிறுவர்கள் தண்டிக்கப்படும் போது, தாம் புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் கருதக் கூடும். தமது ஆசிரியர்களால் தாம் புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் உணரும் போது, பாதுகாப்பற்றவர்களாக மாறுவதோடு, பாடசாலை சுற்றுச் சூழல் தொடர்பில் அச்சம் ஏற்படவும் கூடும். இதன் காரணமாக அவர்கள் கல்வி நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கலாம் அல்லது நடவடிக்கைகள் மாற்றமடையலாம். பின்வாங்கிய சிறுவர்கள் அமைதியானவர்களாகவும், வெட்க உணர்வுடையவர்களாகவும், தவறுகள் புரிவது தொடர்பில் அச்சமுடையவர்களாகவும் இருப்பர். இந்த சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் விமர்சன ரீதியாக செயற்படும் போது, சிறுவர்களின் அச்சம் அதிகரிக்கும்.

அதேவேளை, அவர்கள் தாம் முயற்சி செய் வதற்கான உற்சாகத்தை இழந்து விடுவர். நடவடிக்கைகள் மாற்றமடையும் சிறுவர்கள் மீண்டும், மீண்டும் தண்டிக்கப்படுவர். அத்துடன், அவர்களுடைய மனவிசாரம் மேலும் அதிகரிக்க வழி வகுக்கலாம். இந்த சிறுவர்கள் பாடசாலை நடவடிக்கையில் கவனஞ் செலுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குவர். இதன் காரணமாக கல்வி நடவடிக்கையில் தோல்வியடைவர். அதேவேளை,பாடசாலை குறித்த அவர்களுடைய அக்கறையும் இலகுவாக முடிவுக்கு வந்துவிடும்.

பாடசாலை சூழ்நிலைக்கு பழகிக் கொள்வதற்கு சிறுவர்களுக்கு சிக்கலாக இருக்குமாயின், சிறுவர்களின் நடவடிக்கை மற்றும் அதற்கு பின்னால் மறைந்துள்ள காரணங்களை மதிப்படு செய்ய வேண்டியது அவசியமாகும். இதன் அடிப்படையில், சிறுவர்கள் கற்பதற்கும், வெற்றியடைவதற்கு உற்சாகப்படுத்துவதற்கான சுயஒழுக்கத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை தெரிவு செய்யலாம்.


**(தொடரும)**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham



பேராசிரியர் எரிக்சன்

# புலம்பெயர்ந்தோரும் புகலிட நாடுகளும்

ஈழத்தமிழ் புலம்பெயர் மக்கள் உட்பட புலம்பெயர்ந்தோர் தமது தாய்நாட்டுடன் பேணிக்கொள்ளும் உறவுகளை இவர்கள் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் உள்ள பெரும் சமூகத்தினர்



மேற்கத்தேய கலாசாரத்தில் -திருமணம்

எவ்வாறு பார்க்கின்றனர்? இவர்களின் தாயகத் தொடர்பு இரட்டை அல்லது பிளவுண்ட விசுவாசத்துக்கு இடமளிக்கும் என்பதனால் அதனை முழுமையாக நிராகரிக்கிறார்களா? புலம்பெயர்ந்தோரின் தாயகத் தொடர்பு இவர்கள் வாழும நாடுகளின் மக்களின் எதிர்ப்பைச சம்பாதிக்கிறதா? புலம்பெயரந்து வாழும் மக்களுக்கும் இவர்கள் வாழும் நாடுகளின் பெரும் சமூகததுக்குமிடையே சமூக, பண்பாட்டுத் தளங்களில் பாரிய முரண்பாடுகள் எழுகின்றனவா? இவற்றைப் பற்றிய சில விடயங்களை இந்தப் பத்தி தொட்டுச் செல்கிறது.

இரட்டை அல்லது பிளவுண்ட விசுவாசம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் விவாதங்களில் புலம்பெயர்ந்து வாழும் சமூகங்கள் தாம் பிறந்து வளர்ந்த நாட்டுடன் பேணும்எல்லாவகையான தொடர்புகளும் எதிர்மறையாகப் பார்க்கப்படுவதில்லை. இதேபோல் பண்பாட்டு வடிவத்தில், பழக்கவழக்கங்களாக நாம் பிறந்த வளர்ந்து நமது நாட்டில் இருந்து புலத்துக்கு இறக்குமதி செய்துள்ள எல்லா விடயங்களும் பெரும் சமூகத்தால் நிராகரிக்கப்படுவதில்லை. புலத்தில் வாழும் வெளிநாட்டுப் பின்னணி கொண்ட மக்களின் வாழ்க்கையில்காணப்படும்பேணப்படும் எல்லா அம்சங்களும் பெரும சமூகத்தால் பிரச் சினைக்குரியதாகப் பார்க்கப்படுவதில்லை. சில ஏற்கப்படுகின்றன. வேறு சில நிராகரிக்கப்படுகின் றன.

உதாரணமாக, மனிதாபிமானம், மனித உரிமைகள் தொடர்பாக அரசுகளிடம் ஓர் இரட்டைத் தன்மை இருந்தாலும் பெரும் சமூகத்தின் மக்கள் மத்தியில் இவற்றுக்கு மதிப்பு உண்டு. இதன்பாற்பட்ட செயற்பாடுகள் இவர்களது கவனத்தை ஈர்க்கும் போது அதற்கான ஆதரவினை இவர்கள் வழங்குவார்கள். இதற்கு 2004 டிசெம்பரில் சுனாமி பேரலை விளைவித்த அனர்த்தங்களுக்காக தமிழ் மக்களுக்காக சேகரிக்கப்பட்ட நிதியுதவித் திட்டங்களுக்கு இவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் பெரும் சமூகம் அளித்த ஆதரவு நல்லதொரு உதாரணம். பாலஸ்தீனர்களுக்கெதிராக 2009ஆம ஆண்டு ஜனவரி மாதம் இஸ்ரேல் நடாத்திய தாக்குதல்களுக்கு எதிராக உலகம் எங்கும் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டங்களுக்கு அந்தந்த நாடுகளின் பெரும் சமூகங்கள் மத்தியில் கணிசமான ஆதரவும் பங்குபற்றலும் இருந்தது. இப்போராட்டங்கள் மனிதாபிமானத்தின் பாற்பட்டதாக மட்டுமல்லாது, இஸ்ரேலின் பாலஸ்தீனியர் தொடர்பான அரசியலுக்கு எதிரான போராட்டங்



அண்மையில் பாரிஸ் நகரில் தீவிரவாதிகளின் குண்டு வெடித்தபின்

களாகக்கூடக் கொள்ளப்படக கூடியவை.

இதேநேரம் உலகில் இடம பெறும் எல்லா நிகழ்வுகளும், எல்லா மனித உரிமை மீறல்களும் அநீதிகளும் பெரும் சமூகத்தின் கவனத்தை ஒரேயளவில் ஈர்ப்பதில்லை. தமது கவனத்தை ஈர்க்காத விடயங்களில், சாதகமான பொது மக்கள் அபிப்பிராயம் எட்டப்படாத விடயங்களில் பெரும் சமூகத்தின் பங்குபற்றுதல் இருப்பதில்லை. அல்லது மிகக் குறைவாகவே இருக்கும். இதற்குப் பல்வேறுவகையான காரணங்கள் உண்டு. இக் காரணங்களுக்குள் இப்பத்தி நுழையவில்லை. ஏனைய நாடுகளில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக செயற்பாடுகள் அல்லது எதிரொலிகள் அனைத்துமே இவர்கள் வாழும் நாடுகள் அல்லது அந்நாடுகளின் பெரும் சமூகம் இரட்டை அல்லது பிளவுண்ட விசுவாசமாகவோ, அல்லது அவை தொடர்பான பிரச்சினையாகவோ பார்ப்பதில்லை.

இதேவேளை, சோமாலியாவிலோ அல்லது ஏனைய எந்த நாடுகளிலோ ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கோ அல்லது தற்கொலைப் படையணியின் அங்கமாகத் தன்னை அழித்து எதிரிக்கு சேதம் விளைவிக்கவோ- புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து எவராவது புறப்படுவது செய்தியாக வரும்போது அதனை இந்த நாடுகளின் அரசுகளும் பெரும் சமூகமும் பிரச்சினையாகப் பார்க்கிறது. இது அரசியல் தளத்தில் அமைந்த ஓர் உதாரணம்.

இதேபோல் சமூக பண்பாட்டுத் தளத்திலும் பல உதாரணங்கள் உண்டு. இந்திய உபகண்டத்தின் இருந்து படைப்பாகும் இசைப் படிமங்களை, நடன வடிவங்களை, உணவுவகைகளை விரும்பி வரவேற்கும் மேற்குலக பெரும் சமூகம், தமது நாடுகளில் உள்ள இந்திய உபகண்ட மக்களின் மத்தியில் இடம்பெறும் ஏற்பாட்டுத் திருமணங்களை (arranged marriages) விரும்பி வரவேற்பதில்லை. இவற்றை கட்டாயக் கல்யாணத்துக்கு (forced marriages) வழிகோலும் நடைமுறையாகப் பார்ப்போர் பெரும் சமூகத்தின் மத்தியில் நிறைய உண்டு. பெரும் சமூகத்தின் பலருக்கு ஏற்பாட்டுத் திருமணததுக்கும் கட்டாயக் கல்யாணத்துக்குமிடையிலான வேறுபாடுகள் தெரிவதில்லை. இரண்டையும் ஒன்றாகவே நோக்குவோர் பெரும் சமூகத்தின் மத்தியில் பலர் உண்டு. இருப்பினும் கட்டாயக் கல்யாணம பல நாடுகளில் தடைசெய்யப் பட்டது போல ஏற்பாட்டுத் திருமணங்களை தடைசெய்யும் முயற்சிகள் இடம்பெறவில்லை.

இவையெல்லாம் பெரும் சமூகத்துக்கும் புலம்பெயர்ந்த சமூகங்களுக்குள்ளும் இடையே அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் இருக்கும் வேறுபாடுகளில் எல்லா வேறுபாடுகளும் பெரும் சமூகத்தால் நிராகரிக்கப்படவில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. சில வேறுபாடுகள் பண்பாட்டுத் தனித்துவங்களாகக் கருதப்பட்டு பெரும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன, ஏன் போற்றவும் படுகின்றன. மாறாக வேறு சிலவகையான வேறுபாடுகள் பெரும் சமூகத்தால் மறுக்கப்படுகின்றன, நிராகரிக்கப்படுகின்றன. பெரும் சமூகத்துக்கும் புலம்பெயர்ந்த மக்கள் சமூகங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எவ்வடிப்படையில் பெரும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளவும் நிராகரிக்கவும்படுகின்றன? இது முக்கியமான ஒரு கேள்வி. இதற்கு வெவ்வேறு வகையான வியாக்கியானங்கள் நமக்குள் இருக்கக கூடும்.

இவ் விடயத்தில் நோர்வேயின் புகழ்பெற்ற சமூக மானுடவியல் பேராசிரியர் Thomas Hylland Eriksen தனது அவதானிப்பை பின்வருமாறு வெளிப்படுத்துகிறார். பெரும் சமூகத்துக்கும் புலம்பெயர்ந்த மக்கள் சமூகங்களுக்கும் இடையில் உள்ள மாறுபாடான அம்சங்களின் சிலவற்றை சாதகமாகவும் வேறு சிலவற்றைப் பாதகமாகவும் பெரும் சமூகம் கணிப்பதனை வெவ்வேறு உதாரணங்கள் மூலம் பேராசிரியர் எரிக்ஸன் அடையாளம் காட்டுகிறார். பெரும் சமூகம் பாதகமானதாக நோக்கும் மாறுபாடான அம்சங்களை, வேறுபாடுகள் (differences) என வகைப்படுத்தும் பேராசிரியர் எரிக்ஸன், பெரும் சமூகம் சாதகமானது அல்லது பிரச்சினைகளற்றது எனக் கருதும் மாறுபாடான அம்சங்களை பல்வகைமை (diversity) எனவும் வகைப்படுத்துகிறார். அடிப்படையில் நோக்கினால் இவை இரண்டுமே பெரும் சமூகத்துடன் மாறுபட்ட அம்சங்கள்தான். புலமபெயர்ந்து வாழும் சமூகங்களைப் பொறுத்த வகையில் இவையிரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்தான். இருப்பினும் இம் மாறுபாடுகளை பெரும் சமூகம் இரு வேறுபட்ட முறையில் கையாள்வதால் அவற்றை வேறுபாடுகள் எதிர் பல்வகைமை (Difference vs Diversity) என்ற அணுகுமுறையின் ஊடாக வகைப்படுத்த பேராசிரியர் எரிக்ஸன் முயல்கிறார்.

## புலம்பெயர்ந்தோரும் புகலிட நாடுகளும்!

இங்கு வேறுபாடுகள் (differences) என்பது வாழும் நாட்டின் பெரும் சமூகங்களின் விழுமியங்களுக்கும் (norms) பெறுமானங்களுக்கு (Values) முரணான வகையில் புலம்பெயர்ந்து வாழும்



திருமணம் -தமிழ் கலாசாரம்

© Alamy

மக்கள் கொண்டிருக்கும், கடைப் பிடிக்கும் நடைமுறைகள் பழக்க வழக்கங்களைக் குறித்து நிற்கும். தமது சமூகங்களின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவை எனப் பெரும் சமூகம் கருதக்கூடிய விடயங்களும் வேறுபாடுகளாக நோக்கப்படுகின்றன. சமூகப் பிரச்சினைகளாக உருவெடுக்கக்கூடிய விடயங்களாக பெரும் சமூகம் கருதக்கூடிய அம்சங்களும் இந்த வேறுபாடுகள் என்ற வகைக்குள் வருவன. கட்டாயக் கல்யாணங்கள் இந்த எதிர்மறை வகையினுள் அடங்குவதால் இவை வேறுபாடுகளாகக் கருதப்படுகின்றன. சில சமூகங்கள் மத்தியில் காணப்படும் பண்பாட்டுப் பழக்கவழக்கமான female genital mutilation அல்லது female circumcision என அழைக்கப்படும் பெண்களின் உள்ளுறுப்புகளைச் சிதைக்கும் அல்லது அகற்றும் நடைமுறையும் சமூக பிரச்சினையாக, வேறுபாடாக நோக்கப்படுகிறது.

பெரும் சமூகத்தின் விழுமியங்கள் மற்றும் பெறுமானங்களுக்கு முரணாக அமையாத பல்வேறு வெளிப்பாடுகளும் பழக்க வழக்கங்களும், அழகியல் அம்சங்கள் சார்ந்தவையும் கூடுதலாக பல்வகைமையாகப் (diversity) பெரும் சமூகத்தால் பார்க்கப்படுகின்றன. இதனால் இவை வரவேற்கப்படுகின்றன. குறைந்த பட்சம் எதிர்ப்புக்குள்ளாவதில்லை. நாம் மேற்குறிப்பிட்ட இந்திய உபகண்டத்தின் இசை, நடனம், உணவு வகைகள் போன்றவை இப் பல்வகைமை என்ற வகையினுள் அடங்குபவை. இந்த அவதானிப்பை பதிவு செய்யும் பேராசிரியர் எரிக்ஸன் நோர்வேயினை உதாரணமாகக் கொண்டு கூறுகையில், பெரும் சமூகத்தின் விழுமியங்களும் பெறுமானங்களும் தாராளவாத ஜனநாயகத்தின் பாற்பட்டதாகவே தற்போது அமைந்திருக்கிறது எனவும் குறிப்பிடுகிறார். இது ஏனைய மேற்குலகப் பெரும்சமூகங்களுக்கும்பொருந்தும்

இதேவேளை பெரும் சமூகம் தமது சமூகத்துக்கு அந்நியமான விடயங்களில் கொண்டிருக்கும் moral panic எனப்படும் ஒரு வகையான அச்ச உணர்வும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின வாழ்க்கைமுறை தொடர்பாக எழுப்பும் அச்சங்களுக்கு காரணமாக இருக்கிறது என்ற கருத்தும் புறந்தள்ள முடியாதது.

கலாநிதி சர்வேந்திரா

# அன்னம்மாவின் ஆசை




சிறுகதை

இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள்தான் அனுசனும் அபிநயாவும். இப்போ இவர்கள் இருவருக்கும் நான்கு வயதாகிவிட்டது. இவ்வயதில் அவ்வூரிலுள்ள பிள்ளைகளெல்லாம் முன்பள்ளிக்குப் போவதைக் கண்ட அன்னம்மா, தன் பிள்ளைகளையும் அனுப்புவதற்கு ஆயத்தம் செய்தாள்.

முதன்முதல் படிக்கப் போறது நல்ல நாளாக இருக்கவேண்டுமென நினைத்து, மாவடிப் பிள்ளையார் பூசகரிடம் சென்று நாட்பார்த்தாள். அடுத்த நாளே நல்ல நாளர்க இருப்பதை அறிந்துகொண்டாள்.

அடுத்த நாள் அதிகாலை அனுசனுக்கும் அபிநயாவுக்கும் கைவசமிருந்த உடுப்புகளில் நல்லதாக ஒன்றைப் போட்டு, மலிந்த விலையில் புத்தகப்பை இரண்டை வாங்கி அதில் ஒவ்வொன்றிலும் இரு கொப்பி, ஒரு பென்சில் சாப்பாட்டுப் பெட்டி, தண்ணீர்ப்போத்தல் ஆகியவற்றையும் வைத்து ஒவ்வொருதர் தோளிலும் தொங்கவிட்டவாறு முன்பள்ளிக்கு அழைத்துச் சென்றாள். அன்னம்மா.

ஒரு மாதம் ஓடி மறைந்துவிட்டது. அடுத்தமாதம் திங்கட்கிழமை உதயமாகியது. அன்றும் வழக்கம்போல் முன்பள்ளிக்குச் செல்வதற்காக பிள்ளைகளை ஆயத்தப்படுத்தினாள். உடுப்புகள் போட்டு முடிந்தவுடன் "செருப்புகள் எங்கே...?" என்று கேட்டவள், அவற்றைத் தேடி எடுத்துக்கொண்டாள்.

"அம்மா... எல்லாப் பிள்ளைகளும் சப்பாத்துப் போட்டுக்கொண்டுதான் படிக்க வருகினம் நானும் அபிநயாவும்தான் செருப்புகளோட போறம். எங்களுக்கும் சப்பாத்து வாங்கித் தாங்கம்மா." இருந்தவாறு பிள்ளைகைளக்குச் செருப்பு மாட்டிவிடும் தாயின் தோளைப் பிடித்தவாறு நின்ற மகன், தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு குழைந்து குழைந்து பேசினான். அவளின் பதிலுக்காக குனிந்து தாயின் முகத்தை நோக்குகிறான்...

அந்தப் பிஞ்சுகளின் வருடல் தாய் அன்னம்மாவை என்னவோ செய்தது...

"கொஞ்சநாள் போகட்டும் வாங்கித்தாறன்...அம்மான்ரை செல்லங்களெல்லே... இப்போதைக்கு இந்தச் செருப்பைப் போடுங்கோ..." ஒருவாறு சமாதானப்படுத்தினாள்.

இருவரையும் இரண்டு கைகளிலும் பிடித்தவாறு அன்னம்மா முன்பள்ளி நோக்கி நடந்தாள்.

வீட்டிற்கும் முன்பள்ளிக்கும் முந்நூறு மீற்றர் தூரம் தானிருக்கும். அதற்கிடையில் பிள்ளைகள் இருவரும் சொன்ன கதைகளோபல.

"அம்மா... அம்மா... இண்டைக்கு எங்கடை பிறண்ட் பாரதிக்கு பிறந்தநாளாம். ரொபியும் கண்டோசும் கொண்டு வந்து எல்லாப் பிள்ளைகளுக்கும் தாறதெண்டு சொன்னவா..! எங்கடை பிறந்தநாள் எப்ப வரும்..? நாங்களும் எல்லாப் பிள்ளையளுக்கும் குடுக்கிறதுக்கு ரொபியும் கண்டோசும் நீங்கள் வாங்கித் தருவியள் தானேயம்மா.. என்ன..." என்று அபிநயா கேட்டாள்.

பிள்ளைகளின் கேள்விக்கு என்ன பதிலைச்சொல்ல..? என யோசித்தபோது... பெற்றமனசு படபடவென்று அடித்துக் கொண்டது.

துன்பங்கள் பல வடிவங்களில் எவ்வளவு காலமாய்த் தொடருகுது...! அந்த மழலைகளின் கேள்விக்கு ஆம்.. என்று உறுதியாகப் பதிலளிக்க முடியாமல் தெண்டாடினாள்.

அவர்கள் முன்பள்ளியினுள் தங்கள் வழமையான இருப்பிடத்திலிருக்கும்வரை பார்த்துக் கொண்டு நின்றவள், பலத்த சிந்தனைகளுடன் திரும்பினாள்.

வீடு நேர்க்கி அவள் நடக்க.., மனமோ.., கடந்துவிட்ட வாழ்க்கையையே மீட்டுப்பார்த்தது.

என் அப்பாவிடம் பத்து இலட்சமளவில் பணமிருந்திருந்தால் படித்த, பண்பான உத்தியோக மாப்பிள்ளையைக்கூட திருமணம் செய்திருக்கலாம். பணம் இல்லாமையினால், நீண்ட காலமாக இழுபட்டு எனது திருமணம் மாயவனுடன் முடிந்தது. மாயவன் எமது ஊரைச் சேர்ந்தவரல்ல. இதனால், எனக்கோ என் பெற்றோருக்கோ இவரைப்பற்றித் தெரியாது. இவர்தான், எவ்வளவு பணத்தையும் உழைக்கக் கூடிய வல்லமை தன்னிடமிருப்பதால்.., ஒரு வறிய குடும்பப் பெண்ணையே திருமணம் செய்யப்போவதாக தன் விருப்பத்தைத் தெரிவித்திருந்ததாலே என் பெற்றோர், இவரொரு நல்ல இலட்சியவாதியென நம்பி ஆறு வருடங்களுக்கு முன்பு என் திருமணத்தை ஒப்பேற்றினார்கள்.

திருமண தினத்திலிருந்து மூன்று நாட்கள் மட்டுமே மதுபான நாற்றத்தை நான் சுவாசிக்கவில்லை. அதன்பின் ஒவ்வொருநாளும் மதுபான வாசனைதான்.

எங்கள் வீடு ஒரு கடற்கரைப் பிரதேசத்திற்கு அண்மையிலேயே இருந்தது. எனது கணவர், ஆணழகன் போல கம்பீரமான உடலமைப்பைக் கொண்டவர். இதனால், கடற்றொழிலாளர்கள் இவரை கரைவலைகள் இழுக்கவும் இயந்திரப்படகுகளை கடலில் இருந்து கரைக்குச் சேர்க்கவும் தினமும் வருமாறு அழைப்பார்கள். தொடர்ந்து ஒரு வாரம் வேலைக்குப் போனால், அங்கே கிடைக்கும் பணம் முடியும்வரை குடித்துக்கொண்டேயிருப்பார். இப்படியே நாட்கள் நகர குடும்பத்தில் சாப்பாட்டிற்கே கஸ்டமேற்பட்டது. இதனால் நான் வீட்டுத் தோட்டமொன்றை ஆரம்பித்தேன். இதன் பயனாய் அரைவயிற்றுக்கென்றாலும் சாப்பிடக்கூடியதாயிருந்தது.

இவ்வாறு வாழ்க்கை வறண்டு போன நிலையிலும் கல்லானாலும் கணவன் புல்லனானாலும் புருஷன் என்ற நிலைப்பாட்டில், கடவுள் எம்மைக் காப்பாற்றவார் என்ற நம்பிக்கையுடன் நான் முரண்பாடின்றி நடந்துகொண்டேன்.

திருமணம் நடந்து இரண்டு வருடங்கள் முடிவில் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தேன்... செலவும் பன்மடங்காகியது.

இந்நிலையில் நான் என் கணவரிடம் கேட்டேன் "எங்கள் பிள்ளைகளின் நலன் கருதியாவது மதுபானம் குடிப்பதை விடுங்கோ" என்று, மது குடும்ப வாழ்க்கையைக் கெடுக்கும். வறுமைக்கு வழிவகுக்கும். உடல் நலத்தைப் பாதிக்கும். இளமையிலேயே உயிரை எடுத்துவிடும் என்றேன்.

இதைக்கேட்ட என்கணவர், "உனக்கு மதுவைப்பற்றி என்ன தெரியும்? மது மனிதர்களுக்குத் தீங்கானதென்றால், அதையேன் மனிதன் உற்பத்தி செய்கிறான்? மதுதான் மனிதர்களை உற்சாகமாக இருக்க உதவுகிறது. என்பதை உனக்குத் தெரியுமா? கவலைகளை மறக்கச்செய்யும் மருந்தும் மதுவேதான்" என்ற போலிச்சாட்டுகளைக் கூறிவிட்டு எழுந்து சென்றுவிடுவார்.

அன்றிரவு வழக்கத்தை விட நல்ல வெறியாட்டம், ஏச்சுப் பேச்சுகளும் தாராளமாக ஒலித்தன. இப்படியே வேதனையும் விரக்தியும் நிறைந்த என் வாழ்க்கைக்கு மெல்ல.. மெல்ல.. நகர, பிள்ளைகளுக்கும் மூன்று வயது முடிவுற்றது.

இக்காலப்பகுதியில் என் கணவருக்கு பல உடல்நலக் குறைபாடுகள் காணப்பட்டன். குறிப்பாக பசியின்மை, வாந்தி உடல் மெலிவு, உடற்சோர்வு என்பன தலைகாட்டிக் கொண்டன. இதெல்லாம் மதுபோதையினால் வந்த விளைவுகளே என்று எண்ணி, அரச வைத்திய சாலையொன்றிற்கு அழைத்துச் சென்றேன். அங்கே சில நாட்கள் தங்கியிருந்த நிலையில் பரிசோதனைகள் நடைபெற்றன. இப்பரிசோதனைகளின்படி அதிக மது அருந்தியதனால் ஈரல் பாதிக்கப்பட்டுவிட்டதாகவும் இப்படியே குடிப்பழக்கம் தொடர்ந்தால் நீண்டகாலம் வாழும் வாய்ப்பை, இழக்க நேரிடும் என வைத்தியர் கூறிவிட்டார்.

இதைக்கேட்ட எனக்கு அழுகைதான் வந்தது. கடவுளிட்டைப் பாரத்தைக் குடுத்து, விரதம், நேர்த்தியென பக்தியோடு இருந்து ஆண்டவனை வேண்டி வருகிறன்.

ஆனால், அவர் திருந்திய பாடாக இல்லை. எமது குடும்பத்தின் மகிழ்ச்சியை எல்லாம், இந்த மது, குடித்து விடுகிறதே... என் குழந்தைகளின் நிலை நாளை என்னவாகப் போகிறது? என்ற கேள்வி எப்பொழுதுமே என்னை அரித்துக்கொண்டிருக்கும்.

என் குடும்பம் மட்டுமல்ல.. இந்த நாடே மதுவாலும் போதை வஸ்துவாலும் அல்லோல கல்லோலப்படுகிறதே...பேப்பரில தான் தினமும் செய்தியிருக்கே... 'கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பரயோகம்..! பெண்கள், குழந்தைகள் நடமாட முடியேல்லை. வீட்டில தனியா இருக்க முடியேல்ல...'

குடும்பச்- சுமை, பெண்களைப் பாடாய்ப்படுத்துகிது. இருந்தாலும் யாரும் கண்டுகொண்டதாயில்லையே..!

ஆனாலும் பொம்பிளையள் எல்லாரும் மனசு வைச்சாலே இதை அரைத்திட்டம் மாற்றத்துக்குக் கொண்டு வரலாம்.

எந்தப் பெண்ணுக்கும் துணிவு வருகுதில்லையே... எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் எங்களின்ரை கையில தானே இருக்கு... என்று சிந்தித்தவாறு நடந்தவளின் கால்களில் கல் ஒன்று இடித்து கால் இடறுகிறது. விழுந்துவிட இருந்தவள் தட்டுத்தடுமாறி நிமிர்ந்தாள். கால்பெருவிரலில் இருந்து இரத்தம் சிந்தியது... அந்த வருத்தம் அவளுக்கு பெரியதாக இருக்கவில்லை. அவளின் மனதில் இருக்கும் வருத்தமே பாறாங்கல்லாக அழுத்தியது...

குடியை மறக்கிறதுக்கு ஏதோ வைத்தியம் இருக்கிறதாமே...

வைத்தியரையே நாடவேண்டும் எண்ணவிதப்பட்டும் இவரை அங்கு அழைத்துச் செல்ல வேண்டும் என திடசங்கற்பம் பூண்டவளுக்கு ... சிகரெட்டை மறப்பதற்கு சினேகிதியின் வீட்டில், தொலைக்காட்சியில் பார்த்த விளம்பரமும் ஞாபகத்துக்கு வந்தது.

வீட்டிற்குச் சென்றதும் தன்னுடன் மாதர்சங்கத்தில் பங்காளிகளாக இருக்கும் பெண்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்தாள்... மதுப் பழக்கத்தை மறக்கடிப்பதற்காக நவீன உலகில் உள்ள உத்திகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றையும் கலைநிகழ்சி ஒன்றையும் மாதர் சங்கத்தினுடாக மக்களுக்கு முன்னால், அரங்கத்தில் கொண்டு வருவதறங்கு ஆவன செய்வது பற்றியதாய் அது இருந்தது.

ஆனாலும், அவளால் நிம்மதியடைய முடியவில்லை...

எந்தப்பெரிய பிரச்சினை இது... எனது இந்த நட வடிக்கை எத்தகைய மாற்றத்தைத் தரப் போகிறது..!

முதலில் பெண்கள் நாம், சளைக்காது ஒன்றுசேரவேண்டும். அடுத்து படிப்படியாக ஏதாவது செய்துகொண்டே இருக்கவேண்டும் எல்லோரும் எல்லாத்தரப்பினரும்சேர்ந்து... சேர்ந்து...

பிறகு ஏதாவது பெரிசா செய்யலாம்...

எனது பிள்ளைகளைப் போன்று எல்லாப் பிள்ளைகளின் எதிர்காலமும் நல்லாக அமைய வேணும்...இதை எல்லாரும் நினைக்கவும் வேணும்...

சிந்தனைகள் கடல்போல் அலைமோத திடுக்குற்றவள்...

மலையளவு பிரச்சினையைத் தீர்க்க, தனது தினையளவு முயற்சியை எண்ணுகையில் விழி கசிந்தாளாயினும் மன உறுதியோடு நிமிர்ந்தாள்.

'எனது பிள்ளைகளுக்காக..! நான் இந்த முயற்சியை ஒரு போதும் கைவிட்டுவிட முடியாது... எனது பிள்ளைகளின் வாழ்க்கையை மீட்டெடுத்தேயாவேன்... இதற்காக எப்பொழுதும் போராடுவேன்.'

அமைதியோடு கிழக்கு நேக்கி திரும்பினாள். சூரியபகவான் கண்முன்னே தெரிகிறான்... மன்றாடுகிறாள்..

"பகவானே என் இலட்சியத்துக்கு துணைநில்"

சத்தியம் செய்கிறாள் "இன்றிலிருந்து நான் போராளி அன்னம்மா"

சி.காசிப்பிள்ளை



# முதலாளித்துவத்தின் சந்தை விதிகளே ஜனநாயகத்தின் விதிகள்

பொது மக்களுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு எப்படி பூச்சியமாக்கப்பட்டு முதலாளி வர்க்கம் மக்களை தனது தேவைக்காகப் பயன்படுபொருளாக மாற்றிக்கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு மறுகாலனியச் சித்தாந்தத்தை விளங்கிக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

உழைக்கும் மக்களைத் தேர்தல் நடைமுறையிலிருந்து விலக்கி வைப்பது,வாக்குப்போடுவது தவிர, அவர்களுக்கு வேறு எந்த பாத்திரமும் இல்லாமல் செய்வது என்பது இன்றைய உலகளாவிய ஜனநாயக அரசுகளின் முக்கிய நோக்கமாக உள்ளது. மறுகாலனியாதிக்கச் சித்தாந்தப்படி மக்களை அரசியலிலிருந்தே விலக்கி வைக்கவேண்டும் மார்க்சியம், காந்தியம், தேசியம் போன்ற எந்த இசங்களிலும், அறநெறிகள், சமூக மதிப்பீடுகள் எதிலும் நம்பிக்கையோ, மதிப்போ, அக்கறையோ அற்றவர்களாகவும் அவற்றைப் பிற்போக்கானதாகவும் பத்தாம்பசலித்தனமாகவும் கருதி முகம் சுளித்து ஒதுக்கித் தள்ளுபவர்களாகவும் மாற்ற வேண்டும் என்பதுவே இதன் அடிப்படை நோக்கம்.

மறுகாலனிய சித்தாந்தம், அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவில் அரசியல் குடிமகன் என்ற அம்சத்தையே ஒழித்துவிட்டு, குடிமக்களை வெறும் நுகர்வோராக மட்டுமே கருதி நடத்துகிறது. இதற்கேற்பவே அரசும் அரசியலும் மாற்றப்பட்டுள்ளது. "குடிமகனான உனது பணி ஒழுங்காக வேலைக்குப் போவது கடுமையாக உழைத்து பணம் ஈட்டுவது அதை வைத்துக் கொண்டு வகைவகையான நுகர் பொருட்கள், புதிதுபுதிதாக நவீனமாக வந்து கொண்டிருக்கும் செல்போன் போன்ற நுகர்பொருட்களை வாங்கி அனுபவி விதவிதமான உணவுப் பொருட்களையும் நொறுக்குத் தீனிகளையும் வாங்கி ருசித்து இன்புற்று மலிவாகக் கிடைக்கும் டி.வி.டி.-க்களை வாங்கி வந்து கிளுகிளுப்பூட்டும் திரைப்படங்களைப் பார். பாடல்களை ரசித்துக் கேள் கிரிக்கெட் பார். நன்றாக தண்ணி போட்டு ஜாலியாக இரு. கும்பலாகச் சுற்றுலா சென்று அனுபவி திருவிழா கொண்டாடு. சமூக சேவை, அரசியல் என்று போய் இவ்வளவையும் இழக்காதே " என்றுதான் மறுகாலனிய சித்தாந்தம் கற்பிக்கின்றது. இத்துடன் முதலாளித்துவ ஜனநாயகத்தின் சீரழிவையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அரசியல் ஒரு சாக்கடை அந்தப் பக்கம் போகாதே என்றும் பரப்புரை செய்கிறது.

பள்ளி, கல்லூரி பாடத்திட்டங்களிலிருந்து அறநெறிகளைக் கற்பிக்கும் பாடங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. " சுயமுன்னேற்றக் கண்ணோட்டத்தில்படித்து வேலைக்குப் போகவேண்டும் நன்றாக சம்பாதிக்க வேண்டும் அதற்கு எந்தவித முறையையும் கையாளலாம். வாழ்க்கையை வகைவகையாக அனுபவிக்க வேண்டும்" என்ற மனோபாவத்தையும், சுயநல போட்டி மனப்பான்மையையும் உருவாக்குவதன் மூலம் மாணவப் பருவத்திலேயே வளரும்தலைமுறையினர் அரசியல் பக்கம் தலைகாட்டாமல் தடுக்கப்படுகிறார்கள். இதற்கேற்ப பள்ளி, கல்லூரிகளில் மாணவர் பேரவைத் தேர்தல்கள் தடை செய்யப்படுகின்றன.

ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் நடத்தத் தடை நடத்த அனுமதித்தாலும் ஆள்நடமாட்டம் அதிகம் இல்லாத இரண்டு, மூன்று இடங்கள் தவிர, பிற இடங்களில் நடத்த அனுமதி மறுக்கப்படுவது பேரணிகள் நடத்த, சுவரொட்டிகள் ஒட்டத் தடை போடப்படுகிறது. புதுப்புது அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்படுகிறது.

இவை எல்லாவற்றின் நோக்கமும் ஒன்றுதான் ஆக, அதிகளவில் உள்ள உழைக்கும் மக்கள் அரசியலையே வெறுத்து ஒதுக்க வேண்டும் அரசியலில் ஈடுபாடு கொள்ளக்கூடாது. அவர்களின் ஒரே அரசியல் நடவடிக்கை தேர்தல் வரும்போது ஓட்டுப் போடுவது மட்டுமே. இவ்வாறு அவர்களை அரசியலிலிருந்து விலக்கி வைப்பது, அரசியல் தீண்டாமையை அவர்கள் மீது ஏவி விடுவது என்பதுதான் மறுகாலனியாதிக்கக் காலகட்டத்தின் நடைமுறையாகும்.

மேற்சொன்னவற்றை தொகுத்து சாராம்சமாகச் சொன்னால், தனது ஆதிக்கத்திற்கும் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தடையாகவுள்ள 'தேசிய' அரசு, தேசங்களின் 'இறையாண்மை', அவற்றின்சட்டங்கள் ஆகியவற்றைத் தகர்ப்பதுடன், இத்தகைய தேசிய அரசுகளுடன் சேர்த்து கட்டியெழுப்பப்பட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தையும்தகர்த்து நொறுக்கி வருகின்றது, சர்வதேசியமயமாகிவிட்ட ஏகாதிபத்திய நிதிமூலதனம். மேல்நிலை வல்லரசுகளின்-ஆக்கிரமிப்புகள் ஆகியவை ஒருபுறமிருக்க, உலகப் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான சர்வதேச நிறுவனங்கள் என்றழைக்கப்படும் உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளின் ஆணைகளுக்கு ஆடும் அரசாகவே தேசிய அரசுகளும் அதன் சட்டமன்றங்களும் நாடாளுமன்றமும் மாற்றப்பட்டுள்ளன.

மேல்நிலை வல்லரசுகள் மற்றும் ஏகாதிபத்தியங்களின் அதிகார வர்க்கங்களாலும் தேசங்கடந்த மற்றும் பன்னாட்டு தொழிற்கழகங்களின் நிர்வாகிகளாலும் சர்வதேச நிதிமூலதனக் கும்பல்களாலும் முதலாளித்துவ வல்லுனர்களாலும் நிரப்பப்பட்டுள்ள இந்த நிறுவனங்கள் தான் (எந்த மக்களாலும் இவை தேர்ந்தெடுக்கப்படுவதில்லை) உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளினதும் ஜனநாயகத்தை, அதன் அரசைக் கட்டுப்படுத்துகின்றன் ஆட்டுவிக்கின்றன.

மறுகாலனியச் சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் ஆட்படுத்தப்பட்டுள்ள பல நாடுகளிளன் பொருளாதாரம் எப்படி பன்னாட்டுத் தொழிற்கழகங்கள் மற்றும் சர்வதேச நிதிமூலதனத்தின் நலனுக்கேற்ப தனியார்மயம் தாராளமயம், உலகமயத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ளதோ, அதே போல இவற்றின் நலன்களுக்காகவும் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் உலக மேலாதிக்கத்திற்காகவும் தனியார்மய, தாராளமய, உலகமயக்கொள்கைகள் அரசுக்கட்டமைபபுக்குள்ளும் புகுத்தப்படுகின்றன. அதன் கட்டுமானம், சட்டங்கள், விதிமுறைகள், பணிகள், செயல்பாடுகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு 'ஜனநாயக' அரசமைப்பின் கட்டுமானங்களிலும் அதன் நடைமுறைகளிலும் முதலாளித்துவ சந்தையின் விதிகள் புகுத்தப்பட்டு, அவை மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இதனால முதலாளித்துவ சந்தையின் விதிகளே ஜனநாயகத்தின் விதிகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

அரைகுறை இறையாண்மையையும் இழந்து வருகின்ற அல்லது மாற்றி உருவாக்கப்பட்டுக் கொணடிருக்கிற போலி ஜனநாயக அரசுகளும் கூட அதன் உள்ளடக்கத்தை முற்றிலுமாக இழந்து வருகின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மக்களைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்பது வாக்களிப்பதாக மட்டும் வெட்டிக் குறுக்கப்பட்டு விட்டது. அதுவும் கூட, 'தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் நாட்டு நலன், மக்கள் நலன் கருதி, விருப்பப்பட்டு, எந்தவித நெருக்குதலுமின்றி சுதந்திரமாக, சுயேச்சையாக தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை மேற்கொண்டு வருகின்றன' என்று காட்டி மறுகாலனியாதிக்கத்திற்கு நியாய உரிமை பெறுவது என்ற காரணத்திற்குத்தான் மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

நாடுகள் பல ஆங்கிலேயர்களின் நேரடி காலனியாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலகட்டத்தில், விடுதலைப் போராட்டத்தை நீர்த்துப் போகச்செய்வதற்கும், எதிர்ப்புகளை நிறுவனமயமாக்குவதற்கும் பதவிகளில் ஒட்டிக் கொண்டு சலுகைகளை அனுபவிக்கவும், நாட்டுப்பற்று அற்ற பிழைப்புவாத கும்பல்களை ஊக்குவிக்கவும் மேலிருந்து திணிக்கப்பட்டது நாடாளுமன்ற தேர்தல் ஜனநாயகம். காலனியாதிக்கத்தை கட்டிக் காக்க ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் கிரிமினல் மூளையில் உதித்த இந்த சாணக்கியத் திட்டம் வெற்றிகரமாகவே நிறைவேறிற்று என்று சொல்ல வேண்டும்.

காலனிய காலம் தொடங்கி 1950-களின் தொடக்கத்தில் திணிக்கப்பட்ட நவீன காலனிய ஆதிக்க காலகட்டத்தில் செழித்து வளர்ந்த அரசியல் பிழைப்புவாதமும் சீரழிவும் 1980, 1990-களில் அதன் உச்சத்தை எட்டியது. தனிக்கட்சி ஆட்சி போனது. கூட்டணி ஆட்சிகள், கட்சித் தாவல்கள், கூட்டணிகள் உடைவது, அரசாங்கங்கள் கவிழ்வது, புதுக்கூட்டணி, புது அரசு, சில மாதங்கள் - வருடங்களுக்குள் மீண்டும் கட்சித் தாவல்கள், அரசுகள் கவிழ்வது என்று நாடாளுமன்ற அராஜகம் தலைவிரித்தாடியது.

மேல்நிலை வல்லரசுகளின் தோற்றம், நிதிமூலதனம் சர்வதேசியமயமானது, தேசங்கடந்த மற்றும் பன்னாட்டு தொழில் கழகங்கள், அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி, ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடி ஆகியவைகளின் விளைவாக நவீன காலனியாதிக்கம் அகற்றப்பட்டு, மறுகாலனியாதிக்கம் இந்த காலகட்டத்தில்தான் புகுத்தபபட்டது. சர்வதேச வலைப்பின்னல்களால், ஒரே சங்கிலியால் கட்டப்பட்டிருந்த நிதி மூலதனத்தின் செயல்பாடுகளுக்கும் தேசங்கடந்த தொழில்கழகங்களுக்கும் நாடாளுமன்ற அராஜகமும் நிலையற்ற ஆட்சிகளும் எதிரானவை எதிர்பாராத வகையில் திடீர் திடீரென தடைபோடுபவை எனவே, அவற்றை ஒழிக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமும் கட்டாயமும் ஆகியது. இதற்கேற்பவே மறுகாலனியாதிக்க நலன்களுக்காகவே நிலையான ஆட்சி, சிறந்த அரசாளுமை என்ற முழக்கங்களை முன்வைத்துள்ளனர். நிதிமூலதனம், பன்னாட்டு முதலாளிகளின் தனியார்மயச் சுரண்டலும் ஆதிக்கமும் தங்கு தடையின்றி நடப்பதற்கு ஏற்ற நிலையான ஆட்சி, சிறந்த ஆளுமை, வலுவான ஆட்சி ஆகியவையே தேர்தல் மற்றும் ஜனநாயகத்தின் ஒரே இலக்காக மாற்றப்பட்டுள்ளது.

தேர்தல் என்பது ஏகாதிபத்தியத்தின் பிள்ளைப்பருவத்தில், அதாவது 20-ம் நூற்றாண்டின் துவக்க பத்தாண்டுகளில், நேரடி காலனியாட்சி பிரதான வடிவமாக இருந்த காலகட்டத்தில், கம்யூனிச, தேசிய இயக்கங்கள் ஏற்றம்பெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில், நேரடிக் காலனிய ஆட்சியைப் பாதுகாக்க ஏகாதிபத்தியவாதிகளால் புகுத்தப்பட்டது. அன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கும் எதிர்ப்புகளை நிறுவனமயமாக்குவதற்கும், பதவிகளில் ஒட்டிக் கொண்டு அரசு சன்மானங்களைப் சலுகைகள் - கௌரவங்களை அனுபவிக்கவும் நாட்டுப்பற்று அற்றுப் போகும்படியான பிழைப்புவாத கும்பல்களை உருவாக்கவும் 'ஜனநாயக தேர்தல் அரசியலைப்' புகுத்துவது ஏகாதிபத்தியங்களின் நலனுக்கு உகந்ததாக இருந்தது.

இன்று ஏகாதிபத்தியத்தின் ஏற்றத்தாழ்வான அரசியல், பொருளாதார வளர்ச்சிப் பேரக்கின் விளைவாக, மேல்நிலை வல்லரசுகள்-அவற்றின் மேலாதிக்கம், ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடி, பின்னடைவு மற்றும் சீரழிவு காரணமாக கம்யூனிச-தேசிய இயக்கங்கள் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்த உலக நிலைமை காரணமாக, மறுகாலனியாதிக்க முறையிலான காலனிய ஆட்சி வடிவத்தை மேலாதிக்க வல்லரசுகள் பிரதானமாகக் கையாண்டுவரும் நிலைமையில், ஜனநாயகமும் தேர்தலும் வெட்டிச் சுருக்கப்பட்டு பரந்துபட்ட மக்கள், அரசியலில் இருந்தே விலக்கி வைக்கப்பட்டு வருகின்றனர்.

'தேர்தல் அரசியல்' சீரழிவின் விளைவாக பல்கிப் பெருகி பேயாட்டம் போடுகின்ற பிழைப்புவாதக் கும்பல்கள், நாடாளுமன்ற அராஜகம் ஆகியவற்றினால் பாதிக்கப்படாமல், சட்டமன்றங்கள் -நாடாளுமன்றங்களுக்கு இதுவரையிலிருந்த வரம்புக்குட்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் உள்ளிட்ட அதிகாரங்களையும் பறிதத்துக் கொண்டு அவற்றை வெறும் "நீயா, நானா" விவாத மன்றங்களாக்கிவிட்டு, அந்த மன்றங்களுக்கு வெளியே எல்லா அதிகாரங் களையும், கார்ப்பரேட் முதலாளிகள், அவர்களின் கூலி வல்லுநர்கள், அதிகார வர்க்கத்தினர், நம்பகமான அரசியல் அடிவருடிகள் ஆகியோரைக் கொண்ட குழுக்களிடம் ஒப்படைக்கும் வகையில் அரசின் கட்டமைபபும் அதன் செயல்பாடுகளும் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் இன்னொரு பக்கமாகததான், எப்படியும் பணம் சம்பாதித்து உல்லாசமாக வாழ வேண்டும் என்கின்ற நெறியின்மையிலும், நுகர்வு வெறியிலும், போதையிலும் சீரழிவிலும் மக்களை ஆழ்த்து வதும், கிரிக்கெட், திரைப்படம், செலபோன் போன்ற மோகங் களால் மட்டுமே ஆட்டுவிக்கப் படுகின்ற, தேசப்பற்றோ, கொள்கை-இலட்சியங்களோ அற்ற, நடமாடும் பிண்டங்களாக மக்களை மாற்றுவதும் திட்டமிட்டு செய்யப்பட்டு வரு கின்றது. காலனிய கட்டத்தில் தேர்தல் அரசியலைப் புகுத்தி மக்களைச் சீரழித்த ஏகாதிபத் தியம், மறுகாலனிய கட்டத்தில் மக்களை அரசியல் அற்றவர்களாகவும், அரசியலின் மீதே அருவருப்பு கொண்டவர்களாகவும் மாற்றி வருகின்றது. அரசியல் பச்சோந்தித்தனம், பச்சையான அம்மணமான, வெட்கம் - மானம் ஏதுமற்ற பிழைப்புவாத அரசியல் தகிடுதத்தங்களால் வெறுப்பின் எல்லைக்கே சென்று, யாராவது நல்லவன் வந்து ஏதாவது நல்லது செய்ய மாட்டானா என எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து, மக்களது மனம் இறுகி விட்டது. வாக்குச் சீட்டை ஒரு சரக்காக கருதும் மனநிலைக்கு கருத்து ரீதியாகவே அவர்கள் வந்துவிட்டார் கள். அல்லது யார் அதிக பொருட்களும் இலவசங்களும் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு வாக்குரிமையை விற்கத் தயாராக இருக்கிறார்கள். "நீ எனக்கு பதவி தா நான் உனக்கு மிக்சி, கிரைண்டர், மடிக்கணினி தருகிறேன்" என்று பகிரங்கமாக வோட்டை விலை பேசுவதாக தேர்தலே மாறியிருக்கிறது.

மக்கள் முதலில் நவீன அரசியல் சூத்துமாத்துகளைப் புரிந்து கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். இல்லையேல் கும்பல் கும்பலாகவும் உதிரிகளாவும் கேட்க நாதியின்றி கொல்லப்பட்டுக கிடப்பது தவிர்க்கப்பட முடியாத - அதிகாரப்போட்டியின் விளைவுகளாகத் தொடரும்.




# தமிழ் அரசியல் கைதிகளால் வடக்கு-கிழக்கு முடங்கியது

தமிழ்க் கைதிகள் உட்பட
அரசியல் கைதிகளின் விடு
தலையை வலியுறுத்தி வட
க்கு கிழக்கில் நேற்றுமுன்
தினம் அனுஷ்டிக்கப்பட்ட பூரண
ஹர்த்தால் மீண்டும் பழைய
நினைவுகளை ஞாபகப்படுத்
தியுள்ளது.

ஹர்த்தால், வீதித்தடை,
பொருட்களுக்கான தட்டுப்
பாடு என்பனவெல்லாம் தமி
ழர் தாயகத்திற்கு பழகிப் போன
வார்த்தைகள் .

தமிழர் தாயகத்தில் முப்
பது ஆண்டுகாலமாக நீடித்த
யுத்தம் இவற்றை பூர்வீக மக்
களுக்கு நன்கு புகட்டியுள்ளது.

மக்கள் மறக்க நினைத்தா
லும் மறக்கமுடியாத நினைவு
களை ஆழமாகப் பதியவைத்
துள்ள போர்க்காலம், இன்
னும் தமிழருக்கு விடிவு ஏற்பட
வில்லை என்பதையும் அடிக்
கடி நினைவுபடுத்தவும் தவறு
வதில்லை. தமிழ் அரசியல்
கைதிகளின் விடுதலையைக்
கோரி நடைபெற்ற ஹர்த்தா
லும் போரின் விளைவால்
ஏற்பட்ட ஒன்றுதான்.

என்னதான் இன,மத, மொழி
பேதம் நாம் பார்ப்பதில்லை
என்று ஆட்சியாளர்கள் வாய்ச்
சவடால் விட்டாலும் நடை
முறையில் பேதம் பார்ப்ப
தைத் தவிர வேறு எதை
யுமே பார்ப்பதில்லை என்ப
தற்கு எடுத்துக் காட்டாகவும்
இக் ஹர்த்தால் அனுஷ்டிப்பு
அமைந்துள்ளது.

போர்க்காலத்தில் பொய்க்
குற்றச்சாட்டின் பேரில் கைது
செய்யப்பட்டு குற்றச்சாட்டுக்
கள் எதுவுமின்றி தடுத்து வைக
கப்பட்டுள்ள தமிழ் அரசியல்
கைதிகளின் விடு தலையை
காலதாமமாக்கும் அரசு அவர்
களை தொடர்ந்து விசார
ணைக் கைதிகளாகவே
வைத்திருக்க முனைப்புக் காட்டி
வருகின்றது.

சிறையிலுள்ள அரசியல்
கைதிகள் அனைவரையும் உட
னடியாக விடுதலை செய்ய
வேண்டும் என்ற கோரிக்கை
யினை முன்னிலைப்படுத்தி
இரண்டாவது முறையாகவும்
கடந்த 11 ஆம் திகதி உண்ணா
விரதப் போராட்டத்தை ஆரம்
பித்துள்ள அரசியல் கைதிகளில்
12 கைதிகளின் உடல் நிலை
மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்
டுள்ளது. இந்நிலையில் சிறைச்
சாலை வைத்தியசாலைகளில்
அவர்கள் அனுமதிக்கப்பட்டு
ள்ளனர்.

இந்த எண்ணிக்கை நாளுக்கு
நாள் அதிகரித்த வண்ணமே
யுள்ளன. இருப்பினும் அரசி
யல் கைதிகள் தமது உண்
ணாவிரதப் போராட்டத்தை
கைவிடும் முடிவுக்கு இதுவரை
வரவில்லை.

அரசியல் கைதிகளின் உண்
ணாவிரதப் போராட்டத்தை
தடுத்து நிறுத்த பொய் வாக்கு
றுதிகளை அள்ளிவிட முன்வரு
வோர் கைதிகளை விடுவிப்
பதில் அக்கறை செலுத்தத் தவறி
விட்டனர்.

31 அரசியல் கைதிகளை
முதற்கட்டமாக பிணையில் விடு
விக்க அரசு முன்வந்த போதும்
அதுஏமாற்று வேலையாகவே
அமைந்துள்ளது. தமிழ் அரசி
யல் கைதிகளை எந்தவித நிப
ந்தனையுமின்றி விடுதலை
செய்யுமாறு கோரிக்கையை
முன்வைத்து தமிழ்க் கைதிகள்
பட்டினிப் போராட்டம் நடத்த
சிங்களக் கைதிகளை அதுவும்
அரசியல் கைதிகள் அல்லாத
வேறு குற்றச்சாட்டுக்களின்
பேரில் கைதானவர்களையும்
இணைத்து விடுவித்து தனது
ஏமாற்று வேலையை அரசு
அரங்கேற்றியுள்ளது.

இருப்பினும் சகல அரசியல்
கைதிகளையும் விடுதலை செய்
யக் கோரி சிறைச்சாலைகளில்
உண்ணாவிரப் போராட்டத்தை
ஆரம்பித்துள்ள தமிழ்க் கைதி
கள் போராட்டத்தை தொடர்ந்து
முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழ்க் கைதிகளுக்கு ஆதர
வாக தமிழ்த் தேசியமக்கள்
முன்னணி, தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பு மற்றும் அரசியல்
கட்சிகள், வர்த்தக சங்கங்கள்,
பொது அமைப்புக்கள் சமய
நிறுவனங்களும் இணைந்து
ஹர்த்தால் அனுஷ்டித்து ஆத
ரவை வெளிப்படுத்தியுள்ளன.

வடக்கு மாகாண முதலமை
ச்சர் சி.வி.விக்னேஸ்வரன்
உள்ளிட்ட வடக்கு அமைச்சர்
கள் கடந்த வியாழக்கிழமை
ஜனாதிபதி மைத்திரிபால சிறி
சேனவை சந்தித்துப் பேச்சு
வார்த்தை நடத்திய போது அரசி
யல் கைதிகளின் விவகாரம்
குறித்து எதிர்வரும் திங்கட்கி
ழமை (நாளை திங்கட் கிழமை)
உரிய பதில் அளிக்கப்படும் என்ற
வாக்குறுதியை ஜனாதிபதி வழ
ங்கியிருந்தார். இருப்பினும்
அரசியல் கைதிகள் போராட்டத்
தைக கைவிடாது தொடர்ந்த வண்
ணமேயுள்ளனர். காரணம் ஜனா
திபதி நேரடியாக தமது விடு
தலை தொடர்பாக உறுதியளி
க்க வேண்டும் என்பதே அவர்
களின் கோரிக்கை.

தமிழ் அரசியல் கைதிகளின்
நோக்கம் பிணை அனுமதியு
டன் வெளியில் செல்வதல்ல.
விடுதலை பெற்று வெளியில்
செல்ல வேண்டும் என்பதே
அவர்களின் நோக்கமாக அமை
ந்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்
தின் கீழ் கைதுசெய்யப்பட்டு
பல ஆண்டுகளாக சிறைச்சாலை
களில் தடுத்து வைத்து சித்திர
வதைகளை அனுபவித்த பின்
னரும் கூட பிணை அனுமதி
யுடன் நீதிமன்ற வழக்குகளு
க்கு முகங்கொடுக்கவேண்டும்
என்ற நிலை நீடித்தால் அவர்
களின் வாழ்க்கையில் விடிவு
பிறக்க வாய்ப்பிருக்கமுடியாது.

கைதிகள் விடுதலையில்
அரசு மெத்தனப் போக்கை இனி
யும கடைப்பிடித்தால் அது எவ்வ
ளவு பாரதூரமான விளைவை
ஏற்படுத்தும் என்பதை நேற்று
முன்தினம் இடம்பெற்ற ஹர்த்
தாலுடன் அரசுக்கு நன்கு உணர்
த்தப்பட்டுள்ளது. தமிழ் தாய
கத்தில் ஹர்த் தால் அனுஷ்டிக்
கப்பட்டதால் தமிழ் மக்களின்
இயல்பு நிலை தான் பாதிக்கப்ப
டடது . இதனால் எமக்கு எவ்வித
நட்டமும் இல்லை என்று ஆட்சி
யாளர்கள் கருதுவார்களேயா
னால் அது அவர்கள் செய்யும்
பெருந் தவறாகிவிடும்.

தமிழ் அரசியல் கைதிக
ளின் விடுதலையை வலியுறு
த்தி வடக்கு கிழக்கில் அனுஷ்டி
க்கப்பட்ட ஹர்த்தாலுக்கு மக்கள்
பூரண ஆதவை வழங்கியி ருந்
தனர். இதன் மூலம் தமிழர்கள
என்றும் சிங்கள ஆட்சியாளர்க
ளுக்கு எதிராக ஓரணியில் திர
ளத் தயாராகவேயுள்ளனர் என்
பதை பறை சாற்றியுள்ளனர்.

வடக்கு- கிழக்கு தமிழர்
தாயகம், இங்கு சிங்களப் படை
களின் பாதுகாப்புத் தேவையி
ல்லை, சிங்களக் குடியேற்றங்
களை ஏற்க முடியாது என்று
எதிர்ப்பை பலமாக வெளிப்
படுத்திவரும் நிலையிலும்
காடழிப்பு ஒருபுறம், காணி சுவீ
கரிப்பு ஒருபுறம் என்று பிரதே
சத்தைச் சாராத மக்களின்
திட்டமிட்ட குடியேற்றங்கள்
அரங்கேற்றப்பட்டு வருகின் றன.

இவற்றுக்கு எதிராகவும்
மக்கள் தமது போராட்டங்
களை இடைவிடாது முன்னெ
டுத்து வருகின்றனர். இப்
போரா ட்டங்கள் சிங்களவர்
களின் அடக்குமுறை களை
சர்வதேசத்துக்கு உணர்த்து
வதாகவே அமைந்துள்ளன.

தமிழனை சர்வதேசமும்
சிங்கள ஆட்சியாளர்களும்
தொடர்ந்து ஏமாற்றலாம் என்று
காணும் பகல் கனவு என்றோ
ஒருநாள் கலைந்து போகும்.
அப்போது ஆட்சியாளர்களும்
அவர்களுக்கு ஆதரவாக பதவி
ஆசையில் துணை போனவர்க
ளும் காணாமற் போவார்கள்.

உறவினர்களுடன் இணை
ந்து எஞ்சியுள்ளகாலத்தைப்
போக்கவேண்டும் என்று சிறை
ச்சாலைகளிலும் வதை முகா
மகளிலும் கண்ணீருடன் ஏங்
கிக் கொண்டிருக்கும் அப்பா
வித் தமிழரை இனியாவது
விடுதலை செய்ய நல்லாட்சி
அரசு செயற்படவேண்டும்.

நல்லாட்சி என்பது சிங்கள
வர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்
டதல்ல. அது தமிழருக்கும்
உரித்தானது. இதை சிங்கள
ஆடசியாளர்கள் உணர வேண
டும். நல்லாட்சி மலர வும்
மகிந்த ஆட்சிக விழவும் தமி
ழர்கள் தான் முக்கிய பங்காற்
றியிருந்தனர். தமிழர்களின்
வாக்குகள் ஊடாகவே மைத்
திரிக்கு இந்தநாட்டில் உயரிய
ஸ்தானம் கிடைத் தது. இதை
ஜனாதிபதியும்அவருடன் இணை
ந்து ஆட்சிப்பீடம் ஏறியவர்க
ளும் மறந்துவிடக்கூடாது.

நல்லாட்சியிலும் தமிழன்
கண்ணீர் சிந்துவதை நிறுத் த
வில்லை என்றால் அதனை
நிறுத்த ஆட்சியாளர்கள் முன்
வரவில்லை என்றால் நல்
லாட்சிக்கு வித்திட்ட மாதுளு
வாவே சோபிததேரரின் ஆத்மா
சாந்தியடையாது அலைந்து
கொண்டே இருக்கும்.

**காண்டீபன்**

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: நான் ஆணையிட்டால்....
திரைப்படம்: எங்க வீட்டுப்பிள்ளை
பாடலாசிரியர்: வாலி
இசை: எம்.எஸ். விஸ்வநாதன், டி.கே. ராமமூர்த்தி
பாடியோர்: டி.எம். சௌந்தரராஜன்
ஆண்டு: 1965




நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் இங்கு
ஏழைகள் வேதனைப்படமாட்டார்
உயிர் உள்ள வரை ஒரு துன்பமில்லை அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார் அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்
நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் இங்கு
ஏழைகள் வேதனைப்படமாட்டார்
உயிர் உள்ள வரை ஒரு துன்பமில்லை அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார் அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்
ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன்
தேவன் என்றாலும் விட மாட்டேன்
ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன
தேவன் என்றாலும் விட மாட்டேன்
உடல் உழைக்கச் சொல்வேன்
அதில் பிழைக்கச் சொல்வேன் அவர்
உரிமைப் பொருட்களைத் தொட மாட்டேன்

நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் இங்கு
ஏழைகள் வேதனைப்படமாட்டார்
உயிர் உள்ள வரை ஒரு துன்பமில்லை அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார் அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்
சிலர் ஆசைக்கும் தேவைக்கும் வாழ்வுக்கும் வசதிக்கும்
ஊரார் கால் பிடிப்பார்
ஒரு மானமில்லை அதில் ஈனமில்லை அவர்
எப்போதும் கால் பிடிப்பார்
எதிர்காலம் வரும் என் கடமை வரும் இந்தக்
கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்
பொது நீதியிலே புதுப்பாதையிலே வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன் வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன்
நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் இங்கு
ஏழைகள் வேதனைப்படமாட்டார்
உயிர் உள்ள வரை ஒரு துன்பமில்லை அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார் அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்

இங்கு ஊமைகள் ஏங்கவும் உண்மைகள் தூங்கவும்
நானா பார்த்திருப்பேன்?
ஒரு கடவுள் உண்டு அவர் கொள்கை உண்டு அதை
எப்போதும் காத்திருப்பேன்
முன்பு இயேசு வந்தார் பின்பு காந்தி வந்தார் இந்த
மானிடர் திருந்திடப் பிறந்தார்
இவர் திருந்தவில்லை மனம் வருந்தவில்லை அந்த
மேலோர் சொன்னதை மறந்தார் அந்த
மேலோர் சொன்னதை மறந்தார்
நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் இங்கு
ஏழைகள் வேதனைப்படமாட்டார்
உயிர் உள்ள வரை ஒரு துன்பமில்லை அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார் அவர்
கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்

ஆஹாஹா ஆஹாஹா ஆஹாஹாஆஹாஹா.....

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

ஏ.தர்மலிங்கம்- காரைநகர், குணா, சுரேஸ், சியாமினி, பவானி, றாதா, வினோ, மரிசுதன், சாந்தா, பிறின்ஸ், தனுசன் - யாழ்ப்பாணம், எஸ்.ரஜந்தன் அச்சுசேலி, கமேஷா - உடுப்பிட்டி, பத்மதேவி - மானிப்பாய், எஸ்.ஜெயவர்ணன் - ஆனைக்கோட்டை, மதனகுமார், ஜெகதீஸ்வரன் - கோண்டாவில், சூர்யா - யாழ்ப்பாணம், சுகநாதஸ், டெரி- யாழ்ப்பாணம், விமலநாதன் - சுன்னாகம்.

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## கண்ணிமை-குறும்பட விமர்சனம்

உளசமூக வள நிலையம், மாகாண கல்வித்திணைக்களம் வெளியிட்ட குறும்படம் கண்ணிமை. இதனை எழுதி இயக்கியுள்ளார் நா.கு.மகிழ்ச்சிகரன். உண்மைச் சம்பவம் ஒன்றினை அடிப்படையாகக்கொண்டு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஒன்றினை ஏற்படுத்தும்முகமாக இக்குறும்படம் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலையில் கல்வி பயிலும் பெண்பிள்ளையின் பார்வையில் குறும்படம் நகர்கின்றது. அவளின் குடும்பம் இறுக்கமானதாக இருகின்றது. எப்போதும் தந்தை முழுநேரமும் தனது தொழில்சார்ந்த சிந்தனையில் செலவிடுகின்றார். அம்மா தொலைகாட்சி நிகழ்ச்சியில் நேரத்தினை செலவிடுகின்றார். போதிய அரவணைப்பும் பாசமும் இன்றி அவர்களின் மகள் வளர்கின்றாள். அவளுக்கு அன்பும் கரிசனையும் தேவையாக இருக்கின்றது. இருந்தும் பெற்றோர்கள் மகளுடன் அதிகம் பாசம் கொண்டாடாமல் தவிர்த்து வருவதினால் அவளின் ஆசைகள் நிறைவேறாமல் சென்றுவிடுகின்றன.

ஒருமுறை பொம்மை ஒன்றினை பாடசாலைக்கு கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. அவளும் தன்னுடைய பொம்மை ஒன்றோடு பாடசாலை செல்கின்றாள். இக் காட்சித்துண்டில் அவளது குடும்ப சூழல் தொடர்பான நிலவரம் அழகாகச் சொல்லப்படுகின்றது. பாடசாலைக்கு




## கண்ணிமை

நடந்து செல்லும் சிறுமி வழியில் பொம்மையை தவறவிட அருகிலுள்ள முள்வேலியில் சிக்கிவிடுகின்றது. முள்வேலியில் மிதிவெடி அபாயம் தொடர்பான எச்சரிக்கை பலகைகள் மாட்டப்பட்டிருக்கின்றன. அதன் சற்றுத்தள்ளி சிறிய குடிசை ஒன்று தெரிகின்றது, அங்கே பொம்மையை எடுத்துத்தர உதவிகேட்டுச் செல்கின்றாள். போனவளுக்கு அதிர்ச்சி காத்திருக்கின்றது.

பாடசாலை வரவுப்பதிவேட்டில் அவள் வரவில்லை என்று பதியப்படுகின்றது. குடிசையில் இருந்து வீடுவந்தவள் தினமும் பாடசாலை செல்லாமல் மீண்டும் மீண்டும் அந்தக் குடிசைக்கே செல்கின்றாள். தினமும் பாடசாலைக்கு வருவதுபோல் பாடசாலை உடையில் புறப்பட்டு மற்றவர்களுக்கு தெரியாமல் அந்தக்குடிசைக்கு செல்கின்றாள். இது தினமும் தொடர உஷாரான பாடசாலை ஆசிரியர்கள் ஏன் அவள் பாடசாலை வருவதில்லை என்பதனை அறிய நேரிலே வீடுதேடிச் செல்கின்றனர். பெற்றோர்களுக்கு விடயம் தெரியவர அவர்களின் வீடு அல்லோலப்படுகிறது. தினமும் பாடசாலை செல்வதுபோல் புறப்படும் மகள் எங்கே போகின்றாள் என்பது தெரியாமல் அவளின் அம்மா அதீத மனவெழுச்சியில் பரிதவிக்கின்றார். ஆசிரியர்களுடன் இணைந்து மகளை தேடிச்சென்று மகளை மீட்கின்றார் தாய். இதன் பின் என்னவாகின்றது என்பதே மீதிக்கதை.

குறும்படத்தில் எந்தவொரு இடத்திலும் சிறுமி தேடிச் சென்ற குடிசையில் யார் இருந்தார்கள், அவள் அங்கே என்ன செய்தாள் என்பது தொடர்பான எந்த விடயமும் சொல்லப்படவில்லை. பார்வையாளனே தனது புரிதலுக்கு ஏற்றவாறு அர்த்தப்படுத்திக்கொள்ள விடப்பட்டுள்ளது. இருந்தும் தவறான விடயம் ஒன்று அங்கே நிகழ்வதாகப் புரிந்துகொள்ள முடியும்.

போதிய அன்பு கிடைக்காத பிள்ளைகளே அவ்வன்பை நோக்கிச் செல்லும்போது தவறான பாதையில் சிக்கிக்கொள்கின்றார்கள் என்பதனை தெளிவுபடுத்துவதோடு அதற்கான தீர்வையும் முன்வைக்கின்றது. படம் ஆரம்பத்தில் காட்டப்படும் இயல்பான வீட்டுச்சூழல் யதார்த்தமாக ஒளிப்படம் பிடிக்கப்பட்டுள்ளது. பொம்மையின் நிறம் மாறுவதுடன் சிறுமியின் நடத்தை மாறுவதை குறியீடாக காட்சிப்படுத்துவது அட்டகாசமாக பதியப்பட்டுள்ளது. நடிகர்களின் நடிப்பு மிகுந்த இயல்பாக இருக்கின்றது. தாயாக நடித்தவரின் நடிப்பு பல இடங்களில் போதாமையோடும் இருக்கின்றது. மதீசனது இசை இன்னும் உயிர்ப்புத் தன்மையை குறும்படத்துக்கு வழங்குகின்றது. ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை பரபரப்பாக கொண்டு செல்ல திரைக்கதை பெரிதும் உதவியிருக்கின்றது.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## இரண்டு உலகம்

தொட்டவர் எனக்குச் சொந்த
சுய நினைவு ஊட்டப் பார்த்தேன்
கட்டிய வேட்டி மாறு
கரையுள கதரே நெற்றிப்
பொட்டுடன் குறிகள் முன்னைப்
பொலிவு தான் நரைத்த தாடி
மட்டுமே இன்று வேறு!
மறுமுறை அவரைப் பார்த்தேன்!
பார்த்த அக் கணமே மெல்லப்
பார்வையை எடுத்துக் கொண்டேன்
ஆர்த்தது கவிதை நெஞ்சில்
அதனையும் பதித்துக் கொண்டேன்
தேர்த்திருவிழாவில் முன்பு
தெருவிலே கண்ட கோலம்
பார்த்து நீ விறைத்தாய் போலும்
பழையவள் பிள்ளை என்றார்!
வா இனிப் பேசிப் பேசி
வயிற்றையும் கழுவ என்றார்
ஆ-பிடி இலையை என்றேன்
அருகிலே அமர்ந்து கொண்டார்
பாவம் என்பாட்டிக்கு அன்று
பண்ணிய துவச எண்ணம்...
மாவடிக் கோயில் ஐயர்
மணியம் இன்று எங்கோ ஏதோ!
என்றவர் எதை எல்லாமோ
என்முன்னே எடுத்து வைத்தார்
அன்றவர் காலை தானே
அதையெலாம் சமைத்த தென்றார்
இன்றுள நிலையில் நானே
இதை எலாம் செய்தல் வேண்டும்
சென்றனள் தங்கம்மா ஆம்
சென்றதும் நன்றே என்றார்.
வடகமும் வறையும்கீரை
வதக்கலும் தங்கம் செய்வாள்
இடி இடி என்று தங்கம்
இடித்ததூள்...நொட்டை சொல்வேன்!
கடையிலே வாங்கும் தூளால்
கறிகளில் சுவையும் இல்லை
விடுவிடு பழசை எண்ணி
வேதனைப் பட்டும் என்ன!
கண்ணிலே கண்ணீர் தேங்க
கணப்பொழுது அமைதி கொண்டார்
எண்ணிய எண்ணம் எல்லாம்
என்னையும் அசைக்கும் வேளை
தண்ணியைத் தெளித்தார் வெள்ளைச்
சாதமும் படைத்தார்-தம்பி
வெண்ணிறச் சோறுதான்,ஊர்
விளைநிலம் என்ன ஆச்சோ!
அதை எலாம் எண்ணி என்ன
அதைவிடு கறியைப் போடு
சொதிஇதில் தயிரும் உண்டு
சுவைதரும் சேர்த்துண் என்றார்!
நிதமும் நான் சைவம் நானே
நித்தியம் சமைப்பேன்..
வீட்டில் எதைஎல்லாம் சமைக்கின்றார்கள்
என்றுமே மச்ச வாடை!
இங்குநான் என்ன செய்வேன்
இனிய என் பேரன் என்று
சங்கரை அணைத்துப் பேசல்
சங்கடம் தமிழைக் கற்க
எங்குமே அனுப்பார் கேட்டால்
சங்கர் இஸ்நொட்கீன் என்பர்
சங்கரா!...என்ற வாறே
தம்இலை மடித்தார் மாஸ்டர்
மண்ணில் ஏர் பிடித்த காலம்
மணிக்கதிர் ஆர்த்த கோலம்
புண்ணிய காலம் பார்த்துப்
புதிதெடுத்து உண்ட காலம்
அண்ணைவா தம்பி வாஎன்று
அனைவரும் மகிழ்ந்த ஞாலம்
எண்ணிய மனசு...என்றே
எழுந்தனர் பந்தி ஒயும்!

கவிஞர் அம்பி
பப்புவாநியுகினி

அவுஸ்திரேலியா அக்கினி குஞ்சு இதழில் 1994 ஆம் ஆண்டு வெளிவந்தது.

சினிமா செய்தி

# திரைவிமர்சனங்கள்

# வேதாளம்



தங்கைக்காக எதையும் செய்யும் அண்ணன் இல்லை, தங்கைக்காக எவனையும் செய்யும் அண்ணன் தான் வேதாளம்.

லட்சுமி மேனனின் படிப்பிற்காக கொல்கத்தாவிற்கு தங்கையோடு வருகிறார் அஜித். லட்சுமி மேனனுக்கு ஓவியக் கல்லூரியில் சீட் கிடைக்க, அஜித்திற்கு டாக்ஸி ஓட்டுநராக வேலை கிடைக்கிறது. சாதாரண குடும்பமாக வாழ்ந்துவரும் அண்ணன் தங்கை வாழ்வில் புயல் வீச ஆரம்பிக்கிறது.

டாக்ஸி டிரைவர்கள் அனைவரிடமும் பொலிஸ் ஒரு சட்டவிரோதக் கும்பலைப் பிடிக்க உதவுமாறும், நீங்கள் இந்தக் குற்றவாளிகளைக் கண்டால் எங்களுக்குத் தகவல் கொடுங்கள் எனவும் கூற, அஜித்தும் ஆர்வத்தால் ஒரு பெரிய போதை மருந்து கும்பல் பற்றியான தகவலை பொலிஸிடம் கொடுத்துவிடுகிறார்.

பொலிஸ் கூண்டோடு போதைக் கும்பலைப் பிடிக்க, வில்லன்கள் டார்கெட் நினைத்தது போல் அஜித் மேல் விழுகிறது. ஆட்டம் ஆரம்பம். அஜித்தை வில்லன்கள் தேடி பிடித்து தூக்கிக்கொண்டு போக, நீ என்னைத் தூக்கிட்டு வந்தியா, நான் தாண்டா உன்னைத் தேடி வந்துருக்கேன் என அஜித்தின் இன்னொரு ஆக்ஷன் அவதாரம் அரங்கேறுகிறது.

அஜித் ஏன் அப்பாவியாகவும்,ஆக்ரோஷமாகவும் இருவாழ்க்கை வாழ்கிறார் என்பதற்கு மாஸ் ஃப்ளாஷ்பேக்காகவும், க்ளைமாக்ஸாகவும் விரிகிறது மீதிக் கதை..

படத்தின் இரண்டு முக்கிய கதாப்பாத்திரங்களான அஜித், லட்சுமி மேனன். இருவரும் நடிப்பில் மிரட்டுகிறார்கள்.

வெறித்தனமாக அடித்துக் கொண்டிருக்கையில் தங்கையை பார்த்த அடுத்த கணம் கீழே விழுந்து அடிவாங்குவது அடடே தருணம். எப்படி ஒரு முன்னணி நடிகை தங்கையாக நடிக்க ஒப்புக்கொண்டார் என்றால் உண்மையில் படமே லட்சுமி மேனன் தான் என்பது படம் -- பார்த்த பிறகு தான் புலப்படுகிறது.

மருமகனாக சூரி, மாமியாராக கோவை சரளா இருந்துமே காமெடி காட்சிகள் எடுபடவில்லை என்றே சொல்லலாம். நாயகியான ஸ்ருதி ஹாசனுக்கு படத்தில் சொச்ச காட்சிகளே. ஒரு நாயகியாக எத்தனையோ மொழிகளைக் கடந்து நடித்துவரும் நிலையில் தனக்கான ஸ்கோப்பை கேட்காமல் எப்படி ஸ்ருதி நடிக்க ஒப்புக்கொண்டார். இதில் பெரிய தவறாக படத்தின் இடைவேளைக்குப் பிறகு ஸ்ருதிக்கு வேறு யாரோ குரல் கொடுத்துள்ளனர்.

தம்பி ராமையா, ரத்னா காட்சிகள் சென்டிமெண்ட் மக்களுக்கு பந்தியில் வைக்கப்பட்ட இனிப்பு. எனினும் கொஞ்சம் நீளமான காட்சிகள். அதை சரி செய்திருக்கலாம். போகட்டும் பொண்ணுங்க ஸ்கூலுக்கு, காலேஜுக்கு அவங்கள நிம்மதியா போக விடுங்க" என அஜித் பேசும் இடம் சமூக அக்கறை.

உன் வாழ்க்கையில மறக்க முடியாத ரெண்டு விஷயம் ஒண்ணு உன்ன பெத்தவங்க இன்னொன்னு நான். அவங்க உனக்கு பிறப்பக் குடுத்தாங்க, நான் உனக்கு இறப்பக் குடுக்க போறவன்டா பணத்துக்காகவே பண்ணும் போது பாசத்துக்காகப் பண்ணமாட்டேனாடா என்று இப்படி படம் முழுவதும் கைத்தட்டலுக்காகவே படபட பன்ச்கள் பறக்கின்றன.

ஆலுமா டோலுமா அஜித் ஸ்பெஷல், உயிர் நதி கலக்குதே எமோஷனல் ஸ்பெஷல் எனினும் பாடல்களில் கொஞ்சம் சறுக்கலே. ஆனால் பின்னணியில் தெறிக்கவிட்டிருக்கார் அனிருத்.

ஆக்ஷன் காட்சிகளில் அனல் பறக்கும் சண்டைக் காட்சிகள், எல்லாவற்றிற்கும் மேல் இடைவேளை யாரும் எதிர்பாராத தருணமாக அஜித் மழையில் வெறியுடன் கத்துவது, சிவா வின்டச்.



சண்டைக் காட்சிகளிலும், பாடல் காட்சிகளிலும் வெற்றியின் ஒளிப்பதிவு கண்கட்டி வித்தை. எல்லாம் சரி தான் பாஸ் அந்த நீளம் சத்தியமா பொருத்துக்க முடியலை. முன் பாதி அப்படியே தொங்கி நிற்கிறது. அதைக் கொஞ்சம் செதுக்கினால் இன்னும் நன்று.

அதென்ன கும்பல் கும்பலாக பெண்களைத் தூக்கி வெளிநாட்டில் விற்பது. வேலாயுதம் முதல் வேதாளம் வரை தொடரும் அதே போரடிக்கும் வில்லன் காட்சி. ப்ளீஸ் மாத்துங்க.

மியூசிக்கை போட்டுவிட்டு வெறித்தனமாக நடனம் ஆடி சண்டைபோடுவதெல்லாம் அஜித் ரசிகர்களுக்கு அசத்தல் ட்ரீட். மொத்தத்தில் அஜித் ரசிகர்கள் பில்லா, மங்காத்தா, ஆரம்பம் என கொஞ்சம் தனியாக பார்த்தவர்கள் தங்கள் குடும்பத்தோடு பார்க்க தேர்ந்தெடுக்க வேண்டிய சென்டிமெண்ட் படம் தான் வேதாளம்.



# தூங்காவனம்

வதற்கு ஏற்ற பலமான பின்னணி இசை. படத்தில் வைரமுத்து வரிகளில் ஒரே ஒரு பாடல் மட்டுமே. அதுவும் படம் முடிந்து டைட்டில் ஓடும் போது தான்.

யூகிசேது, கிஷோர், சம்பத், ஆஷா சரத் என்று அவர்களுக்கான கதாப்பாத்திரத்தில் பக்காவான நடிப்பை நடித்திருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரியாக வரும் த்ரிஷாவிற்கு பேசப்படும் படங்களின் வரிசையில் இந்தப் படமும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

சராசரி பொலிஸ்கார கமலின் ஆசை மகன் கடத்தப்படுகிறான், தேடிச்செல்லும் கமல், மாயமாகும் போதைப்பொருள், கமல் மேல் சந்தேகப்பட்டு பின்தொடரும் த்ரிஷா, வில்லனாக மாஸ் காட்டும் பிரகாஷ் ராஜ் இவர்களின் ஒரு நாள் இரவில் நடக்கும் த்ரில் கலந்த ஆக்ஷன் கதையே தூங்காவனம்.

2011ல் பிரெஞ்சு மொழியில் 89 நிமிடம் ஓடக்கூடிய ஆக்ஷன் படமான "ஸ்லீப்லஸ் நைட் என்கிற படமும் தூங்காவனமும் ஒரே சிறுகதையிலிருந்து படமாக்கப்பட்டது. அந்த பிரெஞ்ச் சிறுகதையின் உரிமையை கமல் வாங்கியுள்ளார். அதை தமிழுக்கு ஏற்றவாறு 127 நிமிடமாக்கி சுவாரஸ்யத்தையும் விறுவிறுப்பையும் கலந்து தந்திருக்கிறார் இயக்குநர் ராஜேஷ்.

ஆஷா சரத்திடம் விவாகரத்து பெற்று மகனோடு இருக்கும் நார்காட்டிக்ஸ் அதிகாரி கமல்ஹாசன். பணத்திற்கு ஆசைப்பட்டு விலைமதிப்புள்ள போதைப்பொருளை யூகிசேதுவுடன் சேர்ந்து மறைத்துவைக்கிறார் கமல். அதனால் கமலின் மகனை கடத்திச் சென்று மிரட்டுகிறார் பிரகாஷ்ராஜ். போதைப்பொருளைக் கொடுத்து மகனை காப்பாற்றினாரா கமல் என்பதே க்ளைமேக்ஸ்.

காலையில் போதைப் பொருளைக் கைப்பற்றுவதில் முதல் காட்சித் தொடங்கி ஒரு நாள் இரவு முழுவதும் நடக்கும் சம்பவமே கதை. வேகமாக நகரும் முதல் பாதி, கதைக்கேற்ற மித வேகத்தில் இரண்டாம் பாதி என்று கச்சிதமாக படத்தொகுப்பை தந்திருக்கிறார் ஷான் முகமது. படத்தின் விருவிருப்பை கூட்டு

என் பையன் சட்டையில சின்ன கறை பட்டாலும் உன்ன செதச்சிடுவேன்" என்று சொல்லவுமே திரையரங்கே அதிர்கிறது. மகன் மேல் அதீத பாசம் வைத்திருக்கும் கமல், மகனிடம் பேசவேண்டும் என்று தொலைபேசியில் மட்டும் வந்துபோகும் ஆஷா சரத் காட்சிகள் கச்சிதம். சமையல் அறையில் கமலுடன் த்ரிஷாவின் சண்டைக்காட்சிகளில், கமலுக்கு இணையாக ஸ்கோர் செய்திருக்கிறார் த்ரிஷா. சண்டைக்குப் பிறகு என் மகனைக் காப்பாத்தணும் என்று கமல் கண்ணீர் விடும் காட்சிகள் க்ளாஸ் ரகம். வில்லனாக பிரகாஷ்ராஜ் டெரராக மட்டுமில்லாமல் கவுண்டர் காமெடியிலும், நடிப்பிலும் கைதட்டலை பெறுகிறார். படம் முழுவதும் ஒரு க்ளப்பிற்குள்ளேயே நடக்கிறது. பார்த்த காட்சிகளையே மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டிய துரதிர்ஷ்டமான நிலை ரசிகர்களுக்கு நேர்ந்தது மட்டுமே கவலை. எதற்கெடுத்தாலும் சமையல் அறைக்குள் ஓடி வந்து ஒழிந்துகொள்கிறார் கமல். வேற இடமே இல்லையா பாஸ்!

கமல் படமென்றால் முத்த காட்சி நிச்சயம் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் ரசிகர்களுக்காக, இந்தப் படத்திலும் முத்தக் காட்சியை புகுத்தியிருக்கிறார் இயக்குநர். ஆனால் யார் அந்த நாயகி, எதற்கு அந்த காட்சி என்பது மட்டும் ட்விஸ்ட். படம் பார்த்து தெரிஞ்சிக்கோங்க பாஸ். படத்தில் ஒரே ஒரு பாடல் மட்டுமே, காதலுக்கென்று தனிக் காட்சிகள் இல்லை, தனியாக காமெடி டிராக் என்றில்லாமல் படத்தோடு நகரும் காமெடிகள் என்று தமிழ் சினிமாவின் அடுத்தக் கட்ட நகர்விற்கு தேவையான படங்களில் தூங்காவனமும் ஒன்று.

# அதிரடி நாயகன் டி வில்லியர்ஸ்



ஆபிரகாம் பெஞ்சமின் டி வில்லியர்ஸ்... உலகம் முழுக்க கிரிக்கெட் மைதானங்களில் சிக்ஸர், பௌண்டரிகளால் அதிர் வேட்டுகள் நிகழ்த்தும் அதிரடி நாயகன். ஒருநாள் கிரிக்கெட்டின் நம்பர் வன் துடுப்பாட்ட வீரா. சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்து உலகம் முழுக்க ரசிகர்கள், கிரிக்கெட் விமர்சகர்கள் என எல்லோரது லைக்ஸையும் அள்ளியிருக்கிறார் டி வில்லியர்ஸ். 16 பந்துகளில் 50 ஓட்டங்கள, 31 பந்துகளில் சதம், 64 பந்துகளில் 150 ஓட்டங்கள் என அனைத்து வேகமான சாதனைச் சதங்களும் இவர் வசம்.

2004 ஆம் ஆண்டு இங்கிலாநதுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 21 வயது இளைஞனாக தென்னாபிரிக்க அணிக்குள் நுழைந்தார் ஏ.பி.டி வில்லியர்ஸ். எல்லா சாதனை மன்னரகளையும்போல இவரும் தோல்வியுடன் தொடங்கியவர்தான். முதல் சதம் அடிக்க இரண்டு ஆண்டுகளுக்கும் மேலானது. 2007 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிதான் டி வில்லியர்ஸ் கிரிக்கெட் வாழ்க்கையில் திருப்புமுனை. ஓப்பனிங் துடுப்பாட்ட வீரராக களமிறங்கியவர், லீக் போட்டிகளில் நான்கு முறை டக் அவுட் ஆனார். ஆனால், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஃபார்முக்கு வந்தார். 92 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவசரப்பட்டு ஓடி ஓட்டங்கள் அவுட் ஆனார். முதல் சதம் அடிக்கும் வாய்ப்பு ஜஸ்ட் லைக் தட் மிஸ்ஸானது. ஆனால், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான அடுத்த போட்டியில் 12 பௌண்டரி, 5 சிக்ஸர் விளாசி 146 ஓட்டங்கள் குவித்து தனது முதல் சதத்தை அடித்தார். அதன் பிறகு கடந்த எட்டு ஆண்டுகளில் ஒருநாள் போட்டிகளில் 23 சதங்கள் விளாசி, தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் கிரிஸ்டன், கிப்ஸ், காலிஸ், ஆம்லா என அனைவரது சாதனைகளையும் முறியடித்து முதல் இடத்தில் இருக்கிறார்.

ஒருநாள் போட்டிகளில் அடிக்கப்பட்ட அனைத்து சதங்களிலுமே ஸ்ட்ரைக் ரேட் 100 இற்கும் மேல். தற்போது நடந்து முடிந்த இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டிகளில் மட்டும் 20 சிக்ஸர்கள் விளாசி, ஓர் ஆண்டில் 58 சிக்ஸர்களுக்கும் மேல் அடித்தவர் என்ற உலக சாதனை படைத்திருக்கிறார். இந்த ஆண்டு இன்னும் முடியவில்லை. இன்னும் எத்தனை சிக்ஸர்கள் பறக்கப்போகின்றனவோ!

“டி வில்லியர்ஸ் கிரிக்கெட் மட்டும் அல்ல, தென்னாபிரிக்காவுக்காக டென்னிஸ் விளையாடினார், ரக்பி விளையாடினார் . பள்ளிப்பருவத்தில் நீச்சல் போட்டிகளில் ஆறு சாதனைகள் படைத்திருக்கிறார். அறிவியல் ஆய்வுக்காக நெல்சன் மண்டேலா விருது வாங்கியிருக்கிறார்' என அவரைப் பற்றிய ஒரு வாட்ஸ் அப் தகவல் உலகக் கோப்பையின் போது உலவியது. பலர் இதை வாட்ஸ் அப்பில் உலவும் பல “டுகால்ட்டி' செய்திகள்போல “டூப்' என்று தான் நினைத்தனர். ஆனால், அந்த வாட்ஸ்அப் செய்தி நூற்றுக்கு நூறு உண்மை.

‘Afrikaanse Hoer Seun skool’ என்னும் ஆபிரிக்காவின் மிகப் பிரபலமான ஸ்போர்ட்ஸ் பள்ளியில் 13 வயதில் சேர்க்கப்பட்டார். பள்ளியில் எந்த விளையாட்டாக இருந்தாலும் அதில் சிறப்பாக ஆடி ஆர்வம் காட்ட, எல்லா விளையாட்டுகளிலும் அவரைச் சேர்த்தனர். கோல்ஃப், ரக்பி, டென்னிஸ், ஸ்விம்மிங் என எல்லாமே விளையாடினார். கிரிக்கெட்டில் சதங்களும், அரை சதங்களுமாக அடித்து ஆடி... அடித்து ஆடி, இயல்பாக ஒரு கிரிக்கெட் வீரராக மாறினார் டி வில்லியர்ஸ்.

பந்தை பௌண்டரி நோக்கி அடிப்பார் அல்லது ஓட்டங்கள எடுக்க ஓடுவார். இந்த இரண்டு வகையில்தான் அவரை அவுட் செய்ய முடியும். கிளீன் போல்டு செய்ய வாய்ப்பே இல்லை. பௌலர்களையும் பீல்டர்களையும் டி வில்லியர்ஸ் அளவுக்கு குழப்பியவர்கள் யாரும் இல்லை. அவருடைய பாடிலாங்வேஜைப் பார்த்து டிரைவ் ஷாட் அடிக்கப்போகிறார் என பீல்டர்கள் நினைத்தால், அது ரிவர்ஸ் ஸ்வீப் ஷாட்டாக மாறும். அதனால்தான் பௌலர்கள் அவருக்கு பந்து வீசத் திணறுகிறார்கள்.

“என் அப்பா, அம்மா, இரண்டு அண்ணன்கள் என வீட்டில் எல்லோருமே விளையாட்டு வீரர்கள். 10 வயதில் எனக்கும் விளையாட்டு ஆர்வம் தொற்றியது. அண்ணன்கள் மற்றும் அவரது நண்பர்களுடன் நானும் விளையாடுவேன். ஆனால், எனக்கு துடுப்பாடட சான்ஸ் கடைசியில்தான் கொடுப்பார்கள். அதுவரை என்னை தண்ணீர் போத்தலகள் கொண்டுவரப் பயன்படுத்தி வெறுப் பேற்றுவார்கள். அதைக் கண்டு கொள்ளாமல் கடைசி துடுப்பாட்ட வீரராககளம் இறங்குவேன். என்னை வெறுப்பேற்றியவர்களை வெறுப்பேற்ற வேண்டும் என்பதற்காகவே ட்ரிக் ஷாட் ஆடக் கற்றுக்கொண்டேன்' என செம ஜாலியாக தன் கிரிக்கெட் வரலாறு சொல்கிறார் ஏபிடி.

டான் பிராட்மேன், விவியன ரிச்சர்ட்ஸ், சச்சின் டெண்டுல்கர் வரிசையில் கிரிக்கெட் உலகின் இந்தத் தலைமுறை நாயகன் ஏபிடி வில்லியர்ஸ்!

## அதிரடியில் கலக்கும் வோனர்

நியூசிலாந்துக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலிய தொடக்க வீரர் டேவிட் வோனர் இரட்டை செஞ்சுரி அடித்து இந்த டெஸ்டின் மூலம் சில சாதனைகளை படைத்துள்ளார்.


**அதன் விபரம் வருமாறு,**

➚ 29 வயதான வோனர் டெஸ்டில் 4 ஆயிரம் ஓட்டங்களை (45 டெஸ்டில் 4,172 ஓட்டங்கள்) கடந்தார். இந்த இலக்கை வேகமாக எட்டிய 4 ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற சிறப்பை பெற்றார்.

➚ முதலாவது டெஸ்டில் 163 ஓட்டங்கள், 116 ஓட்டங்கள் வீதம் எடுத்த வோனர் இந்த டெஸ்டிலும் சதத்தை சுவைத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு அவர் இவ்வாறு தொடர்ச்சியாக 3 சதங்கள் அடித்து இருக்கிறார். இரண்டு முறை தொடர்ந்து 3 சதங்கள் அடித்த 2 ஆவது தொடக்க ஆட்டக்காரர் வோனர் ஆவார். இந்தியாவின் முன்னாள் தொடக்க வீரர் சுனில் கவாஸ்கர் இச்சாதனையை முன்பு செய்துள்ளார்.

➚ ஒரே நாளில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களின் பட்டியலில் வோனர் (244ஓட்டங்கள்) 8 ஆவது இடத்தில் உள்ளார்.



facebook

# நீ வாழும் ஒவ்வொரு நொடி மட்டுமே உன்னுடையது



ஒரு கிராமத்தில் வசித்து வந்த ஒரு மனிதன் இறந்து விட்டான். அவன் அதை உணரும் போது கையில் ஒரு பெட்டியுடன் கடவுள் அவன் அருகில் வந்தார்.

கடவுள்: வா மகனே... நாம் கிளம்புவதற்கான நேரம் நெருங்கி விட்டது...

ஆச்சரியத்துடன் மனிதன் இப்பவேவா? இவ்வளவு சீக்கிரமாகவா? என்னுடைய திட்டங்கள் என்ன ஆவது?

மன்னித்துவிடு மகனே... உன்னைக் கொண்டு செல்வதற்கான நேரம் இது... அந்தப் பெட்டியில் என்ன உள்ளது?

உன்னுடைய உடைமைகள்... என்னுடைய உடைமைகளா! அதாவது என்னுடைய பொருட்கள், உடைகள், பணம்...

இவை அனைத்தும் உன்னுடையது அல்ல அவை பூமியில் நீ வாழ்வதற்கானது...

என்னுடைய நினைவுகளா? அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது... அவை காலத்தின் கோலம்....

என்னுடைய திறமைகளா? அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது அவை சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்டது.

அப்படியென்றால் என்னுடைய குடும்பமும் நண்பர்களுமா? மன்னிக்கவும். குடும்பமும் நண்பர்களும் நீ வாழ்வதற்கான வழி.

அப்படி என்றால் என் மனைவி மற்றும் மக்கள்? உன் மனைவியும் மக்களும் உனக்கு சொந்தமானது கிடையாது. அவர்கள் உன் இதயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்.

என் உடல்? அதுவும் உன்னுடையது கிடையாது. உடலும் குப்பையும் ஒன்று.

என் ஆன்மா? இல்லை. அது என்னுடையது.

மிகுந்த பயத்துடன் மனிதன் கடவுளிடமிருந்து அந்தப் பெட்டியை வாங்கி திறந்தவன் அதிர்ச்சிக்குள்ளாகிறான். காலி பெட்டியைக் கண்டு கண்ணில் நீர வழிய கடவுளிடம் என்னுடையது என்று எதுவும் இல்லையா? எனக் கேட்க,

கடவுள் சொல்கிறார், அது தான் உண்மை. நீ வாழும் ஒவ்வொரு நொடி மட்டுமே உன்னுடையது. வாழ்க்கை என்பது நீ கடக்கும் ஒரு நொடிதான்.

ஒவ்வொரு நொடியையும் சந்தோஷமாக வாழ்வதுடன் நல்ல செயல்களை மட்டும் செய். எல்லாமே உன்னுடையது என்று நீநினைக்காதே.

ஒவ்வொரு நொடியும் வாழ் உன்னுடைய வாழ்க்கையை வாழ். மகிழ்ச்சியாக வாழ மறக்காதே அது மட்டுமே நிரந்தரம்.

உன் இறுதிக் காலத்தில் நீ எதையும் உன்னுடன் கொண்டு போக முடியாது.

உங்களுக்கும் நல்லதாய் , எனக்கும் நல்லதாய் நினைப்பதும், செய்வதும் நித்தியகடன்.

# உலக உயிர் வணக்கம்

கார்மேகம் சூழ்ந்து , மழை நீர் தந்து, இந்த உலக உயிர்களை காக்கும் வான மண்டலம் எந்த மாசும் இல்லாமல் வாழ்க!. இந்த பூமியில் மனிதர்களாக பிறந்து, வாழ்ந்து, என்னை உருவாக்கி, உயிர்தந்து, வாழ்க்கை தந்து மறைந்து,

வான் உலகில் பிறவியில்லாப் பெருவாழ்வு பெற்று , மிகப் பெரிய தவத் தன்மை பெற்ற என் தாய் , தந்தை, வம்சாவளி முன்னோர்கள் வாழ்க!.

எனக்கு பூரண ஞானம் அறிய செய்து, உலகினையும், உலக மக்களையும் , உலக சமுதாயத்தை புரிய செய்து, இந்த பிறவியில் நான் யார்? என்பதை அறிய செய்து உலகத்தையும், இந்த சமுதாய விதிகளை அறிய செய்து, நன்மை, தீமை, உண்மை, பொய், என அனைத்தையும்,

பகுத்து அறியும் அறிவான ஆறாவது அறிவை" அறியும் படி செய்து , இந்தப் பிறவியில் எனக்கு எது நல்லது ?. எது கெட்டது என்ற விபரங்களை போதித்து, என்னையும் தங்கள் சீடனாக ஏற்று பூரண ஞானத்தை போதித்து வரும் என் குருமார்கள் வாழ்க !.

இந்த உலகில் பிறந்து வாழும் மனிதர்கள், பசு முதலான அனைத்து ஜீவ ராசிகளும் வாழ்க! .

இந்த உலகில் பிறந்து தேசத்திற்கும் , மக்களுக்கும் தொண்டு செய்து வாழ்ந்து அமரத்துவம் பெற்று , இன்றும் தான் செய்த நற்செயல்களால், மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டு இருக்கும் ஞானிகள் , மகான்கள் , தலைவர்கள் , பெரியோர்கள் நாமம் வாழ்க!.

உலக மக்களுக்கு உண்மை ஞானம் , உலகைப்பற்றிய விழிப்புணர்வு போதித்த சித்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும் வாழ்க !.

நான் , நீ , ஜாதி ,மதம் , என பேதம் பிரிவினை பாராமல் உலக உயிர்களை , மனிதர்களை , ஜீவன்களை ஒன்று போல் நேசித்து வாழும் ஞான பெரியார்கள் , வழிகாட்டிகள் வாழ்க! வாழ்க! வாழ்க!.

உங்களுக்கும் நல்லதாய், எனக்கும் நல்லதாய் நினைப்பதும், செய்வதும் நித்தியகடன்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 546

Search for people, places and things Nagendram Home

குமார்




ஜக்ஷன்




கிருஸ்ண பிரபு




செல்லத்துரை சதீபன்




சிவஸ்ரீ ஜீவா குருக்கள்




பிரசாத் பெரேரா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# நீரிழிவு

நீரிழிவுநோய் என்பது ஒருவகை தொற்றாநோய் ஆகும். இதன் போது குருதியில் சீனியின் அளவு அதிகரித்துக் காணப்படும்.

இது இன்சுலின் எனும் ஓமோன் பற்றாக்குறையினாலோஅல்லது இன்சுலின் எனும் ஓமோனை உடற்கலங்கள் எதிர்ப்பதனாலோ உண்டாகும். இந்தநோயை பின்வரும் முறைகளினால் கட்டுப் படுத்தலாம்.

1. மருந்துக் கட்டுப்பாடு
2. உணவுக்கட்டுப்பாடு
3. உடற்பயிற்சி

இம் மூன்றுமுறையினாலும் நீரிழிவு நோயை திறமையான முறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

## நீரிழிவுநோய்க்கானஉணவுக்கட்டுப்பாடு (சாதாரணநிறைஉடையவர்களுக்கு)

- பயறு,கௌபி, உழுந்து முதலான பருப்பு வகைகளை உட்கொள்வதால் உங்களது குருதியில் உள்ளசீனியின் அளவை சாதாரண நிலையில் பேணலாம்.
- அதிகமீனை உட்கொள்ளலாம். அதிகபடியாக மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி உட்கொள்வதைத் தவிர்க்கவும். அதற்கு பதிலாக தோல் நீக்கப்பட்டகோழி இறைச்சியை உட்கொள்ளலாம்.
- எளியவெல்லம் உண்ணலாகாது. எனவே கேக், புடிங், வட்டிலப்பம், இனிப்புப்பண்டங்கள் அத்துடன் சீனி, தேன், சர்க்கரை, பேரீச்சம்பழம், பிளம்ஸ் கலந்து மேற்கொள்ளப்பட்ட உணவு வகைகளைத் தவிர்த்தல் வேண்டும்.
- சிவப்பரிசிமாவினால் தயாரிக்கப்பட்டபாண் மற்றும் உணவு வகைகள், தீட்டாத அரிசிமாவினால் தயாரிக்கப்பட்ட பாண் மற்றும் உணவு வகைகள், ஆட்டாமாவினால் தயாரிக்கப்பட்ட உணவுவகைகளை உட்கொள்ளலாம்.
- வெள்ளை அரிசிமாவினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், கோதுமைமாவினால் தயாரிக்கப்பட்ட உணவுவகைகளைத் தவிர்க்கவும்.
- ஒருவாரத்தில் நீங்கள் ஒன்று தொடக்கம் மூன்றுவரையான முழுமையான முட்டையை உட்கொள்ளலாம். மேலதிகமாயின் முட்டை வெண் கருவைமட்டும் உடகொள்ளலாம்.
- சோயா அல்லது சோயாவினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளைஉண்ணலாம். இது உங்களது குருதியில் உள்ளசீனியின் அளவை சாதாரணநிலையில் பேணஉதவும்.
- அதிகபடியான கொழுப்புச்சத்து அடங்கிய உணவு வகைகளைத் தவிர்க்கவும். எனவே கொழுப்பு நீக்கப்பட்ட அல்லது கொழுப்பற்ற பால்மாவை உபயோகிக்கவும்.

மோர் குடிப்பதுமிகவும் நல்லது. ஆனால் கொழுப்புள்ளபால்மா, ஆட்டுப்பால், பசுப்பால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எடுத்துக் கொள்ளலாம்

- அதிகம் பொரித்த உணவுகள் (கட்லட், வடை, பற்றீஸ்) தவிர்க்கப்படவேண்டும்.
- இரண்டாவது அல்லது மூன்றாவது தேங்காய்ப் பாலை உபயோகித்து உணவு வகைகளைத் தயாரித்தல் சிறந்தது.

**(முட்டுக்காய் தேங்காய்ப்பாலை உபயோகிக்கவும்)**

## தவிர்க்கப்படவேண்டியஉணவுகள்

- சீனி, சர்க்கரை, தேன், ஜாம்,ஜெலி, இனிப்புப் பண்டங்கள், சொக்லட், புடிங், ஐஸ்கிறீம், வட்டிலப்பம், கேக், மாம்பழம், பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம் பிளம்ஸ், பலாப்பழம்
- சீனிசேர்க்கப்பட்டு செயற்கையாக தயாரிக்கப்படட்டபழரசபானங்கள்

## குறைக்கப்படவேண்டிய உணவு வகைகள்

- பட்டர், சீஸ், எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகள்.
- பன்றி, ஆடு, மாடு போன்றவற்றின் இறைச்சி, ஈரல், மூளை.
- பதப்படுத்திய இறைச்சி, சொசேஜஸ், உப்பிடப்பட்டபன்றி இறைச்சி,பன்றியின் பதனிடப்பட்ட தொடை இறைச்சி **(meat balls)**
- அதிக உப்புகலந்தஉணவுகள் (உப்பு சேர்ந்தபிஸ்கட், தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகள், ஊறுகாய், சிப்ஸ், உப்புகலந்த கச்சான், மரமுந்திரிகை)

## போதிய அளவில் உட்கொள்ள வேண்டிய உணவுகள்

- பயறு, உழுந்து, கௌபி முதலான பருப்பு வகைகள்.
- கொழுப்பற்றபால், கொழுப்பற்றபால் கலந்த உணவுகள் (சீனி அற்ற யோகட்)
- மீன்,தோல் நீக்கியகோழி இறைச்சி
- மரக்கறி வகைகள்

**அவரை இனம். வெள்ளரிக்காய், பச்சை இலை காய்கறி,**

பயற்றங்காய், பொன்னாங் காணி, லீக்ஸ், சிறகவரை, வல்லாரை, வெண்டிக்காய், கோவா, ஈரப்பலாக்காய், புடலங்காய்

- எடுக்கவேண்டியபழங்கள்

**வாழைப்பழம் (இதரை, கப்பல் சிறந்தது) அப்பிள், விளாம்பழம், கொய்யாப்பழம், அன்னாசி)**

- உருளைக்கிழங்கு, சீனவத்தாளங்கிழங்கு. பூசணிக்காய்.

## பொதுவான தகவல்கள்

- குருதியில் சீனியின் அளவு தேவையற்ற விதமாகக் குறையுமாயின் மயக்கம், நடுக்கம் அதிகமாக வியர்த்தல் போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

இந்நேரத்தில் இரண்டு தேக்கரண்டி கரைத்த சீனி அல்லது 2 தேக்கரண்டி குளுக்கோஸ் அல்லது 1 கப் பழரசப்பானம் எடுக்கவும்.

- இந்நிலை அடிக்கடி நிகழுமாயின் வைத்தியரின் ஆலோசனையை உடனடியாகப் பெறவும்.
- நீங்கள் சிகரட் புகைப்பவராயின் முற்றாக அதைநிறுத்தவும்.
- நீங்கள் அதிக உடற்பருமன் உடையவராயின் தரப்பட்ட தகவல்களின் படி உடல் நிறையை குறைத்து இலட்சியநிறையைப் பெறவும். இது பின்வரும் நோய்ச்சிக்ககல்களைக் குறைக்கும்.
- தினமும் மிதமானஅளவில் உடற் பயிற்சி செய்யப் பழகவும்.
- சலரோக நோயாளிகள் fasting blood sugar (fbs)-110 mg/dl இற்கு மேற்படாமலும்

**post prandial blood sugar (ppbs)-140/dl இற்குமேற்படாமலும் பேணவேண்டும்.**

- 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது குருதியிலுள்ள கொலஸ்ரோல் அளவிற்கேற்ப கொலஸ்ரோல் குறைக்கும் மாத்திரைகளை **(statins)** எடுத்தல் வேண்டும்.

## கடந்தவார கேள்விக்கான உங்கள் பதில்கள்

மழைநீரை சேகரித்து வருடம் முழுவதும் குடிநீராக பாவிப்போமாக இருந்தால் பலநோய்களிலிருந்து எம்மை தற்காத்துக் கொள்வதுடன் ஆரோக்கியமாகவும் வாழமுடியும். இருந்தபொழுதும் இதனைக் கடைப்பிடிப்பதற்கு மக்களிடையே ஆர்வம் குறைவாக இருந்துவருகிறது. இதற்குகாரணம்

A. மழைநீர் ஆரோக்கியமானது என்பது தெரியாது என்பதற்கு12%ஆனவர்களும்,
B. மழைநீரை எப்படி சேகரித்து பாதுகாப்பது என்பது தெரியாது என்பதற்கு50%மானவர்களும்,
C. மழைநீர் சேகரிப்பு பொறிமுறையை ஏற்படுத்திக் கொள்ளஆரம்பச் செலவாக 40000/= செலவிட்டுக் கொள்வது கடினமாக இருக்கிறது என்பதற்கு 12 % மானவர்களும்,
D. வேறுகாரணங்கள் (குறிப்பிடவும்) என்பதற்கு 26% மானவர்களும் கருத்து தெரிவித்திருந்தார்கள்

**மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.**